


விலை ரூபா 80
பக்கங்கள் - XII + 12 = 24
05.01.2025 - ஞாயிற்றுக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 - இதழ் : 13 - குரோதி வருடம் மார்கழி மாதம் 21 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 05




# அமெரிக்காவில் பசிலுக்கு பாரிய சொத்துகள்

## விசாரணை நடத்தினால் தகவல்கள் வழங்கத் தயார்



**சிஐடியில் விமல் வீரவங்ச வாக்கு மூலம்**

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு அமெரிக்காவில் பாரிய அளவிலான சொத்துகள் உள்ளன. அவை தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை ஆரம்பிக்குமாக இருந்தால் மேலும் தகவல்களை வழங்க தயாராக இருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

அமெரிக்காவில் உள்ள பசில் ராஜபக்சவின் சொத்துகள் குறித்து கடந்த காலத்தில் விமல்வீரவங்ச வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு வெள்ளிக்கிழமை அவரிடம் வாக்குமூலமொன்றை பெற்றிருந்தது. வாக்குமூலத்தை அளித்தப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துவெளியிட்ட அவர், பசில் ராஜபக்சவுக்கு அமெரிக்காவில் இருக்கும் சொத்துகள் தொடர்பில் நான் வெளி யிட்டிருந்த கருத்துகள் குறித்து வாக்கு மூலமொன்றை பெறவேண்டுமென குற்றப்புலனாய் பிரிவு அழைத்திருந்தது. என்னிடம் உள்ள தகவல்களை அவர்களிடம் வழங்கியுள்ளேன்.

அமெரிக்காவில் எந்தவொரு பணியையும் செய்யாத பசில் ராஜபக்சவுக்கு எவ்வாறு அங்கு பாரிய அளவிலான சொத்துக்கள் இருக்க முடியும். அவரது மகன் மற்றும் உறவினர்கள் சிலரது பெயரிலும் சொத்துகள் உள்ளன. இந்த அரசாங்கம் உண்மையான ஊழல், மோசடியாளர்கள் குறித்து விசாரணைகள்செய்வ தாக எமக்கு தெரியவில்லை. தற்போது பசில் ராஜபக்சவின் சொத்துக்கள் தொடர்பில் தகவல்களை பெற்றுள்ளனர்.

**திருமலையில் ஆர்ப்பாட்டம்**





படம்: கீதபொன்கலன்

திருகோணமலை, முத்துநகர் பிரதேச வயற்காணிகளை இந்திய சூரிய மின்சக்தி திட்டத்திற்கு வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச விவசாயிகள், பொதுமக்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...

# செங்கம்பள வரவேற்பளிக்க தயாராகும் பெய்ஜிங்

## கொழும்பு மீது புதுடில்லி கழுகுப்பார்வை

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இம்மாத நடுப்பகுதியில் சீனாவுக்கு மேற்கொள்ளவுள்ள உத்தியோபூர்வ பயணம் மற்றும் அது தொடர்பில் வெளியாகும் செய்திகள் குறித்து புதுடில்லி தீவிர அவதானம் செலுத்தியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறிய முடிகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட் டதோ அதேபோன்று

02 →

# புதிய அரசியலமைப்பை ஆதரிக்க தமிழரசுக்கட்சி அரசுக்கு நிபந்தனை

(கனூஷியா புஷ்பகுமார்)



தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றினால் மாத்திரமே புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான பூரண ஆதரவை வழங்க முடியும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

02 →

# துபாய்க்கு பணிப்பெண்ணாக சென்றவர் ஓமானில் தற்கொலை

## ஹம்பாந்தோட்டையில் சமுர்த்தி உத்தியோகத்தர் இரு சகோதாரிகளை ஏமாற்றியதாக பெற்றோர் முறைப்பாடு

( ஆர்.மனோசங்கர் )



பணிப்பெண்ணாக வெளிநாடு சென்ற நிலையில், உயிரிழந்த தங்களது இளைய மகளின் உடலை கொண்டுவரவும், உயிருக்குபோராடும் மூத்த மகளையும் நாட்டிற்கு அழைத்துவரவும் உதவுமாறு அவர்களின் பெற்றோர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தின் சுசி கிராமத்தை சேர்ந்த பெற்றோரே இவ்வாறு கோரிக்கைவிடுத்துள்ளனர்.இவர்களின் இரு மகள்கள் வெளிநாட்டிற்கு பணிப்பெண்ணாகச் சென்ற நிலையில் அவர்களில் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் உள்ள

02 →

# பயண எச்சரிக்கையை புதுப்பித்தது பிரிட்டன்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இலங்கையில் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் பயங்கரவாத அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய சாத்தியம் இருப்பதாக பிரிட்டன் பயணிகளுக்கு இங்கிலாந்து வெளியுறவு, கொமன்வெல்த் மற்றும் அபிவிருத்தி அலுவலகம் (FCDO) கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. பிரபலமான சுற்றுலா தலங்களை பயங்கரவாத

02 →

**திலித் ஜயவீரவின் பத்திரிகைகள் விசமப் பிரசாரம்**

# 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தை களங்கப்படுத்தினால் சட்டம் பாயும்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்காதிட்டத்தின் மீது திட்டமிட்டு சேறு பூசும் நடவடிக்கைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவுக்குச் சொந்தமான பத்திரிகையொன்று ஈடுபட்டுள்ளதாகவும் இந்தப் பத்திரிகைக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்க அரசாங்கம் தயாராகியுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகச்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் செயற்படுத்தப்பட்டால் பாதையில் பலாக்காய்விற்கமுடியாது, பாதையில் இலைக்கஞ்சி விற்றவருக்கு அத்துருகிரிய பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என திலித் ஜயவீரவுக்குச் சொந்தமான பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

02 →

## ஐ.தே.க. முக்கிய பொறுப்பில் தலதா

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள


02 →










# மாத்தறை சிறையில் மற்றுமொரு கைதி உயிரிழப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)

மாத்தறை சிறைச்சாலையில் கட்டிடம் மீது மரக்கிளை விழுந்ததில் படுகாயமடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 43 வயதுடைய தெவுந்தர

02 →

# வியாழேந்திரனின் வாகன சாரதி கைது

( கனகராசா சரவணன் )

முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழே ந்திரனின் வாகனச் சாரதி, கொலைக் குற்றத்தின் சந்தேக நபராக சிஐடியினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சரின் மட்டக்களப்பு வீட்டுக்கு முன்னால் கடந்த 2021 இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தின் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதில் அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதவான்

02 →

# பாலியல் துஷ்பிரயோகம்; ஆஸியில் இலங்கை மருத்துவருக்கு சிறை

( ஆர்.மனோசங்கர் )

அவுஸ்திரேலியாவில் சிறுவர்களை பா லியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததற்காக இலங்கையைச் சேர்ந்த வைத்தியர் ஒருவருக்கு 10 ஆண்டுகள் மற்றும் 10மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 52 வயதான தோல் மருத்துவரான பிரதீப் திசாநாயக்க என்பவருக்கே இவ்வாறு சிறைத்

02 →

# மட்டக்களப்பில் காணியை அடாத்தாக பிடிக்கவில்லை

**த.ம.வி. புலிகள் கட்சி விளக்கம்**



( கல்லடி, வெல்லாவெளி நிருபர்கள் )

மட்டக்களப்பு, திராய்மடுவில் அரசியல் கலாசார தலைமைத்துவ மத்திய நிலையத்திற்கான காணித்திட்ட முன்மொழிவுகள் கொடுக்கப்பட்டு முறையாகவே பெறப்பட்டு இருக்கிறது என தமிழ் மக்கள்விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மகாண சபை உறுப்பினருமான

02 →

# “சிறைக் கைதிகளை விலங்குகள் போல் நடத்த வேண்டாம்”

(கனூஷியா புஷ்பகுமார்)



“சிறைக் கைதிகளும் மனிதர்களே“ என்ற வாசகத்தை நினைவு கூர்ந்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, கைதிகளை மிருகங்களைப் போன்று நடத்த வேண்டாம் என சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். நீண்ட இரும்புச்

02 →

# மியன்மார் அகதிகளை நாடுகடத்த ஆலோசனை

## - அமைச்சர் ஆனந்த விஜேபால

( ஆர்.மனோசங்கர் )



சமீபத்தில் முல்லைத்தீவுக்குவந்த ரோஹிங்கியா அகதிகளை சட்ட நடைமுறைகளை பின்பற்றி நாடு கடத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய

02 →

## துபாய்க்கு...

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் தலைமையீடினால் இவர்கள் இருவரும் ஓமானுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகின்றது.இதில் 22 வயதான யுவதி ஓமானில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் உயிரிழந்த யுவதியின் 24 வயதான மூத்த சகோதரி துபாயில் பணிபுரிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது, வெளிநாட்டில் பணிபுரியும் இந்த இரண்டு யுவதிகளும் கடுமையாக துன்புறுத்தப்பட்டதாகவும், ஊதியம் வழங்காமல் தனித் தனி வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.இரு யுவதிகளும் இலங்கையில் உள்ள தங்கள் பெற்றோரிடம் நடந்த சம்பவத்தை கூறி, தங்களை மீட்குமாறு கேட்டுக் கொண்டனர். அதன்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைப்பாடு செய்ய அவர்களது பெற்றோர் சென்றிருந்த போதிலும், முறைப்பாட்டை ஏற்க பணியகம் மறுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

மகள்களை நாட்டிற்கு அழைத்து வருவதற்கு சுமார் எட்டு இலட்சம் வரை செலவாகும் என பணியகத்தின் அதிகாரி ஒருவர் கூறியதாக பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர். பின்னர், இந்த சம்பவம் குறித்து வெளிவிவகார அமைச்சில் புகார் அளித்தனர்.பெற்றோர்கள் வெளிவிவகார அமைச்சுக்கு முறைப்பாடு செய்ய வந்த போது சமுர்த்தி உத்தியோகத்தர் வீட்டிற்கு வந்து ஏன் இவ்வாறு முறைப்பாடு செய்தீர்கள் என வினவியதுடன் அவர்களை அச்சுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹம்பாந்தோட்டை நிர்வாக வளாகத்தில் கடமையாற்றும் நபர் எனவும், சில காலமாக துபாய், ஓமான் போன்ற நாடுகளுக்கு மனித கடத்தலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் மேலதிக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. தனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து வெளிவிவகார அமைச்சில் முறைப்பாடு செய்ததன் பேரில், தனது மகள் கொல்லப்பட்டிருக்கலாம் என எனக் குறித்து யுவதியின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.இந்நிலையில், 24 வயதான மூத்த மகள் தன்னை விரைந்து மீட்குமாறு கோரிக்கை விடுத்ததாக தாய் தெரிவித்துள்ளார்.

## மியன்மார்...

செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "வெளியுறவு அமைச்சகம் மியன்மார் அரசாங்கத்துடன் தொடர்பில் உள்ளது, இலங்கை வந்துள்ள அகதிகளின் பெயர் பட்டியல் ஏற்கனவே அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மியன்மார் அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு நாங்கள் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களை நாடு கடத்துவது குறித்து பரிசீலித்து வருகிறோம்," என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்கள் முடியும் வரை ரோஹிங்கிய அகதிகள் முல்லைத்தீவிலேயே தடுத்து வைக்கப்படுவர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 19 அன்று, ரோஹிங்கியாவைச் சேர்ந்த 115 பேரை ஏற்றி வந்த இழுவைப்படகு முல்லைத்தீவில் உள்ள முள்ளிவாய்க்கால் கடற்கரையில் கரையொதுங்கியது.

இவர்கள் அனைவரும் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, 12 நபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்,

## மட்டக்களப்பில்...

பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பிலுள்ள அவரது காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 10 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை பிடித்து வைத்துள்ளது என்றும் இது சட்டத்துக்கு முரணானது என்றும் கருத்துக்களை வெளியிட்டு மக்களையும், அதிகாரிகளையும் திசை திருப்பி குழப்புகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார். 75 வருடங்களாக செயல்படுகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி மக்கள் மத்தியில் அரசியல் ரீதியான கருத்துக்களையும் தெளிவூட்டல்களையும் மேற்கொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 ஏக்கர் அல்ல 20 ஏக்கர் காணியினை நீண்ட கால குத்தகைக்குப் பெற்று மிகப் பிரமாண்டமான அலுவலகத்தை கட்டி மக்களுக்கு அரசியல் தொழிலூட்டலை செய்திருக்கலாம்.

## சிறைக்கைதிகளை...

சங்கிலியால் கைவிலங்கிடப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்ற அறையில் வரிசையாக ஆஜர்படுத்தியமைக்காக சிறைச்சாலை அதிகாரிகளை குற்றம் சுமத்தி நீதவான் இந்த உத்தரவை வழங்கினார். சந்தேகநபர்களை மனிதர்களைப் போன்று நடத்த வேண்டும் என வலியுறுத்திய நீதவான், இனிமேல் இவ்வாறு செய்ய வேண்டாம் என சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார். நீதிமன்றம் விடுமுறை என்பதால், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் ஒன்பது வழக்குகள் எண் 03 நீதிமன்றில் அழைக்கப்பட்டது.

விளக்கமறியல் நீடிப்பதற்காக ஆஜர்படுத்தப்பட்ட சுமார் நாற்பது சந்தேக நபர்கள் ஒரே இரும்பு சங்கிலியில் கைவிலங்குகளுடன் நீதிமன்ற அறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

நீதிமன்ற இலக்கம் 03 இன் சிறைச்சாலையில் அதிகளவான சந்தேக நபர்களை அனுமதிக்க முடியாது என்பதால், இவ்வாறு ஒரே சங்கிலியில் கைவிலங்கிட்டு சந்தேக நபர்களை நீதிமன்ற அறையில் ஆஜர்படுத்த சிறைச்சாலை அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## வியாழேந்திரனின்...

வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார். முன்னாள் இராஜாங்க அமைச்சரின் மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 28 வயதுடைய பாலேந்திரன் என்ற இளைஞன் உயிரிழந்ததையடுத்து மெய்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து இடம்பெற்று வந்த வழக்கு விசாரணையில் பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகளான ந.கமலதாஸ், வி.சுதர்ஷன் ஆகியோர் இந்த கொலை தொடர்பாக பொலிஸார் உரிய விசாரணை நடத்தவில்லை என தொடர்ந்து ஆட்சேபித்து வந்ததுடன் உயிரிழந்தவரின் பெற்றோரும் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு வழக்கை மாற்றுமாறு சட்டத்தரணி ஊடாக கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் குறித்த விசாரணையை கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வந்த நிலையில் அமைச்சரின் வாகன சாரதியை சந்தேகத்தின் பேரில் வியாழக்கிழமை (2) கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை சிஐடியினர் முன்நகர்வு பத்திரம் தாக்கல் செய்து ஆஜர்படுத்தியதையடுத்து வழக்கு விசாரணையை செய்த நீதவான் சந்தேக நபரை ஜனவரி 17 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை குறித்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் கைது செய்யப்பட்ட அமைச்சரின் மெய்ப்பாதுகாப்பாகிய உத்தியோகத்தர் ஒரு வருடத்தின் பின்னர் நீதிமன்ற பிணையில் சென்றுள்ளதுடன் 3 வருடத்திற்கு பின்னர் சந்தேகத்தில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திலித் ஜெயவீரவின்...

அன்றாடம் உழைக்கும் மக்கள் மீது சட்டத்தை திணிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதான தொனியை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. பாதையில் வியாபாரம் செய்பவர்களிடம் வரி வசூலிக்க அரசாங்கம் நடவடிக்கையெடுக்க உள்ளதாக முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாகவும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இவ்வாறான கருத்துகளை தெரிவித்தாரா, இல்லையா என்பதற்கு அப்பால் இது முற்றிலும் திட்டமிடப்பட்டு சோடிக்கப்பட்ட பொய்யான செய்தியாகும்.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் எவர் மீது வழக்குத் தாக்கல் செய்யும் திட்டம் அல்ல. இதற்காக நாடாளுமன்றத்தில் சட்டம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் எவரையும் கைதுசெய்யுமாறு அரசாங்கம் எந்தவொரு ஆலோசனைகளையும் எவருக்கும் வழங்கவில்லை. நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் கூறவில்லை.

மக்களின் விம்பத்தை மாற்றியமைத்து அவர்கள் கௌரவமான மற்றும் செழிப்பாக வாழும் சூழலை உருவாக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள திட்டத்துக்கு சேறு பூசவும் அது தொடர்பில் மக்கள் மத்தியில் அவநம்பிக்கைகளை ஏற்படுத்தவும் பார்க்கின்றனர்.

இந்தப் பத்திரிகை கடந்த காலத்திலும் அரசாங்கத்துக்கு எதிரான பல செய்திகளை வெளியிட்டுள்ளது. குறிப்பாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவுகூர தடையில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறினார் என செய்தி வெளியிட்டிருந்தது. அமைச்சர் ஆனந்த விஜேபால அவ்வாறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறியிருக்காத பின்புலத்தில் இவ்வாறு செய்திகளை வெளியிட்டிருந்தனர்.

நாட்டில் நல்லிணக்கத்தையும் அமைதியையும் சீர்குலைக்கும் வகையில் இவ்வாறு செய்திகளை வெளியிட்டிருந்ததன் மூலம் மக்கள் குழப்பமடைந்திருந்தனர். இவ்வாறு பொய்யான செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவுக்கு சொந்தமான பத்திரிகையே இது.

நாட்டு மக்கள் இடையே மீண்டும் இனவாதத்தை தூண்டி மக்களை குழப்பத்துக்கு உள்ளாக்கி தமது நிகழ்ச்சி நிரல் ஒன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

மக்கள் ஆணையானது இனவாதம், மதவாதத்துக்கு எதிரானது. இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தையும், சகவாழ்வையும் ஏற்படுத்தி அழகான வாழ்க்கையொன்றை ஏற்படுத்திக்கொடுப்பதற்கே இந்த மக்கள் ஆணை வழங்கப்பட்டது.

அரசாங்கம் ஊடகச் சுதந்திரத்துக்கு ஒருபோதும் தடைகளை ஏற்படுத்தாது. ஜனநாயகத்தை முழுமையாக நாம் பாதுகாப்போம். ஆனால், இவ்வாறு தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் வகையில் ஊடகங்களை பயன்படுத்தி நாட்டின் சட்டம், ஒழுங்குக்கும் தேசிய ஒருப்பாட்டுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டால் அரசாங்கம் என்ற ரீதியில் சட்ட நடவடிக்கைகளை எடுப்போம்.

கடந்த கால அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கவே எம்மை மக்கள் ஆட்சியில் அமர்த்தினர்.

நாடு முன்னொக்கி பயணிக்க முற்படும் போது இவ்வாறு மூச்சை அடைக்க முற்படுவதை கண்டிக்கிறோம். அவ்வாறு செய்திகளை வெளியிடுபவர்களின் நிகழ்ச்சி நிரலை நாம் எதிர்காலத்தில் நாட்டுக்கு வெளியிடுவோம்." என்றார்.

## பாலியல்...

தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர் மதத்தின் போர்வையில் தனது துஷ்பிரயோகத்தை தந்திரமாக முன்னெடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

அவர் தன்னை ஒரு கடவுள் போன்ற நபராகக் காட்டிக் கொண்டு, தன்னை சமூகவலைத்தளத்தில் பின்தொடரும் பக்தர் ஒருவரின் மகள்க ளை துஷ்பிரயோகம் செய்ய தனது ஆதரவாளர்களை பயன்படுத்திக் கொண்டதாக கூறப்படுகின்றது. முன்னதாக அவருக்கு எட்டு ஆண்டுகள் சிறை ண்டனை விதிக்கப்பட்ட போதிலும் அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை போதுமானதாக இல்லை என்று கருதப்பட்டதால் மேல்முறையீட்டின் அடிப்படையில் தண்டனை அதிகரித்ததாக கூறப்படு கின்றது. அடிப்படை சுகாதாரத்திற்கான அனுமதி கோருதல் மற்றும் ஒரே பாலின வாழ்க்கை ஏற்பாடுகளை அமுல்படுத்துதல் உள்ளிட்ட கடுமையான விதிகளை அவர் தனது ஆதரவாளர்கள் மீது விதித்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், அவர் இரண்டு சிறுமிகளை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு விசாரணை இடம்பெற்றதையடுத்து அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். தனது அநாகரீகமான செயல்களுக்கான பொறுப்பை ஒப்புக்கொண்ட அதே வேளையில், திசாநாயக்க தனது செயல்களை நியாயப்படுத்த முயன்றதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், "நான் இனி சமூகத்தில் இருப்பது சரியல்ல என்று நினைக்கிறேன். நான் என்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு மனந்திரும்ப விரும்புகிறேன்" என்று ஒரு உளவியலாளருடனான ஒரு நேர்காணலில், திசாநாயக்க கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவுஸ்திரேலிய சுகாதார பயிற்சியாளர் ஒழுங்குமுறை நிறுவனத்திற்கு குற்றச்சாட்டுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவம் செய்வதற்கான அவரது உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## புதிய அரசியல்...

எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படுத்தியுள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்தல் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவின் தலைமையிலான தற்போதைய அரசாங்கம் புதிய அரசியலமைப்பை தயாரிப்பதாக உறுதியளித்துள்ள நிலையில் அதற்கான பணிகளை விரைவில் ஆரம்பிப்பதாக அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.புதிய அரசியலமைப்பு தயாரிப்பதை தற்போதைய அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கான கலந்துரையாடல் கூட்டங்கள் அதிகளவானவற்றில் அப்போதைய மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களும் கலந்துக்கொண்டதாக தெரிவித்த அவர், பொதுத் தேர்தலின் பின்னர் மூன்று சந்தர்ப்பங்களில் தான் ஜனாதிபதியை சந்தித்ததாகவும் அதன்போது புதிய அரசியலமைப்பு தொடர்பில் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும்,புதிய அரசியலமைப்பு தொடர்பான தமது கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அதற்கான பணிகளை ஆரம்பித்ததன் பின்னரே அறிவிக்க முடியும் என அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மாத்தறையில்...

பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார். ஜனவரி 1ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் 12 சிறைக்கைதிகள் படுகாயமடைந்து மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் முதலாம் திகதி ஒருவர் உயிரிழந்தார். தீவிர சிகிச்சை பிரிவிலிருந்த மற்றுமொரு கைதி வெள்ளிக்கிழமை உயிரிழந்ததையடுத்து இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மாத்தறை சிறைச்சாலையில் இருந்த 55 கைதிகள் (02) இரவு அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

மரக்கிளை விழுந்து ஏற்பட்ட சேதத்தினால் மாத்தறை சிறைச்சாலையில் போதிய இடவசதி இல்லாததால் இவ்வாறு கைதிகள் மாற்றப்பட்டுள்ளனர்.

## ஐ.தே.க....

நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க இந்த பதவியை அவருக்கு வழங்கியதாக வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இப்பதவியை முன்னதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார வகித்திருந்தார்.

## பயண எச்சரிக்கை...

குழுக்கள் குறிவைக்க வாய்ப்புள்ளதாக, பிரிட்டன் வெளியுறவு அலுவலகம் கடந்த 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி தமது பயண ஆலோசனையில் தெரிவித்திருந்தது. அதனை புதுப்பித்து வெளியிட்டுள்ள ஆலோசனையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை செல்லும் இங்கிலாந்து நாட்டவர்கள், நெரிசலான பொது இடங்களைத் தவிர்த்தும், தங்கள் சுற்றுப்புறங்களில் விழிப்புடன் இருக்க வேண்டும். கடற்கரைகள்,கேளிக்கை விடுதிகள் மற்றும் உணவகங்கள் போன்ற பிரபலமான சுற்றுலா தலங்களை குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்பதால் பிரித்தானிய பயணிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உலகளவில் இங்கிலாந்தின் நலன்களையும் அதன் மக்களையும் பாதிக்கும் பயங்கரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் அதிகமாக உள்ளது. வெளிநாடுகளில் இருக்கும்போது பயங்கரவாதத்தால் ஏற்படும் ஆபத் தை குறைப்பதற்கான உள்ளூர் ஊடக அறிக்கைகளையும்உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றுமாறும் வெளியுறவு, கொமன் வெல்த் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான தொடர்ச்சியான மோதலின் விளைவாக அதிகரித்து வரும் உலகளாவிய பதற்றங்கள் காரணமாக வெளியுறவு அலுவலகம் சில இடங்களுக்கான பயண ஆலோசனையைப் புதுப்பித்துள்ளது. அமெரிக்காவின் சில இடங்களில் தீவிரவாத தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில், பிரித்தானியா இந்த பயண ஆலோசனை பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

அல்-கொய்தா மற்றும் டேஷ் (**Al-Qaida and Daesh**) போன்ற பயங்கரவாத குழுக்கள் மோதலுக்கு பதிலளிக்கும் வகையில் தாக்குதல்களை நடத்த தங்கள் ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன. இது யூத, இஸ்ரேலிய அல்லது இஸ்ரேல் அதன் நட்பு நாடுகளுடன் தொடர்புடைய சமூகங்கள் மற்றும் நலன்களை இலக்காகக் கொண்டது என வெளியுறவு கொமன்வெல்த் அலுவலகம் கூறியுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் உட்பட இலங்கையின் பயங்கரவாத தாக்குதல்களின் வரலாற்றின் பின்னணியில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## செங்கம்பள...

சீனாவுக்கான பயணமும் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இராஜதந்திர வட்டாரத்தில் அவதானிக்கப்படுகிறது.

இலங்கையின் அரசியலில் செல்வாக்கும் செலுத்தும் பிரதான இரண்டு நாடுகளாக இந்தியாவும் சீனாவும் உள்ளன. இந்த இரண்டு நாடுகளையும் அமெரிக்கா உட்பட மேற்குலகத்தையும் கையாள வேண்டிய நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உள்ளார்.

இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கு இருதரப்பையும் சமரசப்படுத்தவும் வேண்டும் என்பதால் இந்தியாவை போன்றே சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்த அநுரகுமார திசாநாயக்க, விரும்புவதாகவும் இந்தப் பயணம் பல நன்மைகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கும் எனவும் அரச தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

என்றாலும், இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விவகாரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பில் இலங்கையும் சீனாவும் கலந்துரையாடல்கள் மேற்கொள்கின்றனவா என்பது தொடர்பில் இந்த அரசாங்கம் அமைந்தது முதல் புதுடில்லி கழுகுப்பார்வை செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் தமது இந்திய பயணத்தின் போது, இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விவகாரம் குறித்தும் இலங்கை அவதானமாகதான் செயல்படும் எனக் கூறியிருந்தார்.

சீன பயணத்தில் பல்வேறு ஒப்பந்தங்களில் அநுரகுமார திசாநாயக்க கைச்சாத்திட உள்ளார். குறிப்பாக இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து அவர், கவனம் செலுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, முன்வைக்கும் ஒரு திட்டத்தை முழுமையாக மானிய அடிப்படையில் செய்துக்கொடுக்கும் தூதுவொன்றை சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங், அனுப்பியுள்ளார். அநுரகுமார திசாநாயக்க, சீனாவுடன் நெருக்கமான உறவை பேண வேண்டும் என்ற செய்தியை அவர் இந்த அன்பளிப்பின் ஊடாக தெரிவிக்க விரும்புவதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பயணமாக அநுரவின் சீனப் பயணம் பார்க்கப்படுவதுடன், இதுகுறித்து புதுடில்லியும் தீவிர அவதானம் செலுத்தியுள்ளது.என்றாலும், இலங்கை வரலாற்றில் பலம்வாய்ந்த ஒரு தலைவராகவும் ஜனாதிபதியாகவும் அநுரகுமார திசாநாயக்க உருவெடுத்துள்ளதால் அவரை மகிழ்வித்து தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள காத்திருக்கும் சீனா, பெய்ஜிங்கில் இந்தியாவை காட்டிலும் சிறப்பான சிவப்பு கம்பள வரவேற்பொன்றை அளிக்க தயாராகி வருவதாகவும் இராஜதந்திர வட்டாரத்தில் அறிய முடிகிறது.

# கிழக்கு ஆளுநர் ரஷ்ய தூதுவர் சந்திப்பு



(ஏ.எச் ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் இலங்கைக்கான ரஷ்ய கூட்டமைப்பின் தூதுவர் 9(Levan S. Dzhagaryan)லெவன் எஸ். தகாகயன் ஆகியோருக்கு இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு வெள்ளிக்கிழமை (03) திருகோணமலை ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இங்கு, ஆளுநர் ஜெயந்தலால், ரஷ்யாவில் பட்டப்படிப்பை முடித்தவர் என்பதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாகவும், எதிர்காலத்தில் இலங்கையுடன் நெருக்கமாகச் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும் ரஷ்யத் தூதுவர் தெரிவித்தார். இலங்கைக்கான மனிதாபிமான உதவியின் கீழ் ரஷ்ய கூட்டமைப்பிடம் இருந்து பெறப்பட்ட உரத்திற்கு தாம் மிகவும் நன்றிக்கடன்படுவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

## தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக

# கடந்த காலங்களில் உரிய முறையில் சேவைகள் முன்னெடுக்கப்படவில்லை

மலையக பெருந்தோட்ட மக்களுக்கு கடந்த காலங்களில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சேவைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லையென பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் அலுவலகத்தில் பணிபுரிகின்ற உத்தியோகஸ்தர்கள், நிர்வாகத்தினருக்கு புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்து அதிகாரிகள் முன் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர். தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என்பது மலையக பெருந்தோட்ட பகுதிகளுக்கு பாரிய சேவையினை செய்ய கூடிய ஒரு அமைச்சாகும். எமது சமூகத்திற்கு சென்றடைய வேண்டிய சேவைகள் சென்றடைந்ததா? என்பது குறித்து சற்று யோசிக்க வேண்டியுள்ளது.

மக்களுக்கு சேவை செய்யும் அரச உத்தியோகஸ்தர்களாகிய நம் மீது மக்களுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. தேவையொன்றை நிறைவேற்றிக்கொள்ள பொதுமக்கள் அரச அலுவலகங்களுக்கு செல்லும் பட்சத்தில் அவர்களை அலைக்கழிப்பது நமது நாட்டில் ஒரு வழமையான செயலாக இருக்கிறது.இதேவேளை அரச நிறுவனங்களில் கையூட்டல் பெரும் சம்பவங்களும் தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. எனவே தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில் ""கிளீன்



ஸ்ரீலங்கா" என்ற வேலைத்திட்டத்தை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம்.

இந்த திட்டத்தின் ஊடாக சிந்தனை ரீதியிலான மாற்றங்களை நாம் கொண்டு வர வேண்டும். இதுவரை காலமும் நாம் பழைய செயற்பாடுகளுக்கு உள்வாங்கப் பட்டுயிருந்தோம். அந்த பழைய முறையினை நாம் மாற்றவேண்டும். நம்மை தேடிவரும் மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவது எமது முக்கிய கடப்பாடாகும். இந்த 2025ம் ஆண்டில் இருந்து மக்களுக்கான சேவை தொடரும் என்றார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 21ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள்.

**ரிஷபம்** உங்கள் திறமைகளை வெளிபடுத்த உகந்த நாள்.

**மிதுனம்** இன்று எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும்.

**கடகம்** பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும்.

**சிம்மம்** தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**கன்னி** இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி நற்பலன் காணுங்கள்.

**துலாம்** உங்கள் தினசரி செயல்களை மேற்கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை.

**விருச்சிகம்** இன்று அதிக கவலையுடன் காணப்படுவீர்கள். உற்சாகமாக இருக்க முயலுங்கள்.

**தனுசு** இன்று சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம்.

**மகரம்** இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

**கும்பம்** இன்றைய முக்கியமான விஷயங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள்.

**மீனம்** இன்று குறுகிய மனநிலை போக்கை தவிர்க்க வேண்டும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று இரவு 09:11 வரை சஷ்டி பின்பு சப்தமி.

**நட்சத்திரம்:** இன்று இரவு 09:28 வரை பூரட்டாம் பின்பு உத்திரட்டாம்.

**யோகம்:** சித்த,அமிர்த.

**சந்திராஷ்டமம்:** ஆயில்யம்,மகம்.

**சூலம்:** மேற்கு.

**இராகு காலம்:** 04:30 PM முதல் 06:00 PM வரை.

**குளிகை:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

**எமகண்டம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

# 03 இலட்சம் மெ. தொன் நெல்லை கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)

எதிர்வரும் காலங்களில் விவசாயிகளிடமிருந்து மூன்று இலட்சம் மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார். அரிசி சந்தைப்படுத்தல் சபையானது சுமார் 02 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை சேமித்து வைக்கக்கூடிய சேமிப்புத் திறனைக் கொண்டுள்ளதாகவும், உணவுத் திணைக்களம், ச.தொ.ச ஆகிய நிறுவனங்களில் நிலவும் நெல் களஞ்சியங்களையும் பயன்படுத்தி மூன்று இலட்சம் மெட்ரிக் தொன் நெல் இலக்கை எட்ட முடியும் என அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் வாரத்தினுள் நெல் கிலோ ஒன்றின் உறுதியான விலையை அறிவிக்க எதிர்பார்ப்பதாக கூறிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர், உலர் அரிசி மற்றும் ஈர அரிசியை உரிய தரத்திற்கு ஏற்ப கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவித்தார். நெல் சந்தைப்படுத்தல் சபையில் ஈரநெல் உலர்த்துவதற்கு தேவையான வசதிகள் இல்லாததால் சிறு மற்றும் நடுத்தர ஆலைகளின் உரிமையாளர்களை தொடர்பு கொண்டு ஈரநெல்லை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்தார்.



இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவை நாடாளுமன்றத்தில் சந்தித்தார். இதன்போது சீன தேசிய மக்கள் காங்கிரசின் நிலைக்குழுவின் தலைவர் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜி (Zhao Leji)யின் வாழ்த்துக் கடிதத்தை சீனத் தூதுவர் புதிய சபாநாயகரிடம் கையளித்தார்.இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்து கொண்டார்.

# சாரதி அனுமதிப்பத்திரங்களை ஒரு மாதத்திற்குள் அச்சிட நடவடிக்கை

அச்சிடுவதில் ஏற்பட்டிருந்த தாமதம் காரணமாக, தற்போது நிலுவையில் உள்ள சாரதி அனுமதிப்பத்திரங்களை ஒரு மாதத்திற்குள் அச்சிட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்தார். அதற்கமைய, அச்சிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ள சுமார் 1,30,000 சாரதி அனுமதிப்பத்திரங்களை ஜனவரி மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். மோட்டார்




போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர அலுவலகத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நிறுவனத்தில் இணையவழி முறை மூலம் சேவைகளை பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். அலுவலகத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்த பிரதியமைச்சர்கள், தற்போதைய தொழில்நுட்ப முறைகளுக்குப் பதிலாக, அதிக திறன் வாய்ந்த நவீன முறைகளைப் பயன்படுத்தி, வினைத்திறனான பொதுச் சேவையை வழங்கும் ஒரு அரச நிறுவனமாக மாற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றனர்.

# வங்குரோத்தடைந்த நாடு மூன்றே மாதங்களில் மீட்கப்பட்டது

## சுனில் ஹந்துன்னெத்தி கருத்து

(கனூஷியா புஷ்பகுமார்)

வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை ஒரு சில மாத காலப்பகுதிக்குள் இவ்வாறானதொரு நிலைக்கு கொண்டுவர முடிந்ததை எண்ணி மகிழ்ச்சியடைய வேண்டும் என கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.



கடனுதவி பெற முடியாமல், துறைமுகத்திற்கு வருகைத் தந்த எரிபொருள் கப்பலுக்கு பணம் செலுத்த முடியாமல் இருந்த நாடு இன்று மூச்சு விட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். தேசிய தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் தமது அரசாங்கத்தின் கலந்துரையாடல்கள் பத்து நாட்களில் நிறைவு செய்யப்பட்டதாகவும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யும் யோசனையில் அவ்வாறு செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், தமது குழுவின் தலையீடு மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் குழு கூட ஆச்சரியமடைந்ததாக கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கத் தூதுவருடன் மனோ எம்.பி சந்தித்துப் பேச்சு

## அதிகாரப் பகிர்வு குறித்து முக்கிய கவனம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரம், அதிகாரப் பகிர்வு விடயம் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கலந்துரையாடியுள்ளார்.



கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதாக மனோ கணேசன் எம்.பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினை தீர்வுக்கான நகர்வு, அதிகாரப் பகிர்வு, மலையக பெருந்தோட்டக் காணி உரிமை, சட்டத்தின் ஆட்சி, பொருளாதார சவால்கள், சர்வதேச நாணய நிதியம் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## தீர்வுத் திட்ட வரைவு தொடர்பில்

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்களுடன் பேச முடிவு

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7 ஆம் திகதி சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோருடன் கலந்துரையாடும் அந்தச் சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து எதிர்வரும் காலத்தில் அரசால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, குறைந்த பட்சம் அந்த விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் எம்.பி. அதனை முன்னிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆகியோரைக் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.



இவ்வாறானதொரு பின்னணியில் இதன் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து கஜேந்திரகுமாரிடம் வினவியபோது, எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெறவிருக்கும் நிலையில், அன்றைய தினம் சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் மீண்டும் கலந்துரையாடவிருப்பதாகத் தெரிவித்தார். அதனூடாக தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அந்தத் தீர்வுத் திட்ட வரைவு குறித்து ஆழமாக ஆராயவும், கலந்துரையாடவும் முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# NPP எம்.பியை அவமதித்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைது

தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டஹச்சியை சமூக ஊடகங்களில் அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், களுத்துறை மில்லனிய பிரதேச சபையின் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ரவீந்திர ரம்முனி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ரவீந்திர ரம்முனி, அண்மையில் தனது பேஸ்புக் கணக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கொட்டஹச்சியை இழிவுபடுத்தும் வகையில் பதிவொன்றை இட்டிருந்தார். பின்னர் அந்த பதிவை அன்றே நீக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114664152 / editorial@oruvan.com

## இருதலைக் கொள்ளி நிலையில் ஜனாதிபதி அநுரவின் பயணம்

தேசிய மக்கள் சக்தியின் இராஜ தந்திர நகர்வின் இரண்டாம் கட்ட முயற்சியாக ஜனாதிபதியின் சீன விஜயம் அமையவுள்ளது. இந்திய மற்றும் சீன உறவுகளின் அடித்தளத்திலிருந்தே, எமது நாட்டின் சர்வதேச உறவுகளைப் பலப்படுத்தும் முயற்சிகள் வெற்றிய ளிப்பதுண்டு. இந்தக் கருதுகோளி லிருந்து விலகிச் செயற்பட முடியாத நிலை நமக்குள்ளது. இதற்கான பிரதான காரணம் நமது நாட்டின் அமைவிடம்தான். இந்து சமுத்திரத்தின் கப்பல் போக்குவரத்து, சர்வதேச வர்த்தகத்துடன் இணைந்துள்ள பங்களிப்பும் இதற்குக் காரணம்.

தொன் கணக்கில் பண்டங்களையும் பொருட்களையும் சுமந்தவாறு, மலைபோல நகர்ந்து செல்லும் வர்த்தகக் கப்பல்களுக்கு இந்து சமுத்திரப் பாதையும் பிரதானமாகவே திகழ்கிறது. இது தவிர அவசர மோதல்களால் பாதுகாப்பை இழக்கும் சில கடல்வழிப் பயணங்களின்போது, இந்து சமுத்திர பாதையே கை கொடுக்கிறது. போக்குவரத்துக்கு மட்டுமா? பாதுகாப்புக் கரிசனையிலும் இப்பிராந் தியம் பல நாடுகளின் கண்களைக் குடைகின்றன. வல்லரசாக நாம், இல்லாவிடினும் வல்லரசு நாடுகளுக்கும் வல்லரசாக வளரத் துடிக்கும் தேசங்களுக்கும் இலங்கை அல்லது நமது நாட்டின் அமைவிடம் அவசியப்படுகிறது.

இதனால்தான், "இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே" இந்த நிலையில் நமது நாடு இருக்கிறதா? ராஜபக்ஷக்களின் நிர்வாகம் 2007 முதல் 2014 வரை சீனாவுடன் ஏற்படுத்திய மிக நெருக்கமான உறவுகள், நாட்டின் அபிவிருத்திக்கு பங்களித்தன. இந்த விடயம் இன்னொரு பார்வையையும் ஏற்படுத்தியுள்ளது. சீனாவின் நவீன காலனித்துவ வலையில், சிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியதென்பதே மறுமுனைப்பார்வையாகும்.தாமரைக் கோபுரம், தாமரைத் தடாகம், கொழும்பு துறைமுக நகரம் இன்னும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை உட்பட பல பெருந்தெருக்கள் திட்டங்கள் எல்லாம் நாட்டின் அபிவிருத்தியா...? அல்லது அடமானமா? என கேள்வி எழுப்பத் தோன்றுகிறது. மக்களின் அதி முக்கிய அல்லது அத்தியாவசிய தேவைகளுடன் தொடர்புறாத அபிவிருத்தி தேவைகள் எதற்காக? இந்தச் சிந்தனைகளின் செல்வாக்குகளே, 2015 ஆம் ஆண்டு ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பியது.

ஹம்பாந்தோட்டை துறைமுகம் உள்ளிட்ட பல தேவைகளுக்காக கடந்த 2007 முதல் 2014 ஆம் ஆண்டுகள் வரை 1.12 பில்லியன் அமெரிக்க டொலர் கடன், சீனாவிடமிருந்து பெறப்பட்டுள்ளது. 15 வருட கால எல்லையாகவே இக்கடன்கள் பெறப்பட்டுள்ளன. இக்கடன்களால், அன்னியச் செலாவணியை ஈட்ட முடிந்ததா? ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையங்களிலிருந்து அன்னியச் செலாவணியை இன்னும் ஈட்ட முடியாத நிலையே இருக்கிறது.

இதுபோன்று, துறைமுக நகராகவும் பின்னர் நிதி நகராகவும் அரசியல் காரணங்களுக்காக பெயர் மாற்றம் செய்யப்பட்ட கொழும்பு துறைமுக திட்டத்தின் எதிர்காலத்தை, கற்பனையே செய்ய முடியாதுள்ளது. இதுவே, நாட்டின் கடன் பளுவை அதிகரித்திருப்பதாகவும் விமர்சிக்கப்படுகிறது.

இதனால், கடந்தகால அரசுகளின் செயற்பாடுகள், நல்லாட்சியாகட்டும் அல்லது ராஜபக்ஷக்களின் நிர்வாகமாகட்டும் நாட்டுக்கு விமோசனமளிக்காது என்றே, இந்த அரசாங்கம் நினைக்கிறது. இந்நிலையில், அநுரவின் சீன விஜயம் பல அதிர்ச்சி செய்திகளைத் தரலாம். ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களைத் திருத்தும் அல்லது சில விடயங்களை மாற்றியமைக்கும் சந்தர்ப்பங்களுக்கும் இவ்விஜயத்தில் இடம்பெறும். இதனால், பொருளாதாரமா? அல்லது பாதுகாப்பா...? என்ற இருதலைக் கொள்ளி விஜயமாகவே, ஜனாதிபதியின் இப்பயணம் அமையப்போகிறது. சர்வதேச சட்ட நியதிகளுக்குட்பட்டு 99 வருடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஹம்பாந்தோட்டை துறைமுக வருமானத்தில் 70 வீதம் "சைனா மேர்ச்சண்ட் போர்ட் கம்பனிக்கும்" 30 வீதம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் செல்லவுள்ளது. அதிகளவான பங்கிலாபம், சீனாவுக்கு செல்வதால், ஏற்கனவே பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி வீதங்களை குறைப்பது குறித்து, சீனாவுடன் கலந்துரையாட உள்ளதாகவும் அரச உயர் மட்டங்களில் பேசப்படுகிறது.

மொத்தத்தில் அநுரவின் சீன விஜயமே இலங்கையின் எதிர்காலத்துக்கு அடித்தளமிடவுள்ளது. தொழிநுட்ப வளர்ச்சியில் உச்சந் தொட்டுள்ள சீனா, இந்த வளர்ச்சியை அரசியல் மூலோபாயத்துக்கு முதலிடுகிறதா..? இந்தச் சந்தேகம் வலுவடையும் வகையில்தான், சீனா நடந்தும் கொள்கிறது. நீர்மூழ்கிக் கப்பல்க ளூடாக வேவு பார்த்தல், வேவு விமானங்களூடாக பிற நாடுகளின் இரகசியங்களைத் திருடல் மற்றும் இணைய வழி ஊடுருவல்கள் எல்லாம், மேலைத்தேய வல்லரசுகளையே, வாய் பிளக்க வைத்துள்ளது. விமானத்தின் அரைப்பங்கு வேகத்திலான "புளட்ரயில்" சீனாவின் உயர்ரக தொழிநுட்பம். உலகுக்கு இது பழையதாகலாம். ஆனால், ஆசியாவுக்கு இது ஆச்சர்யம்தான். இந்தியாவும் இவ்விடயத்தில் பிரமித்தேயிருக் கிறது. சம அளவிலான பலமாயினும் தொழிநுட்பத்தில் சீனா உலகை விஞ்சியே நிற்கிறது.

எனவே, இலங்கையின் பயன்பாடு சீனாவுக்கு எந்த வகையில் அவசியப்படும் என்பதே, இன்றைய எதிர்பார்ப்பாகியுள்ளது. மறு புறம் இலங்கையை எவ்வாறு கையாள்வதென்ற திட்டமும் இந்தியாவிடம் இல்லாதிருக்காது. நாடுகளை கடன் பொறிக்குள் -Deft and draft திணித்து, நாட்டை மறைமுக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் சீனாவின் செயற்பாடுகள்தான் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. கடனை கொடுத்து நாட்டை தாரை வார்த்த, நாடுகள் ஏராளம். ஆப்பிரிக்க நாடுகளில் பெரும்பாலான கரையோர பிரதேசங்கள் சீனாவின் கட்டுப்பாட்டுங்கள் இருக்கின்றன. இலங்கையையும் விதிவிலக்காக கொள்ள முடியவில்லை.

எனவே, சீனாவின் கடன் பொறி தந்திரம், இந்து சமுத்திரத்தை மையமாகக் கொண்ட செயல்பாடாக வலுப் பெற்று வருவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்பதும் நமக்கு புரிந்த விடயம். இந்த நிலையில், சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் வலுப்பெறுவதை, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள், பிராந்திய வல்லரசு போட்டியாகவே பார்க்கின்றன. இதனாலேயே, அநுரவின் விஜயத்தை இருதரப்பு விஜயம் என்பதை விட, இருதலைக் கொள்ளி எறும்பின் விஜயம் என்கிறோம்.

# இலங்கையில் 'இந்திய சார்பு' அரசாங்கம்...

## சீனக் கொள்கையை பின்பற்றும் அநுர அரசு, இந்தியாவுக்கு பாசாங்கு : கலாநிதி சுரேன் ராகவன்





இலங்கையில் 'இந்திய சார்பு' அரசாங்கத்தை கட்டியெழுப்புவதே இந்தியாவின் பிரதான நோக்கம் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்த நாட்டில் இந்தியப் பிரதமருக்கும் அரசாங்கத்துக்கும் கீழ்ப்படியும் அரசாங்கத்தை உருவாக்கும் நோக்குடன் இந்தியா செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

"ஒருவன்" செய்திப்பிரிவின் சிங்கள ஊடகமான "மொனரா" டிஜிட்டல் தளத்திற்கு வழங்கிய நேர்காணலொன்றின் போதே அவர் இதனை வெளிப்படுத்தினார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்று நூறு நாட்கள் பூர்த்தியடைந்தமை தொடர்பில் கருத்து வெளியிட்ட சுரேன் ராகவன், இந்தியா வெள்ளம் வருமுன் அணைக்கட்டி விட்டதாக வலியுறுத்தினார்.

மாற்றத்திற்கான அணியாக திரண்டு மிக அதிக நாட்களாக பிரசாரங்களை மேற்கொண்ட ஜேவிபியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தியானது மாபெரும் மக்கள் ஆணையைப் பெற்று வெற்றி பெற்றது.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் இந்த வெற்றியின் பின்னர், ஜனாதிபதி அநுரவின் அனைத்து செயற்பாடுகள் தொடர்பிலும் உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் அவதானங்கள் எழுந்தன.

அதில் மிக முக்கியமாக, அநுரவின் முதலாவது சர்வதேச பயணம் அமைந்திருந்தது.

ஆரம்பத்திலிருந்தே சீன கம்யூனிஸ்ட் கொள்கைகளின் தன்மையைக் கொண்ட ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வெளிநாட்டு பயணம் சீனாவுக்குதான் என்ற பல எதிர்ப்பார்ப்புகள் எழுந்திருந்தாலும் கூட அவர் முதலாவது பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்தார்.

இந்தியாவையும், இந்தியாவுடனான தொடர்பையும் அவமதித்து வந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வேட்பாளராக இருக்கும் போதே அவருக்கு இந்தியாவில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், இதற்கு முன்னர் தலைவராக இல்லாத ஒருவர் மற்றும் நாட்டின் தீர்மானமிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளரை இந்திய பயணத்திற்கு அழைப்பு விடுத்தமை தொடர்பில் அப்போதே பல குழப்பங்களும் சந்தேகங்களும் எழுந்தன.

இந்த நிலையை விளக்கிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், இடதுசாரி ஜேவிபி மற்றும் நவீன இடதுசாரி தேசிய மக்கள் சக்தி, அனைத்து அதிகாரங்களுடன் சீனாவின் பக்கம் திரும்பினால் இந்தியாவின் நிலை என்ன அதனால் தான் இந்தியா வெள்ளம் வருமுன் அணைக்கட்டியுள்ளது என கூறினார்.

இந்திய அரசியல் அவதானிகள் பூகோளமய அரசியலில் அதிக அவதானம் செலுத்தியே இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தற்போதைய அரசாங்கம் ஆட்சியமைக்க இந்தியாவின் மறைமுக ஆதரவு இருந்திருக்குமா என்ற சந்தேகங்கள் தனக்கு உள்ளதாக அவர் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

இந்திய எதிர்ப்பு ஜேவிபி சீனாவுடன் கைகோர்ப்பது இந்தியாவுக்கு மிகப் பெரிய சவால் எனவும் வடக்கில் அநுரகுமார திஸாநாயக்க பெற்றுக் கொண்ட வாக்குகள் அனைத்தையும் வைத்து பார்க்கும் போது தற்போதைய அநுர ஆட்சி இந்தியாவின் தேவை எனத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தமது சீன பயணத்தில் முன்வைக்கும் ஒரு திட்டத்தை முழுமையாக செய்துக்கொடுக்க சீனா தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியின் சீன பயணம் தொடர்பிலான திட்டங்களை வகுக்கும் நோக்கில் இலங்கை வந்திருந்த சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் பிரதித் தலைவர் கின் போயோங், சீன ஜனாதிபதியின் இந்த செய்தியை அநுரகுமார திஸாநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இரண்டு நாள் பயணமாக ஜனாதிபதி இந்தியா சென்றிருந்த தருணத்தில் கின் போயோங் இலங்கை வந்திருந்ததுடன், அரசாங்கத்தின் முக்கிய தரப்பினருடன் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தார்.

கின் தலைமையிலான குழு ஜே. வி. பி தலைமையகத்திற்கும் சென்று கலந்துரையாடல்களின் ஈடுபட்டிருந்தது.

இதுகுறித்து ஊடகங்களுக்கு விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட ஜே. வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு இருப்பதாக கூறியிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே, ஜனாதிபதியின் அடுத்த நகர்வு எதுவாக இருக்கும் என பல கேள்விகள் எழ ஆரம்பித்துள்ளன.

ஆட்சிக்கு வந்ததும் நிறைவேற்றுவதாக கூறிய பல வாக்குறுதிகள் தொக்கி நிற்கும் நிலையில் மக்கள் தமது அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காமல் அசௌகரிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனினும், ஆட்சி முறையை சீராக கொண்டு செல்ல அநுர தரப்பினர் முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருவது தெளிவாக அவதானிக்க கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி அநுரகுமாரவின் ஆட்சியில் இராஜதந்திர முயற்சிகள் இந்தியாவில் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்ததுடன், அவரது வெளிநாட்டு உறவுகள் எதிர்காலத்திலும் சுமூகமாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரங்களில் உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் அதிக கவனம் செலுத்தியமையே அதற்கான காரணமும் ஆகும்.

அரசாங்கம் குறிப்பிடத்தக்க பொருளாதார சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில் முழுமையான தீர்மானங்கள் எதுவும் எட்டப்படாமை அநுரவின் தலைமைத்துவத்தின் கீழான அரசாங்கத்திற்கு அரசியலில் அனுபவம் இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் இந்தியா மற்றும் சீனாவின் செல்வாக்கை சமநிலைப்படுத்தும் சிக்கலில் உள்ள அநுரகுமார திஸாநாயக்கவின் அடுத்தடுத்த நகர்வுகள் தொடர்பில் பல அவதானங்கள் செலுத்தப்பட்டுள்ளன.


இந்தியாவும் சீனாவும் இலங்கையை தங்கள் செல்வாக்கின் கீழ் கொண்டு வர முயற்சித்து வரும் நிலையில் அநுரவின் வெளியுறவுக் கொள்கை எத்தகையதாக அமையும் என்பது அதிகளவில் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

அண்மைய தினங்களாக இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் தாக்கம் இந்தியாவுக்கு கேள்விகளை எழுப்பியுள்ளது.

எவ்வாறாயினும், "இந்தியாவின் நலனுக்கு பாதகமான வகையில் எங்களது நிலத்தை எந்த வகையிலும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்று நான் இந்திய பிரதமரிடம் உறுதியளித்துள்ளேன்," என நரேந்திர மோடியுடனான சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



கனூஷியா புஷ்பகுமார்



# மக்களை அலைக்கழிக்காமல் தேவைகளை நிறைவேற்றுங்கள்

## வடக்கு ஆளுநர் அதிகாரிகளிடம் கோரிக்கை

**(எஸ்.ஆர்.லெம்பேட்)**

மக்களை அலைக்கழிக்காமல் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் (02.) காணிப் பிரச்சினை தொடர்பான நடமாடும் சேவை நடைபெற்றது.

மன்னார் மாவட்டம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனால் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

புலவு காணிகளில் அமைக்கப்பட்டுள்ள அரச கட்டிடங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

புலப்படுகையில் அமைக்கப்பட்ட அரச கட்டடங்களுக்கு அனுமதி வழங்க முடியாது எனக் குறிப்பிடப்பட்ட நிலையில், எதிர்காலத்தில் அந்தக் கட்டிடங்களை வேறிடங்களில் அமைப்பதற்கான ஒழுங்குகள் தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் அறிவுறுத்தினார். அதேவேளை மன்னார் மாவட்டத்தில் காணியற்ற



மக்களுக்குக் காணிகளை வழங்குவதற்கும் பெரும் சவால்களை எதிர்கொள்வதாக மன்னார் மாவட்டச் செயலாளர் குறிப்பிட்டார்.

குறிப்பாக வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன மக்கள், அரச திணைக்களங்கள் பயன்படுத்திய பல காணிகளை தமக்குரியது என வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இந்தப் பிரச்சினை பொதுவாக இருப்பதாகவும் இதில் தொடர்பில் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ள விவரங்களை அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்திய ஆளுநர், அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளரை அழைத்து இந்தப் பிரச்சினைகள் தீர்க்கலாம் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

# வட மாகாணத்தில் ஆயுர்வேத வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை

## அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்



கிளிநொச்சி, மன்னார், முல்லைதீவு மாவட்டங்களில் காணப்படும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதற்கு ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்களை உள்வாங்குதல் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை (01) நடைபெற்றது. வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறைத் திணைக்கள ஆணையாளரால், திணைக்கள ரீதியான செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டது. அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால், வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற ஆயுர்வேத வைத்தியசாலை தொடர்பான தேவைப்பாடுகள், வைத்திய அதிகாரிகள் எதிர்நோக்குகின்ற சவால்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.

ஆயுர்வேத வைத்தியர்களின் இடமாற்றம், வைத்தியர்களின் தற்காலிக இணைப்பு ஆகியவற்றில் வெளிப்படைத்தன்மை பேணப்பட வேண்டும் என சங்கத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பணியாற்றும் வைத்தியர்களின் தரப்படுத்தல் தொடர்பான கோரிக்கையைச் சாதகமான முறையில் அணுமாறு ஆளுநர் ஆணையாளருக்கு அறிவுறுத்தினார்.

# திருமலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு யாழில் நினைவேந்தல்

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு (02) மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ். கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



மூத்த போராளி பொன் மாஸ்டர் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலிகாமம் வடக்குப் பிரதேச அமைப்பாளர் ச.செல்லகாந்தன் நினைவுச் சுடர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட மாணவர்களையும், யுத்தத்தில் உயிரிழந்த அனைத்துத் தமிழ் மக்களையும் நினைந்து ஒருநிமிட மேளன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. நினைவுரையை மூத்த எழுத்தாளர் மு.ஈழத்தமிழ்மணி வழங்கினார்.

# காணாமல் போனவரை குளத்தில் தேடும் பணி



மனநலம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் காணாமல் போனதாக பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அவரது துவிச்சக்கர வண்டி மற்றும் செருப்பு ஆகியன கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் முறிப்பு குளத்தில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கிளிநொச்சி – கோணாவில் மத்தியை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட குறித்த நபர் காணாமல் போனதாகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது கிளிநொச்சி முறிப்பு குளத்தின் தடுப்பு அணையில், காணாமல் போன நபரின் துவிச்சக்கர வண்டியும் அவரது செருப்பும் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த வகையில் அவர் குளத்தில் விழுந்துள்ளாரா என்ற சந்தேகத்தில் நீச்சல் வீரர்கள் மூலம் குறித்த குளத்தில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. மேலதிக நடவடிக்கைகளுக்காகக் கடற்படையினரின் உதவியையும் நாடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கிணற்றிலிருந்து உருக்குலைந்த சடலம் மீட்பு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராம்புவில் பகுதியில் உள்ள வயல் கிணறொன்றிலிருந்து (02) பிற்பகல் வயோதிபப் பெண் ஒருவருடைய சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வயலுக்குப் பசளை இடச் சென்றவர்கள் மேற்படி சடலத்தைக் கண்ட நிலையில் இது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இந்நிலையில் சடலம் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



மாணிக்கவாசகர் பாடசாலையில் “உயர்வுக்கோர் குரல்” எனும் தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்ற திருக்குறள் போட்டி அண்மையில் கொட்டக்கலை அம்மன் கோவிலில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்ட மாணவர்களை படங்களில் காணலாம்.

# வருட இறுதி நாளில் நிறைவுக்கு வந்த 43 ஆவது தேசிய இளைஞர் நாடக விழா





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய இளைஞர் நாடக போட்டி இம்முறை 43 வது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இப்போட்டியின் இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட குறுநாடகங்கள் மருதானை டவர் மற்றும் எல்பிஸ்டன் அரங்குகளில் 2024.12.24 தொடக்கம் 2024.12.31 வரை தினமும் பி.ப.6.30 மணி தொடக்கம் மேடையேற்றப்பட்டன.

டிசம்பர் 24 திகதியிலிருந்து எல்பின்ஸ்டன் அரங்கில் ஆரம்பமாகிய குறு நாடகப் போட்டியில் இராமச்சந்திரன் திருக்குமரனின் ‘மறுதழிப்பு’, பாத்திமா இஷாராவின் ‘வீரனின் மனைவி’, பாஸ்கர் கிருஷானின் ‘மடையர்’ ஆகிய குறு நாடகங்களும் கிருஸ்ணன் ஹமீஷா தேவியின் ‘மாங்கல்யம்’, அகிலேஸ்வரன் கிருஸ்ணராஜின் ‘இளவந்திகை’, இராமலிங்கம் ஸ்ரீகாந்தின் ‘மயிர்கடவுள்’ ஆகிய நாடகங்களும் 24ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை மேடையேற்றப்பட்டன.

இதன்போது, நாட்டின் தலை சிறந்த மூத்த கலைஞர்கள் பலரும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாடகப் போட்டியின் முதலாவது சுற்றுக்காக நாடுபூராவிலுமிருந்து 15–35 வயது வரையான இளம் கலைஞர்களினால் அனுப்பப்பட்ட நாடகப் பிரதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த பிரதிகளைக் கொண்ட நாடகங்கள் இரண்டாம் சுற்றுக்காக மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் மேடையேற்றப்பட்டதுடன் அவற்றில் சிறந்த நாடகப்பண்புகளைக் கொண்ட நாடகங்கள் இந்நாடக விழாவின் போது மேடையேற்றப்பட்டன.

# சீமெந்து தொழிற்சாலைக்கு கற்கள் கடத்தல்

## இளங்குமரன் எம்.பியின் முயற்சியில் முறியடிப்பு



**(பு.கஜிந்தன்)**

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை சீமெந்து உற்பத்தி தொழிற்சாலைக்குச் சட்டவிரோதமான முறையில் கண்டகற்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தியை சாவகச்சேரி நுணாவில் பகுதியில் வைத்து வழிமறித்த பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சமீபத்தில் மந்துவில் பிரதேசத்திலிருந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கட்டடப்பொருள் விற்பனை செய்யும் வர்த்தகருக்குச் சொந்தமான பாரவூர்தி மூலமாகச் சட்டவிரோதமான முறையில் கண்டகற்களை அகழ்ந்து செல்வதாகப் பிரதேச மக்களால் முறைப்பாடுகள், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு கிடைக்கப்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது (02) இரவு 10.15 மணியளவில் நுணாவில் பகுதியில் வைத்துக் குறித்த வர்த்தகருக்குச் சொந்தமான பாரவூர்தியை மறித்துச் சோதனையிட்ட போது அனுமதிப்பத்திரம் இன்றி கற்கள் எற்றிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த பாரவூர்தி சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்தார்.

# அசுரனாக அரசு தடுத்தாலும் போராட்டம் செய்வோம்

## யாழ்ப்பாண மீனவர்கள் சூளுரை

**(பு.கஜிந்தன்)**



புதிதாக பதவியேற்றுள்ள அரசு எங்களைத் தண்ணீர் கொண்டு அடித்தாலும் கட்டை கொண்டு அடித்தாலும் நாங்கள் பயப்படாமல், எமது வளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக, யாழ்ப்பாணம், இந்தியத் துணைத் தூதரகத்திற்கு முன்னால் போராட்டம் செய்வோம் என யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்ஸிஸ் ரட்ணகுமார் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தின் இறுதி காலகட்டத்தில் இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்தி நாங்கள் ஓரளவு தொழில் செய்துகொண்டு இருந்தோம். ஆனால் புதிய அரசாங்கம் வந்த பின்னர் நிறைய இழுவை மடி படகுகள் எங்களது வளங்களை அழிக்கின்றது. ஆகையால் எமது தொழிலாளிகளின் வலைகளும் அழிக்கப்படுகின்றன.

புதிதாகப் பதவியேற்றுள்ள கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் அவர்களுக்கு நாங்கள் இதனைப் புதிதாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. கடந்த காலத்தில் நாங்கள் போராட்டத்தை நடாத்தியபோது, இந்திய இழுவைப் படகுகள் குறித்து தமது தலைவருக்கு உடனடியாக தெரியப்படுத்துவோம், நடவடிக்கை எடுப்போம் என தற்போதைய கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கடற்றொழில் அமைச்சர் புதிதாகப் பதவியேற்ற பின்னர் இந்த இழுவை படகுகளை நிறுத்துமாறு எமது சம்மேளனம் சார்பாக நாங்கள் பல கோரிக்கை கடிதங்களைக் கடற்றொழில் அமைச்சரிடம் கையளித்துள்ளோம். இருப்பினும் நெடுந்தீவு தொடக்கம் சுண்டிகுளம் வரையிலான கடற் பகுதியில் இந்தியன் இழுவை படகுகள் எமது வளங்களை அளிக்கின்றன.

இவற்றினை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் இதற்கு ஒரு சரியான முடிவினை எடுக்காவிட்டால், யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் செய்யும் மக்களை இணைத்து நாங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்கு முன்னால் போராட்டம் செய்வோம்.

புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ளது. வந்திருக்கின்றது. நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றபோது தண்ணீரில் அடிப்பார்கள், கட்டையால் அடிப்பார்கள் அவற்றையெல்லாம் பற்றி எங்களுக்குப் பயமில்லை. எங்களது பிரச்சினை தீர வேண்டும் என்றால் நாங்கள் போராட்டம் செய்வோம். எனவே ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் இதற்கு ஒரு சரியான முடிவு கூற வேண்டும் என்றார்.

# இலங்கையின் காலடியில் தரப்படும் கல்விக்கான வாய்ப்புகள்





(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மனித மூலதனத்தில் முதலீடு செமனித மூலதனத்தில் முதலீடு செய்வது என்பது சிறந்த தரம் மிக்க கல்விக்கான அணுகலை வழங்குதல் என்பதாகும். அதனாலேயே முதலீடுகளில் எல்லாம் சிறந்தது கல்விக்கான முதலீடேயாகும் என்று துறைசார்ந்தோர் வலியுறுத்துகின்றனர்.

பாடசாலை ஒன்றைத் திறப்பது சிறைச்சாலை ஒன்றை மூடுவதற்குச் சமம் என்று பொருள்பட சான்றோர்கள் சிலாகித்துச் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அதில் அர்த்தம் உள்ளது. ஏனெனில், மனித சமுதாயத்தை சிறந்த செல்நெறியோடு வழிநடத்திச் செல்வதற்கு கல்வி முக்கியம். அந்த வாய்ப்புக்கள் கிடைக்கவில்லையெனில் மனித சமுதாயம் தட்டழிந்து போய் விடும்.

கடந்த 30 வருட ஆயுத மோதல்களால் சீர்குலைக்கப்பட்ட இலங்கைச் சமூகங்களின் வாழ்க்கையை இயல்பாக மேம்படுத்துவதற்கு கல்வி ஒன்றே கை கொடுக்கும்.

ஏனெனில், கல்வி இயற்கை, செயற்கை இடர்களினால் அழிந்து போவதில்லை. மனித நாச வேலைகளினால் கல்வி பாதிப்பை எதிர்கொள்ளாது.

இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இன வன்முறைகளின்போதும் தொடர்ந்து இடம்பெற்று வந்த யுத்தத்தின்போதும் இலங்கைச் சமூகத்தினர் அனைவரும்



தமது உயிர் உடமைகள், வாழ்வாதாரம் தொழிற் துறைகள், வாழ்விடங்கள் என்பனவற்றை இழந்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

அந்தவேளையில் அவர்களு க்கு கைகொடுக்க எதுவும் இருந்திருக கவில்லை. அவர்களது ஒட்டுமொத்த வாழ்வாதாரமும் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் இன்னும் சில கைத்தொழில்கள் என்பனவற்றை முற்றுமுழுவதுமாக நம்பியே இருந்தது. அவை கலவரங்களின்போது வாழ்வாதாரத்துக்கு கைகொடுக்கவில்லை. ஈடு செய்ய முடியாத இழப்பை எதிர்கொண்ட மக்களுக்குக் கைகொடுத்தது கல்வி ஒன்றுதான்.

இனியும் இழப்பதற்கு எதுவுமில்லை என்று ஏங்கித் தவிக்கின்ற சிறுபான்மையினருக்கும் கல்விதான் கரை சேர்க்கும் என்று எல்லோரும் நம்புகின்றோம்.

இனத்தால், மதத்தால், மொழியால் பிளவுபட்டுப்போன நம் தேசத்தை மீள இணைக்க இன, மத, மொழி பேதங்களுக்கப்பால் இந்தக் கல்வி ஒன்றுதான் கைகொடுக்கும் என்பதும் தெளிவான விடயம்.

சிறந்த கல்வியறிவின் மூலம்தான் நாம் வேறுபாடுகளைத் தகர்த்தெறிய முடியும்.

நாம் இலங்கையர் என்ற சிறப்பு அடையாளத்தை பெறுவதற்கு ஒருங்கிணைப்பை, கூட்டுறவை, சகவாழ்வை எவ்விடத்தில் இழந்திருக்கின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். மனப்பூர்வமாகக் கொண்டாடுவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை வளர்த்தெடுப்பதில் நாம் தவறியிருக்கிறோமா என்ற கவலை உள்ளது. இந்தக் குறைபாடுகளை கல்வியினாலேயே சீர் செய்ய முடியும்.

இளமை முதல் இறக்கும் வரை இடைவிடாது கற்றாலும் ஒருவரால் கல்வியில் முழுமை அடைய முடியாது. எனவேதான் “கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு” என்னும் தொடர் மக்களிடையே நிலவுகிறது.

கற்றவர்க்குக் கல்வியே ஒரு செல்வமாக உதவும் தன்மை கொண்டது. கல்விதான் இவ்வுலகில் வாழும் தகுதியை நமக்குத் தருகிறது. கல்விதான் நல்லதையும் தீயதையும் பகுத்தறியக் கற்றுக் கொடுக்கிறது.

பேதம், இழிவு, அடிமை நிலை அனைத்தையும் அகற்றி உயர்வளிக்கும் ஒரே கருவி கல்விதான்.

இளமையில் கல் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். இளவயதில் படிப்பது நம் மனதில் அப்படியே பசு மரத்தாணிபோல் பதிந்துவிடும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிபதிகளாக, அதிகாரிகளாக, வழக்குரைஞர்களாக, மருத்துவர்களாக, பொறியாளர்களாக, விஞ்ஞானிகளாக ஏன் ஒரு நல்ல மனிதனாக வருவதற்கு கல்விதான் உதவும்.

நல்ல புத்தகங்கள் அறிவுக் கண்ணைத் திறக்கும் திறவுகோல். கல்வி ஒருவரை மட்டும் மேம்படுத்தாது. அவரைச் சார்ந்தவர்களையும், சமுதாயத்தையும், ஏன் முழு நாட்டையுமே உயர்த்த அது உதவும்.

அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்விதான். அதற்கு வேறு எதுவும் ஈடாகாது என்பது உணர்த்தப்படுகிறது. கல்வி வெள்ளத்தால் அழியாது, தீயால் கருகாது, எவராலும் கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது.

செல்வந்தர்கள் காலச் சூழ்நிலையால் ஏழைகளாகலாம். ஆனால் கல்வி அறிவு பெற்றவர்கள் ஒரு போதும் ஏழ்மை ஆக முடியாது.

“பெற்ற பிள்ளை கைவிட்டாலும், கற்ற கல்வி கைவிடாது” என்று மகாத்மா காந்தியடிகள் குறிப்பிடுகிறார்.

உலகையே மாற்றக்கூடிய பலமான ஆயுதம் ஒன்று உண்டென்றால் அது கல்விதான். தனி மனிதனையும், சமூகத்தையும் மாற்றி நல்வழியில் அழைத்துச் செல்லக்கூடிய சிறப்பு கல்விக்கு உண்டு. எனவே நிலையான செல்வத்தை அடைய எப்போதும் ஆவலாக இருக்க வேண்டும். எந்த சமூகத்தை சேர்ந்தவராக இருந்தாலும், கல்வி கற்பதில் இருந்து விலகிச்செல்வது ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தும்.

செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம் ஆகும். இத்தகைய உயர்ந்த செல்வத்தை அடைந்து கொள்ள பிற எந்த செல்வத்தையும் இழக்கலாம். ஆனால் கல்விச் செல்வத்தை எக்காரணம் கொண்டும் இழக்கக்கூடாது.

கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்று அவ்வையார் கூறுகிறார். அதாவது பிச்சை எடுத்தாவது கல்வியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அதன் அர்த்தம்.

நம் தலைவர்கள் போராடிப் பெற்றுத் தந்தது இலவசக் கல்வி. அன்றைக்குக் கட்டணம் செலுத்தி, பணம் படைத்தோர் மட்டுமே கற்ற கல்வி, இன்றைக்கு கட்டாயமாக எல்லாக் குழந்தைகளுக்கும் வழங்கப்படுகிறது.

அரசாங்கப் பாடசாலைகளில் இலவசக் கல்வி. இலவச சீருடை, இலவச செருப்பு, இலவச புத்தகம், இலவச கணினி தொழினுட்ப வசதி அதனோடு சேர்த்து இப்பொழுது படிப்பைத் தொடங்குவதற்குத் தேவையான கல்வி உபகரணங்களை வாங்குவதற்கு ஒரு மாணவருக்கு தலா 6000 ரூபாய் உதவு தொகை வழங்கப்படுகிறது.

2025ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 1, 25,000 மாணவர்களுக்கு 6,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும பயனாளிகளின் பிள்ளைகளுக்கான 6000 ரூபாய் கொடுப்பனவு திறைசேரி மூலம் கடந்த 27.12.2024 அன்று வங்கிக் கணக்குக்கு ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள பாடசாலை மாணவர்களுக்கு 6000 ரூபாய் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொருளாதார நெருக்கடியின் எதிர்மறையான முடிவுகளால் குழந்தைகளின் கல்வியில் கணிசமான எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, பாடசாலை செல்லும் குழந்தைகளில் 55 சதவீதம் பேர் கல்வியில் பின்தங்கிய விளைவுகளைக் கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் இந்த சதவீதம் இதையும் விட இன்னும் அதிகமாக இருப்பதையும் அவதானிக்க முடிவதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய பாதிக்கப்படக்கூடிய பாடசாலை மாணவர்களின் கல்வியில் பாதகமான தாக்கத்தைக் குறைக்கும் நோக்கத்தில், பாடசாலை மாணவர்கள் தமக்குத் தேவையான கல்வி உபகரணங்களை வாங்குதற்கு அரசாங்கத்தின் இந்த உதவு தொகை உதவிகரமானதாக இருக்கும்.

ஒரு குடும்பத்தில் 4 பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்பவர்களாயின் அவர்கள் மூலமாக அந்தக் குடும்பத்திற்கு 24 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. இது அந்தக் குடும்பம் இதுவரை கல்விக்காகச் செலவிட்ட பணத்தை மீதப்படுத்தும். குடும்பச் சுமையைக் குறைக்கும்.

இவ்வாறு உலகில் கல்விக்காக உதவும் பெருமைப்படக் கூடிய தேசமாக இலங்கை இடம்பிடித்துள்ளதை சிலாகிதது்ப்

**பாடசாலை ஒன்றை திறப்பது சிறைச்சாலை ஒன்றை மூடுவதற்குச் சமம்..!**

பேசத்தான் வேண்டும்.

இதேவேளை, உயர் கல்வியைப் பெறும் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனவும், எந்தவொரு காரணங்களுக்காகவும் பிள்ளைகளுக்கு கல்விக்கான சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டுமெனவும் பிரதமர் கலாநிதி ஹறினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டின் இறுதி நாளன்று (டிசெம்பர் 31) மஹரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டபோதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்காலத்தில் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் பிள்ளைகள் இருப்பது மிகவும் குறைவாகவே உள்ளது. விசேடமாக ஆண் பிள்ளைகள் கல்விச் செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்வது அதிகரித்துள்ளது. எந்தவொரு சமூக, பொருளாதாரக் காரணங்களை அடிப்படையாக கொண்டும் பிள்ளைகளுக்கான கல்விச் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கல்வி கற்பதில் சலிப்போ, வெறுப்போ, அலுப்போ கொள்ளக் கூடாது.

படிப்பில் விருப்பத்தை உண்டாக்கிக் கொண்டால் படிப்பு எளிதாகவும் சுகமாகவும் மாறும். கல்வியை. கசப்பாக எண்ணாமல் பெருமையாக எண்ணிப் படிக்க வேண்டும

இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது கல்வியே ஆகும். நாட்டில் வளர்ச்சியை முன்னோக்கி கொண்டு செல்லவும், வறுமையை போக்கவும் கல்வி மிக, மிக முக்கியமான தாகும்.

அந்தக் கல்வியைப் பெறுவது அனைவரினதும் உரிமை. அந்த உரிமையை விட்டுக் கொடுக்காமல் ஆர்வத்துடன் கற்க வேண்டும்.

இதேவேளை கசப்பான சில உண்மைகளையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவூட்ட வேண்டியுள்ளது. வருடாவருடம் மாணவர்களிடம் இலவசமாக ஒப்படைக்கப்படுகின்ற பாடப் புத்தகங்களை மாணவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளும்போது அவற்றை கசங்காமல், மடியாமல், உருக்குலையாமல் புத்தம் புதிதாகவே மாணவர்கள், ஆசிரியர்களிடம் திரும்ப ஒப்படைக்கின்றார்கள் என்று முன்னர் ஒரு தடவை கல்வி அதிகாரி ஒருவர் கவலையோடு சுட்டிக்காட்டியிருந்தார்.

இது எதைக்காட்டுகின்றது என்றால் புத்தகங்கள் விரித்துப் பார்க்கப்படவில்லை என்பது தெரிகிறது என்றும் அவர் ஆதங்கப்பட்டார். வாசிப்புப் பழக்கம் என்பது கிட்டத்தட்ட இல்லை என்ற நிலையிலேயே மாணவர்கள் உள்ளார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும். என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கும் புத்தகங்களின் பெறுமதியை மதிப்பதில்லை. சாதாரணமாக அவர்கள் கைவசம் இருக்கின்ற பாட நூல்கள், அவை சிறந்த அறிவுப் பொக்கிஷங்கள்.

இலவசமாக விநியோகிக்கப்படும் பாடப்புத்தகங்களில் அதன் விலைகள் எவ்வளவு என்று ஒரு காலத்தில் அச்சிடப்பட்டது. இது குறைந்த பட்சம், மாணவர்களும் பெற்றோரும் இந்தப் புத்தகங்களின் விலைப் பெறுமதியையாவது அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதால்தான் இவ்வாறு செய்யப்பட்டது. இந்த நிலைமைகளையும் சறுக்கல்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. சிந்திப்போம் செயற்படுவோம். சமம் என்று பொருள்பட சான்றோர்கள் சிலாகித்துச் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அதில் அர்த்தம் உள்ளது. ஏனெனில், மனித சமுதாயத்தை சிறந்த செல்நெறியோடு வழிநடத்திச் செல்வதற்கு கல்வி முக்கியம். அந்த வாய்ப்புக்கள் கிடைக்கவில்லையெனில் மனித சமுதாயம் தட்டழிந்து போய் விடும்.

கடந்த 30 வருட ஆயுத மோதல்களால் சீர்குலைக்கப்பட்ட இலங்கைச் சமூகங்களின் வாழ்க்கையை இயல்பாக மேம்படுத்துவதற்கு கல்வி ஒன்றே கை கொடுக்கும்.

ஏனெனில், கல்வி இயற்கை, செயற்கை இடர்களினால் அழிந்து போவதில்லை. மனித நாச வேலைகளினால் கல்வி பாதிப்பை எதிர்கொள்ளாது.

இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட இன வன்முறைகளின்போதும் தொடர்ந்து இடம்பெற்று வந்த யுத்தத்தின்போதும் இலங்கைச் சமூகத்தினர் அனைவரும் தமது உயிர் உடமைகள், வாழ்வாதாரம் தொழிற் துறைகள், வாழ்விடங்கள் என்பனவற்றை இழந்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

அந்தவேளையில் அவர்களு க்கு கைகொடுக்க எதுவும் இருந்திரு க்கவில்லை. அவர்களது ஒட்டுமொத்த வாழ்வாதாரமும் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் இன்னும் சில கைத்தொழில்கள் என்பனவற்றை முற்றுமுழுவதுமாக நம்பியே இருந்தது. அவை கலவரங்களின்போது வாழ்வாதாரத்துக்கு கைகொடுக்கவில்லை. ஈடு செய்ய முடியாத இழப்பை எதிர்கொண்ட மக்களுக்குக் கைகொடுத்தது கல்வி ஒன்றுதான்.

இனியும் இழப்பதற்கு எதுவுமில்லை என்று ஏங்கித் தவிக்கின்ற சிறுபான்மையினருக்கும் கல்விதான் கரை சேர்க்கும் என்று எல்லோரும் நம்புகின்றோம்.

இனத்தால், மதத்தால், மொழியால் பிளவுபட்டுப்போன நம் தேசத்தை மீள இணைக்க இன, மத, மொழி பேதங்களுக்கப்பால் இந்தக் கல்வி ஒன்றுதான் கைகொடுக்கும் என்பதும் தெளிவான விடயம்.

இதேவேளை, உயர் கல்வியைப் பெறும் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து விலகுவது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டுமெனவும், எந்தவொரு காரணங்களுக்காகவும் பிள்ளைகளுக்கு கல்விக்கான சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டுமெனவும் பிரதமர் கலாநிதி ஹறினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டின் இறுதி நாளன்று (டிசெம்பர் 31) மஹரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டபோதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்காலத்தில் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் பிள்ளைகள் இருப்பது மிகவும் குறைவாகவே உள்ளது. விசேடமாக ஆண் பிள்ளைகள் கல்விச் செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்வது அதிகரித்துள்ளது. எந்தவொரு சமூக, பொருளாதாரக் காரணங்களை அடிப்படையாக கொண்டும் பிள்ளைகளுக்கான கல்விச் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கும் புத்தகங்களின் பெறுமதியை மதிப்பதில்லை. சாதாரணமாக அவர்கள் கைவசம் இருக்கின்ற பாட நூல்கள், அவை சிறந்த அறிவுப் பொக்கிஷங்கள்.

இலவசமாக விநியோகிக்கப்படும் பாடப்புத்தகங்களிலஅதன் விலைகள் எவ்வளவு என்று ஒரு காலத்தில் அச்சிடப்பட்டது. இது குறைந்தபட்சம், மாணவர்களும் பெற்றோரும் இந்தப் புத்தகங்களின் விலைப் பெறுமதியையாவது அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதால்தான் இவ்வாறு செய்யப்பட்டது. இந்த நிலைமைகளையும் சறுக்கல்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. சிந்திப்போம் செயற்படுவோம்.

# ஒடிசா மாநில தலைநகரில் 18வது பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு



காயத்ரி விக்கிரமசிங்க



வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒன்றிணைக்கும் பிரவாசி பாரதிய திவாஸ் அமைப்பின் 18வது மாநாடு எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை கிழக்கிந்திய மாநிலமான ஒடிசாவின் தலைநகர் புவனேஸ்வரில் நடைபெறுகிறது.

இந்திய வெளியுறவு அமைச்சும் ஒடிசா மாநில அரசாங்கமும் இணைந்து விமரிசையாக நடத்தும் இந்த மாநாட்டின் தொனிப்பொருள் “வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கு புலம்பெயர் இந்தியர்கள் செய்யும் பங்களிப்பு” (Diaspora's Contribution to Viksit Bharat) என்பதாகும். மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு திரும்பிய 1915 ஜனவரி 9 ஆம் திகதியை நினைவுகூரும் வகையில் பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு 2003 ஆம் ஆண்டு முதல் இந்திய அரசாங்கத்தினால் நடத்தப்பட்டுவருகிறது. முதலில் அந்த மாநாடு நடத்தப்பட்டபோது இந்தியாவில் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் பாரதிய ஜனதா அரசாங்கம் பதவியில் இருந்தது. பிறகு அடுத்த வருடம் காங்கிரஸ் அரசாங்கம் பதவிக்கு வந்தது. அந்த அரசாங்கத்தில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த வயலார் ரவி வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் நல அமைச்சராக நியமிக்கப்பட்டு இந்த பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடுகளை வருடாந்தம் நடத்தி வந்தது. 2014 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி தலைலைமையில் மீண்டும் பாரதிய ஜனதா பதவிக்கு வந்த பிறகு பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடு இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. இந்த மாநாடுகளின் காரணமாக வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு வாழ்நாள் விசா வழங்கும் திட்டம் (Overseas Indian Citizen Visa) நடைமுறைக்கு வந்தது. இந்த திட்டத்தின் மூலம் சுமார் 21 ஆயிரம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பயனடைந்தனர். ஆனால் அண்மைக்காலமாக இந்த விசாவை பெறுவதில் இலங்கைவாழ் இந்திய வம்சாவழியினர் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள். இவர்களின் மூதாதையர்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்படுவதற்கு முன்னர் அவர்கள் வாழ்ந்த தமிழகக் கிராமங்களின் வதிவிடச் சான்றிதழ்கள் இவர்களிடம் கோரப்படுவதே இந்த சிகல்களுக்கு முக்கிய காரணமாகும். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு குடியுரிமையை வழங்குவதற்கு இதுவரையில் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றிய சட்டங்களின் பிரகாரம் இலங்கை குடிமக்களாகிவிட்ட இந்திய வம்சாவளி சமூகத்தினருக்கு வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்கான வாழ்நாள் வதிவிட (OCI) விசாவைப் பெறுவதில் எந்த சிக்கலும் இல்லாதிருப்பதை இந்திய அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.

இன்று இந்திய வெளியுறவு அமைச்சராக இருக்கும் டாக்டர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரும் தற்போது வெளியுறவு அமைச்சின் செயலாளராக இருக்கும் டாக்டர் விக்ரம் மிஸறி, தற்போதைய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பதவிகளில் பணியாற்றியவர்கள் என்பதால் இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்து கொண்டவர்கள். அவர்கள் இந்த விசேட வாழ்நாள் விசாவைப் பெறும் விடயத்தில் எம்மவர்கள் பிரச்சினைகளை களைவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் இந்த மாநாடு இந்திய அரசாங்கத்துடனும் மக்களுடனும் வெளிநாடுவாழ் இந்திய சமூகத்தின் ஊடாட்டத்தை பலப்படுத்துவதற்கும் அவர்களை தங்களது வேர்களுடன் இணைப்பதற்கும் உதவுகிறது. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் தொகை சுமார் 3 கோடி 50 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் வெளிநாடுவாழ் இந்திய பேராளர்கள் புவனேஸ்வர் மாநாட்டில் பங்கேற்றார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வழமை போன்று இந்த தடவையும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பிரதம உரை நிகழ்த்துவார்.

புவனேஸ்வர் மாநாட்டில் பங்கேற்பவர்களுக்கான வசதிகளை செய்வதில் ஒடிசா மாநில முதலமைச்சர் மோகன் சரண் மஜ்ஹி தலைமையிலான அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. மகாநாட்டு பேராளர்கள் கலந்து கொள்வதற்கான பெருவாரியான வனப்புமிகு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.



கலிங்க தேசம் என்று போற்றப்படும் ஒடிசா மாநிலத்தின் முப்பதுக்கும் அதிகமான கண்கவர் சுற்றுலாத் தலங்களுக்கு பேராளர்கள் அழைத்துச் செல்லப்படவிருக்கிறார்கள். இசை நிகழ்ச்சிகள், மலர்க்கண்காட்சி, ஒடிசா நடனம், பழங்குடியினர் நடனம் போன்றவையும் அவற்றில் அடங்கும்.



புலம்பெயர் இந்திய வம்சாவளி சமூகத்தவர்கள் தாங்கள் வாழும் நாடுகளைச் செழிப்படையச் செய்ய மகத்தான பங்களிப்புகளை வழங்கி வருகிறர்கள். இந்தியா இன்று பொருளாதார வளர்ச்சியில் உலகில் முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கும் நிலையில் வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்களிப்பையும் உச்சபட்சத்துக்கு பெற்றுக்கொள்ளும் திட்டமும் இந்த பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடுகளின் குறிக்கோள்களில் முக்கியமானதாக இருக்கிறது. இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி சமூகத்தவர்கள் இன்று பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை கண்டுவரும் நிலையில் பிரவாசி பாரதிய திவாஸ் போன்ற சர்வதேச மகாநாடுகளில் இலங்கை வாழ் இந்திய சமூகத்தின் பங்களிப்புக்கு கூடுதல் ஊக்கம் அளிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாடுகளுக்கு இலங்கைவாழ் இந்திய சமூகப் பேராளர்கள் கலந்து கொண்டாலும் அங்கு இடம்பெறுகின்ற நிகழ்வுகளில் முக்கிய பேச்சாளர்களாக அவர்களை அழைப்பதை இதுவரையில் காணமுடியவில்லை. பிரதானமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட சமூகம் அண்மைய தசாப்தங்களில் கல்வித்துறையில் பாரிய முன்னேற்றத்தை அடைந்து வருகிறது. அந்த சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்களை, துறைசார் நிபுணர்களை இத்தகைய சர்வதேச மாநாடுகளில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கச் செய்வது அவர்கள் அடைந்துவரும் முன்னேற்றத்தை உலக அரங்கில் பறைசாற்றுவதாக அமையும்.

கடந்த இரு தசாப்தங்களில் 17 பிரவாசி பாரதிய திவாஸ் மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இதுவரையில் இலங்கைவாழ் இந்திய சமூகத்தைச் சேர்ந்த இருவருக்கே அதி உயர் பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டிருக்கிறது.

2011 ஆம் ஆண்டில் தொழிலதிபர் மனோ செல்வநாதன் அவர்களும், 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் முதல்தரமான தமிழ் பத்திரிகையான வீரகேசரியை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் குமார் நடேசன் அவர்களும் அந்த விருதை பெற்றிருக்கிறார்கள். தங்கள் மத்தியில் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் முக்கியஸ்தர்களின் பங்களிப்புகளை அங்கீகரித்து மேலும் பலருக்கு பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கப்படவேண்டும் என்பது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி சமூகத்தின் எதர்பார்ப்பாக இருக்கிறது.



இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தை அண்மையில் மேற்கொண்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு அவர் இந்திய தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் உதவியிருக்கின்றன. அத்தகைய ஒரு பின்புலத்தில் புவனேஸ்வரில் பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாட்டில் பங்கேற்பதில் இலங்கை வாழ் இந்திய சமூகத்தின் பிரதிநிதிகள் பெருமகிழ்சியடைகிறார்கள்.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வரலாறு காணாத படுமோசமான பொருளாதார நெருக்கடியில் மூழ்கிய இலங்கை மீண்டெழுவதற்கு இந்தியா செய்த அவசர உதவியை இலங்கையர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் இந்தியா செய்த அந்த தருணமறிந்த உதவிக்கு புதுடில்லியில் இந்திய தலைவர்களிடம் நன்றி தெரிவித்தார். தங்களது தாய்த்தேசம் இலங்கை மீண்டெழுவதற்கு செய்த உதவி குறித்தும் அது தொடர்பில் இலங்கை மக்கள் இந்தியா மீது நன்றியுணர்வுடன் இருப்பது குறித்தும் இலங்கைவாழ் இந்திய வம்சாவளி சமூகம் பெருமிதமடைகிறது.

இத்தகைய உறவு வளர்ச்சிக்கு மத்தியில் பிரவாசி பாரதிய திவாஸ் மாநாட்டில் இலங்கைவாழ் இந்திய சமூகப் பேராளர்கள் பெருமையுடன் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 8ஆம் திகதி காலை வைபவ ரீதியாக மாநாட்டை ஆரம்பித்து வைக்க ஜனவரி 9 ஆம் திகதி இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு பிரவாசி சமன் விருதுகளை வழங்கி வெளிநாட்டு இந்தியர்களை கௌரவிப்பர். இந்திய வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் ஒடிசா மாநில முதலமைச்சர் மோகன் சரண் மாச்சி, ஆளுநர் ஹரி பாபு கம்பம்பதி கலந்து சிறப்பிக்கின்றனர்.

# ஐரோப்பிய சந்தையில் மொஸ்கோவின் ஆதிக்கத்தை குறைத்த உக்ரைன்




உக்ரைன் வழியாக செல்லும் ரஷ்யாவின் சோவியத் ஒன்றிய கால எரிவாயு குழாய்களை புத்தாண்டு தினத்தன்று உக்ரைன் நிறுத்தியதால் ஐரோப்பாவுக்கான ரஷ்யாவின் எரிவாயு ஏற்றுமதி முடிவுக்கு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஐரோப்பிய எரிவாயு சந்தையில் பல தசாப்தகால மொஸ்கோவின் ஆதிக்கத்தை இந்த தடை முடிவுக்கு கொண்டுவருவதாக குறித்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா உக்ரைன் போர் மூன்று ஆண்டுகளாக தொடர்கின்ற போதிலும் எரிவாயு குழாய்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தன. ரஷ்யாவின் எரிவாயு நிறுவனமான காஸ்ப்ரோம், உக்ரைனுடனான போக்குவரத்து ஒப்பந்தத்தை புதுப்பிக்க மறுத்ததை அடுத்து குழாய்களின் செயல்பாடு தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. ஸ்லோவாக்கியா மற்றும் ஆஸ்திரியா போன்ற நாடுகளுக்கு உக்ரைன் வழியாக ரஷ்ய எரிவாயுவை விநியோகித்து வருகிறது. குழாய்கள் நிறுத்தப்பட்டுள்ள போதிலும் கருங்கடலின் கீழ் கேபிள் குழாய் வழியாக ஹங்கேரிக்கு ரஷ்யா தொடர்ந்து எரிவாயுவை விநியோகிக்கின்றது. ஆனால் உக்ரைனின் அயல் நாடான மால்டோவாவில் இருந்து பிரிந்த ரஷ்ய சார்பு பகுதியான

**புத்தாண்டின் பின் போர் தீவிரமடையும் அபாயம்**



வுசயளென ைநளவசயை உக்ரைன் வழியான எரிவாயுவையே நம்பியுள்ளது. எரிவாயு விநியோகம் இன்மையால் நேற்று முன்தினம் புதன்கிழமை Transd niestria வீடுகளுக்கு வெப்பமூட்டும் மற்றும் சூடான நீர் விநியோகிக்கும் செயல்பாடு துண்டிக்கப்பட்டது. உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி வெளியிட்டுள்ள டெலிகிராம் செய்தியில், தனது நாடு வழியாக ஐரோப்பாவிற்கு மேற்கொள்ளப்பட்ட ரஷ்யாவின் எரிவாயு பரிமாற்றத்தின் முடிவு “மாஸ்கோவின் மிகப்பெரிய தோல்விகளில் ஒன்றாகும்” எனக் கூறியுள்ளதுடன், ஐரோப்பாவிற்கு அதிக எரிவாயுவை வழங்குமாறு அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார். ரஷ்யாவும் முன்னாள் சோவியத் யூனியனும் அரை நூற்றாண்டாக ஐரோப்பிய எரிவாயு சந்தையில் பெரும் பங்கைக் கட்டியெழுப்பியுள்ளன. இது சந்தை தேவையில் 35 வீதத்தை பூர்த்தி செய்கிறது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம், உக்ரைனில் போர் தொடங்கியதில் இருந்து நோர்வேயில் இருந்து குழாய் எரிவாயுவையும், கட்டார் மற்றும் அமெரிக்காவிலிருந்து எல்.என்.ஜி யை வாங்கியதன் மூலம் ரஷ்யாவை சார்ந்திருப்பதைக் குறைத்துள்ளது. போக்குவரத்து ஒப்பந்தத்தை நீடிக்க மறுத்த உக்ரைன், ரஷ்ய எரிவாயுவை கைவிடுவதற்கான முடிவை ஐரோப்பா ஏற்கனவே எடுத்துள்ளதாகக் கூறியுள்ளது. “ரஷ்ய எரிவாயு போக்குவரத்தை நாங்கள் நிறுத்திவிட்டோம். இது ஒரு வரலாற்று நிகழ்வு. ரஷ்யா தனது சந்தைகளை இழந்து வருகிறது. அது நிதி இழப்பை சந்திக்கும்” என்று உக்ரைனின் எரிசக்தி அமைச்சர் ஜெர்மன் கலுஷ்செங்கோ தெரிவித்துள்ளார். ஸ்லோவாக்கியா தனது வாடிக்கையாளர்களுக்கு ஜேர்மனி மற்றும் ஹங்கேரியில் இருந்து குழாய்கள் வழியாக எரிவாயுவை வழங்குவதாகக் கூறியுள்ளது. ஆனால் இதற்கு விநியோக செலவுகள் அதிகமாகும். எனவே, இந்த விடயத்தில் ரஷ்யாவின் நகர்வு உக்ரைன் உடனான போரை புத்தாண்டின் பின்னர் மேலும் வலுவாக்கும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# 'ஊழலை ஒழிக்க முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்'

(ஏ.எச்.ஹஸ்பர்)

ஊழலை ஒழிக்க வேண்டுமென நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமே தவிர அரசியலை இலக்காக கொண்டுசெல்லக் கூடாதென பிரதியமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலை வருமான அருண் கேமச்சந்திர தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் வெள்ளிக்கிழமை (03) பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் நெறியாள்கையின் கீழ் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறை பிரதியமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அருண் கேமச்சந்திர தலைமையில் இடம் பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் குறைபாடுகள் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

குறிப்பாக மனித – யானை மோதல், வீதி அபிவிருத்தி ,



இயற்கை அனர்த்தத்தின் போதான வடிகான் நிலவரம், சட்ட விரோத மண் அகழ்வு, விவசாயிகளுக்கான பசளை , கல்வி சுகாதாரம் என பல முக்கிய தீர்மானங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

குறித்த கூட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதி செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட திணைக்கள பொறுப்பதிகாரிகள் துறைசார் அரசாங்க உத்தியோகத்தர்கள், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், சண்முகம் குகதாசன் ஆகியோர்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சகல மாணவர்களுக்கும் 6,000 ரூபா கொடுப்பனவு வழங்குமாறு கோரிக்கை

(முகம்மட் முக்தார்)

அஸ்வெசும பயனாளிகள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் வழங்கப்படும் பாடசாலை உபகரணங்களுக்கான 6,000 ரூபா கொடுப்பனவை, சகல மாணவர்களுக்கும் பெற்றுக் கொடுக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கல்வித்துறை சார் தொழிற் சங்கங்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

பாடசாலை உபகரணங்களின் அதிகரித்த விலை காரணமாக தமது பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதில் அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள், மத்திய தர வர்க்கத்தினரான பெற்றோர்கள் அதிகளவு அசௌரியங்களை எதிர்கொண்டு வருவதாலேயே மேற்படி சங்கங்கள் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி பாடசாலை உபகரணங்களுக்காக விதிக்கப்பட்ட சகல வகையான வரிகளையும் நீக்குவதாக வாக்குறுதி அளித்தபோதிலும் அதற்குப் பதிலாக தற்போதைய நடைமுறை அரசால் கொண்டு வரப்பட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளிகளின் பிள்ளைகளும், வசதி குறைந்த குடும்பங்களின் பிள்ளைகளும் பயன்பெறும் வகையில் 6,000 ரூபா கொடுப்பனவு அண்மையில் ஜனாதிபதியினால் அறிவிக்கப் பட்டது.

பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களிடையே சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே இலவச பாடநூல், இலவச சீருடை, இலவச காலை உணவு என்பன பாகுபடின்றி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆனால் உபகரணக் கொள்வனவில் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் கல்வியில் சம வாய்ப்பு வழங்கும் அரச கொள்கைக்கு முரணாக உள்ளமை எதிர்காலத்தில் இலவச பாடநூல், சீருடை விடயத்திலும் தாக்கம் செலுத்தப்படும் சாத்தியமுள்ளது.

தற்போது வழங்கப்பட்டு வரும் அஸ்வெசும கொடுப்பனவுகளுக்காக பயனாளிகள் தெரிவு செய்ததில் பல்வேறு குளறுபடிகள் கடந்த காலத்தில் இடம் பெற்றுள்ளன. வருமானம் கூடியோரும், சமூகப் பிரமுகர்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக அரச ஊழியர்களும், ஓய்வூதிய தாரர்களும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். இதனை அரசாங்கம் கவனத்தில் கொண்டு தமது தீர்மானத்தை மாற்றியமைக்க வேண்டும்.

ஆகக்குறைந்தது அச ஊழியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் மத்திய தர வர்க்கத்தினரின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணக் கொள்வனவில் அறவிடப்படும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமெனவும் இந்தச்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

# திருக்கோவில் செயலகம் மீண்டும் சாதனை



(எஸ்.கார்த்திகேசு)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தில் அதிகளவான அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டதில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலகமானது அம்பாறை மாவட்டத்தில் முதலாவது இடத்தினையும் தேசியமட்ட விருதுக்காக தெரிவு செய்யப் பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேச செயலகமானது தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் இவ்விருதினை பெற்றுள்ளது.

## அக்கரைப்பற்றில்

# மக்கள் தொடர்பாடல் காரியாலயம் திறப்பு



(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று மாநகரில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயம் திறந்துவைக்கும் நிகழ்வு தேசிய மக்கள் சக்தியின் அக்கரைப்பற்று செயற்பாட்டாளர் எம்.ஐ.அபூசஹீட் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதி யாக கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ கலந்து கொண்டு திறந்து வைத்தார். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான

அபூபக்கர் ஆதம்பாவா, மஞ்சுள ரத்நாயக்க, பொத்துவில் தொகுதி தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களான றமீஸ் முஹைடீன், சுல்தான் சத்தார் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சியும்



(ஏ.எச்.ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் தையல் பயிற்சி கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கண்காட்சி நிகழ்வும் புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவுக் கட்டிடத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் 2025 கற்கைநெறி செயற்பாடுகள். 2024 மாணவர்களின் கைவினை பொருட்களின் கண்காட்சி மற்றும் 2022 மாணவர்களின் கற்கை நெறியை பூரணப்படுத்தியமைக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். பர்கானா, புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரேம்குமார், புதுக்குடியிருப்பு கிராம அலுவலர் சுதர்சனி, பெற்றோர் நலன் விரும்பிகள் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு வேலையற்ற பட்டதாரிகளுக்கும் ஆளுநருக்குமிடையிலான கலந்துரையாடல்



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை (03) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.


2024ஆம் ஆண்டு ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம், கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், 2025ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு உள்ளிட்டவை குறித்து ஆளுநர் கலந்துரையாடினார்.

ஆளுநர் இங்கு தொடர்ந்தும் கருத்துதெரிவிக்கையில், 2024ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் ஆட்சேர்ப்பு இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும், இம்மாதத்தின் பிற்பகுதியில் பணிநியமனம் வழங்கப்படும் எனவும், 2025ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் நியமனத்திற்கான அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளை பரிசீலித்து நியாயமான முறையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆட்சேர்ப்பு செயல்முறை மிகவும் சிக்கலானது என்றும், ஆட்சேர்ப்புக்கு தேவையான நடவடிக்கைகள் கூடிய விரைவில் செய்யப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

# 26 ஆவது தேசிய ஆக்க இலக்கிய பிரதி விருது விழா



26 ஆவது தேசிய ஆக்க இலக்கிய பிரதிகளுக்கு விருதுகள் வழங்கும் விழா கடந்த மாதம் 28 ஆம் திகதி கொழும்பு-7 அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் கலாசார அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி, முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு வெற்றியாளர் களுக்கு விருதுகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக தேசிய நூலகச் சேவை சபைத் தலைவர் கலாநிதி ரத்னஸ்ரீ விக்கிரமசிங்க கலந்து கொண்டதுடன், சிங்கள, தமிழ், ஆங்கில இலக்கிய அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு விருதுகளை வழங்கினார்கள்.

இவ்விழாவில் ஆங்கில, சிங்கள, தமிழ் மொழிகளில் சிறந்த பிரதிகள் வழங்கிய எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. தமிழில் சிறந்த ஆக்கப் பிரதிகளில் சம்மாந்துறை சேர்ந்த சித்தி ரபீக்கா பாயிஸின் "வளகு வாப்பா போடியின் ஊஞ்சல்" எனும் சிறுகதைத் தொகுதி பெற்று கொண்டது, சிறந்த கவிதை பிரதிக்கான விருதினை பதுளையை சேர்ந்த கிருஷ்ணசாமி அருளின் "காலா தீதமும் சாம்பற்குவியலும்" என்ற கவிதைத் தொகுதியும் பெற்றுக் கொண்டது.

இவ்விழாவில் தமிழ் மொழிப் போட்டிக்கு இணைப்பாளராக கடமையாற்றிய மேமன்கவியும் கௌரவிக்கப்பட்டார்.

# திருமலையில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

(கியாஸ் ஷாபி)

திருகோணமலை – வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, குளம் ஒன்றிலிருந்து சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வான்எல பகுதியைச் சேர்ந்த 40 வயதான சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான கொட்டகெடகே நிரோஷன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். 31.12.2024 திகதி மாலை, இவர் விருந்தொன்றுக்கு சென்று வருவதாக, மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையிருந்து தெரிய வந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# லிட்டில் ஏஞ்சல்ஸின் வருடாந்த கலைவிழா

பொகவந்தலாவை லிட்டில் ஏஞ்சல்ஸ் முன்பள்ளி தனது 15ஆண்டு நிறைவினை ஞாயிற்றுக்கிழமை (05) கொண்டாடுகிறது.

கடந்த 15 ஆண்டுகளாக பொகவந்தலாவையில் தனக்கென தனி இடத்தை தடம் பதித்து பயணிக்கும் லிட்டில் ஏஞ்சல்ஸ் முன்பள்ளி 05 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொகவந்தலாவ ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் கோலாகலமாக கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விழாவில் இப்பள்ளியில் கல்வி பயின்று வெளியேற உள்ள மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கவும் நினைவு மலர் வெளியீடும், இப்பள்ளியில் கல்வி பயின்று பல்துறை சாதனையாளர்களாக திகழ்ந்துக்கொண்டிருக்கும் முன்னாள் மாணவர்கள் நகர் ஊர்வலமாக அழைத்து வந்து பொகவந்தலாவின் பெருமையை உலகுக்கு பறைசாற்றும் விதமாக அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற உள்ளது.

# உப வேந்தரின்றி இயங்கும் தென்கிழக்கு பல்கலை

(முகம்மட் முக்தார்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கான புதிய உப- வேந்தர் இதுவரை நியமிக்கப்படாதுள்ளதாக இலங்கை தென்கிழக்கு கல்விப் பேரவையின் தவிசாளர் எம்.எம்.எல் அகமட் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இப்பல்கலைக்கழகத்தின் உப- வேந்தராக கடமையாற்றியவரின் பதவிக்காலம் கடந்த ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடைந்த போதிலும் அக்காலப்பகுதி ஜனாதிபதி தேர்தல் காலமாக இருந்தமை காரணமாக உப – வேந்தர் நியமனம் இடம்பெறவில்லை.

இதனால் பல்கலைக்கழக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல பதில் உப – வேந்தராக அப்பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் ஒருவர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நியமனம் செய்யப் பட்டார்.

தற்போது ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் என யாவும் நடைபெற்று முடிந்து விட்டமையால் நிரந்தர உப – வேந்தரை இப்பல்கலைக் கழகத்தி ற்கு நியமனம் செய்ய வேண்டிய பொறுப்பு ஜனாதிப தியிடமுள்ளது.

பல்கலைக்கழக கவுன்சினால் பல்கலைக்கழக உப- வேந்தராக நியமிக்கப்பட வேண்டிய மூவரது பெயர்களை பல்கலைக்கழக ஆணைக்குழுவுக்கு கடந்த வருடம் ஜூன் மாதம் அனுப்பி வைக்கப்பட்டது. இவர்களில் தகுதியுள்ள ஒருவரது பெயர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு என்பவற்றால் ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் அப்போது ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க இந்நியமனம் தொடர்பாக அக்கறை காட்டவில்லை.

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் அடுத்த ஓரிரு மாதங்களுக்குள் பல்கலைக்கழக பட்டமளிப்புவிழா நடைபெற வுள்ளது. இந்நிலையில் நிரந்தர உப – வேந்தர் நியமனம் இடம்பெற வேண்டியது அத்தியாவசியமானது என தென்கிழக்கு கல்விப்பேரவை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.



# அரசின் நல்லிணக்க செயல்பாட்டுக்கு

# ‘நுரைச்சோலை வீட்டுத்திட்டம்’ சவால் !



நூருல் ஹுதா உமர்

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நுரைச்சோலை சுனாமி வீட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் வழங்கப்படும் சாத்தியங்கள் ஏதும் தென்படவில்லை எனவும் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தினர் சார்பாக, சுனாமித் தாக்கம் ஏற்பட்டு 20 வருட நினைவு நாளன்று 26.12.2024 அம்பாறை மாவட்டச் செயலாளரைச் சந்தித்தபோது வீடுகள் விரைவில் பயனாளிகளிடம் வழங்கப்படாது எனும் நிலைமைகளை தாம் அறிந்து கொண்டதாகவும் காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியினர் தெரிவிக்கின்றனர்.

சவூதி அரேபியா அரசாங்கத்தின் நிதியைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள வீடுகளை சுனாமியால் பாதிப்புற்றோருக்கு வழங்கக்கோரி அம்பாறை மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ் ஆகியோருடன், சுனாமியால் பாதிக்கட்டவர்களை உள்ளடக்கிய காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி சந்திப்பு ஒன்றை நடத்தியது. இந்த சந்திப்பில், அம்பாறை மாவட்ட காணிப் பிரச்சினைகள் உள்ளடங்கிய ஆவணம், கரும்பு விவசாயிகளின் நிலம் பறிக்கப்பட்டுள்ளமை, அவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட விரிவான ஆய்வு ஆவணங்களும் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த நிலைப்பாட்டில் ஏதாவது மாற்றம் செய்வதாக இருந்தால் வழக்கினை மீண்டும் அழைக்க வேண்டும், அவ்வாறு வழக்காளிகள் மீண்டும் அழைக்கப்படும்போது அவர்களுடைய நிலைப்பாடு தொடர்பில் உறுதியாக எதையும் கூறமுடியாதுள்ளது. அவர்களுடன் சுமுகமாகப் பேச முயற்சிகள் ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் அதுவும் இல்லை. மேலும், இந்த விடயத்தில் தெளிவுகாண வேண்டிய பல கேள்விகள் எழுந்து கொண்டே இருக்கின்றன. காணி பகிர்ந்தளிப்பதில் தேசியக் கொள்கை என்ன? அது பிரதேசத்தில் எவ்வாறு அமுல்படுத்தப்படும்? வீட்டுப் பிரச்சினை ஏன் காணிப் பிரச்சினையாக மாறியது? வழக்கில் எதிர்த்தரப்பு வாதம் என்னவாக இருந்தது? என்ற விடயங்கள் அலசி ஆராயப்பட வேண்டும். இந்த விடயத்தில் தன்னார்வமாக செயற்படும் ஆர்வமுள்ள சட்ட வல்லுநர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் அனைவரும் இணைந்து பாதிப்புற்ற மக்களுக்கு நியாயம் கிடைக்கப் போராட வேண்டியுள்ளது என்பதே காலத்தின் இன்றைய கட்டாயமாக உள்ளது.

உலகை உலுக்கிய சுனாமியில் இலங்கையில் அதிகமாக பாதிக்கப்பட்ட மாவட்டம் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டமே. முப்பதாயிரத்திற்கும் அதிகமான உயிர்களை இலங்கையில் காவுகொண்ட சுனாமி ஏறத்தாழ பத்தாயிரம் உயிர்களையும், பல கோடி மதிப்புள்ள சொத்துக்களையும் இழக்கச்செய்து பல நூற்றுக்கணக்கானவர்களையும் காணாமல் ஆக்கி அம்பாறை மாவட்ட மக்களுக்கு அகதி வாழ்வின் அத்தனை அத்தியாயங்களையும் கற்பித்தது. இந்த அகதி வாழ்விலிருந்து விடுபட பலரும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அதில் முக்கிய தேவையாக இருந்த இல்லிடம் எனும் பிரச்சினையை தீர்க்க நாட்டின் பல பகுதிகளிலும் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் உருவாகின. அதில் கிழக்கில் முக்கியமான ஒரு வீட்டுத்திட்டம் தான் இன்றைய கதையின் மூலக்கருவாக அமைந்துள்ளது.

சுனாமியால் வாழ்விடங்களை இழந்தவர்களுக்காக நுரைச்சோலைப் பிரதேசத்தில் சவூதி அரேபியாவினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் 2010 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. இந்த வீட்டுத் திட்டத்தை இந்த கட்டுரை வாசிக்கும் நிமிடம் வரை உரிய பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்க முடியாமல் போனமைக்குப் பின்னால், வறட்டு கௌரவத்துடன் கூடிய ஓர் இனவாதச் சிந்தனை இருந்தது என்பதைப் புறந்தள்ளி விட முடியாது. சம்பந்தமே இல்லாத காரணங்களை முன்வைத்து தொடுக்கப்பட்ட ஒரு வழக்கின் காரணமாக எப்போதோ பகிர்ந்தளிக்கப்பட்டிருக்க வேண்டிய நுரைச்சோலை வீட்டுத்திட்டமானது, தற்போது சிதைந்து, பழுதடைந்து, காடுகள் வளர்ந்து மனித இனம் பயன்படுத்த முடியாத நிலையில் கொடிய விலங்குகளின் சரணாலயமாக காணப்படுகிறது என்பதுதான் கவலையான விடயம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நுரைச்சோலைப் பிரதேசத்தில் இந்த வீட்டுத்திட்டம் உருவாக்கப்பட்டது. சவூதி அரேபியாவின் “நன்கொடை நிதியம்“ இதற்காக இலங்கை நாணயப் பெறுமதியில் சுமார் 552 மில்லியன் ரூபாயை அப்போது வழங்கியது. இந்த வீட்டுத் திட்டத்துக்கான ஒப்பந்தம் 2006ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சிடம் வழங்கப்பட்டது. அப்போது வீடமைப்பு அமைச்சராக பேரியல் இஸ்மாயில் அஷ்ரப் பதவி வகித்திருந்தார்.

சுமார் 40 ஏக்கர் காணியில் அமைந்துள்ள இந்த வீட்டுத்திட்டத்தில் 500 வீடுகள் அளவில் உள்ளன. மேலும், ஆண் மற்றும் பெண்களுக்கான சகல வசதிகளுடனும் கூடிய தனித் தனிப் பாடசாலைகள், வைத்தியசாலை, சந்தைத்தொகுதி, பொது நிகழ்வுகளுக்கான மண்டபம், விளையாட்டு மைதானம், பள்ளிவாசல் மற்றும் பஸ் நிறுத்தங்கள் ஆகியவையும் அங்கு உள்ளன. அதுவொரு கனவுக்குட்டி நகரமாகும் என்கிறார்கள் இந்த வீட்டுத்திட்டத்தை கண்ட இரசனை மிக்கவர்கள்.

நுரைச்சோலை வீட்டுத்திட்டச் செயற்பாடுகள் எல்லாமே நன்றாகப் போய்க்கொண்டிருந்த ஒரு தருணத்தில், இடையில் புகுந்தது ஜாதிக ஹெல உறுமய. நுரைச்சோலை வீடுகளை முஸ்லிம்களுக்கு மட்டும் வழங்குவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது. இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு, 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி அப்போதைய நீதியரசர் சரத் என். சில்வா தலைமையில் வழங்கப்பட்டது. நுரைச்சோலை வீடுகளை தனி இனமொன்றுக்கு வழங்கக்கூடாது என்றும் அனைத்து இனத்தவர்களையும் உள்ளடக்கி மேற்படி வீடுகளை நீதியாகப் பகிர்ந்தளிக்குமாறும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது. மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டு பல வருடங்கள் கடந்து விட்டன. ஆனாலும், நுரைச்சோலை வீடுகள் இற்றைவரை யாருக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இப்போது, அங்குள்ள வீடுகளை பகிர்ந்தளித்தாலும், அவை பயன்படுத்தும் நிலையில் இல்லை என்பது கூடுதல் தகவல்.

சுனாமியில் அம்பாறை மாவட்டத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டது பெரிய நீலாவணை முதல் பொத்துவில் வரையிலான கரையோர மக்களே இந்த கரையோரத்தில் அதி உச்சமாக பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிங்கள். அப்படி இருக்க தமிழ், முஸ்லீம், சிங்கள, கிறிஸ்தவ மக்களுக்கு என நாடுபூராகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு நாட்டின் தொண்டு நிறுவனங்கள் வீடுகளை அமைத்துக் கொடுத்தது. அதே போன்றே நுரைச்சோலை வீட்டுத்திட்டமானது சுனாமியால் வீடுகளை



இழந்த முஸ்லிம்களுக்காக அரேபிய கடலின் சவூதி வள்ளல்களினால் நிர்மாணிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் வீடுகளை இழந்த பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்களுக்கு இதுவரையும் வீடுகள் கிடைக்காமல் உள்ளன. ஆனால், இந்த மாவட்டத்தில் சுனாமியால் நான்கைந்து பெரும்பான்மையினத்தவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டனர். அந்த பாதிப்பின் அளவும் பெரிதாக இல்லை ஆனாலும், பாதிக்கப்பட்ட குடும்பத் தொகையை விடவும் அதிகமான வீடுகள், சலுகைகள், நிவாரணங்கள் இந்த மாவட்ட பெரும்பான்மையின மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

இதேபோன்று, சுனாமியால் வீடுகளை இழந்த தமிழ் மக்களுக்கும் போதுமான தொகை வீடுகள் வழங்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறானதொரு நிலையில், நுரைச்சோலை வீடுகளைப் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே நியாயமாகும் என்று ஒரு தரப்பார் வாதிட்டு வருகின்றனர். எப்படியாவது இப்போதைக்கு நுரைச்சோலை வீடுகளைப் பகிர்ந்தளித்தாலே போதும் என்கிற மனநிலையைக் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெருந்தொகை நிதியில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி வீட்டுத்திட்டமானது, யாருக்கும் பிரயோசனமின்றி அழிவடைந்து போவதை விடவும், மக்களுக்குப் பயனாகட்டும் என்று நினைக்கின்றமையே அதற்கான காரணமாகும் என்கிறார்கள்.

ஆனால், தற்போதைய நிலையில் அந்த வீடுகளைப் பெற்றுக்கொள்வோர் உடனடியாக அவற்றைப்பயன்படுத்தும் நிலையில் இல்லை. அங்குள்ள வீடுகளிலிருந்த பெறுமதியான பொருட்களெல்லாம் களவாடப்பட்டுள்ளன. வீட்டுத்திட்டம் முழுக்க காடு வளர்ந்துள்ளது. மேலும், பற்றை காடு நிரம்பியுள்ள அந்த வீடுகளில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளன. அதனால், அங்கு பாரியதொரு புனரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அதற்குப் பெருமளவான நிதி தேவைப்படும். இன்னும் சில காலங்களில் வில்பத்து போன்று இதுவும் காட்டுப்பகுதியாக மாறியதாக இல்லை அறிவிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படதவற்கில்லை. இன்றைய நிலையில் இலங்கை அரசு இந்த வீடுகளை திருத்தும் அளவுக்கு பொருளாதார நிலையில் இல்லை.

இந்த நிலையில், நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தை புனரமைப்புச் செய்வதற்கான நிதியை வழங்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்த வரலாறுகளும் உள்ளது. ஏன் இப்போது கேட்டாலும் சவூதி அரசு நிதியளிக்கும் என்பது வேறுகதை. அவ்வாறு நிதி கிடைத்தாலும், குறித்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு கணிசமான காலம் எடுக்கும். அதன் பின்னரே அங்கு மக்கள் குடியேற முடியும் என்பதெல்லாம் இருக்கிறது. இந்த நுரைச்சோலை வீட்டுத்திட்டம், அக்கரைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. அதன் எல்லையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தீகவாபி கிராமம் உள்ளது. தீகவாபி, ஒரு பெரும்பான்மையினக் கிராமமாகும். ஆனால், அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளும் முஸ்லிம் பிரதேசங்களாகும். இதனால், தீகவாபியை முன்னிறுத்தி அங்கு எல்லைப் பிரச்சினைகள் தொடர்ச்சியாக எழுந்துகொண்டு வருகின்றன.

முஸ்லிம் கிராமங்களின் எல்லைகளுக்குள் அரச இயந்திரத்தின் துணை கொண்டு, தீகவாபி தனது எல்லைகளை நகர்த்துவது வாடிக்கையான விடயமாகும். மேலும், புனித பூமி எனும் பெயரில் முஸ்லிம் கிராமங்களின் எல்லைகள் அபகரிக்கப்பட்டு தீகவாபியுடன் இணைக்கப்பட்டுமுள்ளன என்பதை கடந்த கால வரலாறுகள் தெளிவாக கூறி வைத்துள்ளது. இவ்வாறானதொரு, நிலையிலேயே நுரைச்சோலை வீட்டுத்திட்டம் தொடர்பில் தீகவாபி அச்சம் கொண்டது. தனது எல்லையில் முஸ்லிம்களை குழுமையாகக் கொண்டதொரு குடியிருப்பு உருவானால், அது தனக்கு ஆபத்தாக அமைந்து விடும் என்று அந்தக் கிராமம் எண்ணியது. இந்தப் பின்னணியிலேயே, நுரைச்சோலை வீட்டுத்திட்டம் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய வழக்குத் தாக்கல் செய்தது. நுரைச்சோலை வீட்டுத்திட்டத்தின் தற்போதைய நிலைக்கு அந்த வழக்கே காரணமானது. நுரைச்சோலை வீடுகளை முஸ்லிம்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் கடந்த காலத்தில் இருந்த எந்த ஆட்சியாளர்களும் விருப்பம் கொண்டிருக்கவில்லை. அதனால், நுரைச்சோலை விடயத்தில் அவர்கள் இழுத்தடிப்புகளைச் செய்துகொண்டு வந்தனர்.

பல தடவை, நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மீறிச் செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரி நினைத்திருந்தால், நுரைச்சோலை வீடுகளை உரிய பயனாளிகளுக்கு வழங்குமாறு அப்போதே உத்தரவிட்டிருக்கலாம். ஆனால், அதைச் செய்யாமல் போனமைக்கு முன்னாள் ஜனாதிபதிக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் காணப்பட்ட நெருங்கிய உறவும் ஒரு காரணமாக இருந்தது என்கிறார்கள் அரசியல் அவதானிகள். அம்பாறையில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா, பைசால் காஸிம், எம்.ஐ.எம். மன்சூர், ஏ.எல்.எம். நஸீர், எச்.எம்.எம். ஹரீஸ், எஸ்.எம்.எம். இஸ்மாயில் என அந்த நல்லாட்சியின் முட்டுக்கள் அம்பாறையில் பலமானதாகவே இருந்தது. அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவாகி மாகாண சபையிலும் ஆரிப் சம்சுதீன், ஏ.எம்.ஜெமீல், ஏ.எல்.எம். தவம், எம்.ஐ.எம்.மாஹீர், ஏ.ஆர்.ஜவாத், எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.ஐ.அமீர் என முஸ்லிம் தரப்பு பலமானதாகவும் தான் இருந்தது.

அது மட்டுமன்றி மஹிந்த, மைத்திரி, கோத்தா, ரணில் என ஆளுமைமிக்க ஜனாதிபதிகள் பலரையும் கடந்து இந்த பிரச்சினை நீள்கிறது. இனவாதமில்லா இலங்கையை கட்டியெழுப்ப துடிக்கும் அனுர அரசுக்கு இப்போது இந்த பிரச்சினை வந்தடைந்திருக்கிறது. இந்த காலகட்டத்தில் மக்கள் காங்கிரசில் அஸ்ரப் தாஹீர், முஸ்லிம் காங்கிரசில் எம்.எஸ். உதுமாலெப்பை, ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், ஆளும் கட்சியில் ஏ. ஆதம்பாவா என பலரும் எம்.பியாக இருக்கும் திகாமடுல்லவில் முஸ்லிங்களின் கணிசமான வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்ற ஆளும் தரப்பு எம்.பிக்கள் நால்வர் அடங்கலாக ஐந்து ஆளும் தரப்பு எம்.பிக்கள் இருக்கும் இந்நிலையில் இந்த பிரச்சினையை தீர்க்க இதுதான் பொருத்தமான காலம். செயல்வீரர்கள் என பெயர்பெற்ற தாஹீர், உதுமாலெப்பை போன்றோர்களும் மிகத்திறமையான வாதத்திறன் கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பரும் மக்கள் பிரதிநிதியாக இருக்கும் சூழ்நிலையில் சட்ட ரீதியாகவும் இந்த பிரச்சினையை தீர்க்க முடியும்.

இவைகளெல்லாம் இப்படி இருக்க இந்த அரசில் மட்டுமல்ல ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்களிடம் செல்வாக்கு கூடிய மற்றும் இறுக்கமான நட்பை கொண்டிருக்கும் தேசிய பட்டியல் (அம்பாறையில்) எம்.பியாக இருக்கும் ஏ.ஆதம்பாபா இந்த மாவட்டத்தில் இருப்பது இந்த பிரச்சினையை தீர்க்க பொருத்தமான காலமாக இருக்கிறது. நுரைச்சோலை வீட்டுத்திட்ட விடயத்தில் ஹக்கீம், றிசாத், அதாஉல்லா போன்ற முஸ்லிம் தலைவர்கள் மட்டுமல்ல ஹரீஸ், முஷாரப், பைசால் காசிம், மன்சூர், நசீர், இஸ்மாயில் போன்ற முன்னாள் எம்.பிக்கள் சாதிக்காத விடயத்தை ஆதம்பாபா எம்.பி சாதிப்பார் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது ! ■





# போர்க்களமாக மாறியுள்ள பூமிப் பந்து

- ஆர்.மனோசங்கர்

போர்கள் தீவிரமடைமடைந்துள்ள நிலையில், முழு உலகமே ஒரு சிக்கலான சூழ்நிலையில் சென்று கொண்டிருக்கிறது. மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள மோதல்கள் புதிய நிலைகளுக்கு வளர்ந்து வருகிறது.

போர் முனை காஸா மற்றும் லெபனானைத் தாண்டி யேமன் வரை விரிவடையும் என்பதற்கான அறிகுறிகள் தற்போது தோன்றியுள்ளன. ஈரான் – இஸ்ரேல் நேரடிப் போரும் தொலைதூரத்தில் இல்லை.

அதற்கு அடுத்த நிலையில், துருக்கியும் உள்ளது. உக்ரேன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு மூன்று வருடங்களை நெருங்குகிறது. பெலாரஸ், போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளும் போரில் நேரடியாக இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆத்திரமூட்டல் தொடர்ந்தால், ஐரோப்பாவின் வல்லரசுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளையும் தாக்கத் தயங்கப் போவதில்லை என ரஷ்யா எச்சரித்துள்ளது. சூடானும் உள்நாட்டுப் போரின் பிடியில் உள்ளது.

கொரிய பிராந்தியம், சீனா–தைவான் மற்றும் பல இடங்களில் மோதல் மேகம் சூழந்துள்ளது. ஒரு சிறிய தீப்பொறியால் பற்றவைக்கக்கூடிய வகையில் நாடுகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் உலகப் போருக்கு சற்று முன்பு இத்தகைய சிக்கலான சூழலே இருந்தது. ஆயுதங்களின் வீச்சும் திறனும் அதைவிட ஆயிரம் மடங்கு அதிகரித்துள்ளது. இந்நிலையில், மற்றுமொரு உலகப் போர் என்பது கற்பனைக்கு அப்பாற்பட்ட பேரழிவாக இருக்கும்.

### இஸ்ரேலைக் கட்டுப்படுத்துவது யார்?

உலக நாடுகளின் மனச்சாட்சி மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச மன்றங்கள், ஆக்கிரமிப்பு நாடான இஸ்ரேல் முன்னெடுத்துள்ள மனித குலத்திற்கு எதிரான படுகொலைகள் 2024ஆம் ஆண்டை ஒரு மோசமான ஆண்டாக மாற்றியுள்ளது.

அமெரிக்காவின் ஆதரவுடன், போர்ச் சட்டங்கள், மனித உரிமைகள், ஐ.நா வழிகாட் டுதல்கள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றை மீறும் அட்டூழியங்களை இஸ்ரேல் முன் னெடுத்துள்ளது.

காஸா போர்நிறுத்தப் பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் அடைந்தாலும், இஸ்ரேல் புதிய நிபந்தனையை முன்வைத்து முந்தைய பேச்சுவார்த்தையை நாசப்படுத் திய அனுபவம் உள்ளது. இஸ்ரேலின் அடாவடித்தனம் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸின் நுழைவை தடைசெய்யும் அளவிற்கு சென்றுள்ளது.

இஸ்ரேலின் இந்த ஆணவம் என்பது அமெரிக்காவின் நிபந்தனையற்ற ஆதரவை அடிப்படையாகக் கொண்டது, இருப்பினும் இதற்கு அஞ்சாமல் போராடும் சிறு குழுக்கள் உலக அரசியலையே மாற்றியுள்ளது.

### பலஸ்தீனம் சரியாகும் வரை எதுவும் சரியாக இருக்காது

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸால் மேற்கு ஆசியாவின் வரலாற்றையும், புவியியல் அரசியலையும் மாற்றி எழுதும் என்ற மதிப்பீடு சரியானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

சுதந்திர பலஸ்தீனம் உருவாகாமல் மேற்கு ஆசியாவில் நிரந்தர அமைதி சாத்தியமில்லை என்று பெரும்பாலானோர் நினைக்கிறார்கள். ஆனால் இஸ்ரேல் அதற்கு இடம்கொடுக்கவில்லை.



அதீத மிருகத்தனம் சர்வதேச அளவில் இஸ்ரேலை மேலும் பலவீனப்படுத்தியுள்ளது. பல நாடுகள் பலஸ்தீன அரசை அங்கீகரித்துள்ளன. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் "பலஸ்தீன விடுதலை" போராட்டம் நிர்வாகங்களை உலுக்கியுள்ளது.

### சிரியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றம்

சிரியாவில் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த அசாத் குடும்ப ஆட்சியைத் தூக்கியெறிந்து எதிர்க்கட்சிப் படைகள் ஆட்சியைக் கைப்பற்றின.

பஷர் அல் – ஆஸாத்தின் இரண்டரை தசாப்த கால ஆட்சியானது மனித வேட்டை மற்றும் வெகுஜன படுகொலைகளில் ஒன்றாகும். புதிய அரசாங்கம் வந்த பின்னரும் சிரியாவில் ஸ்திரத்தன்மை ஏற்படவில்லை.

இஸ்ரேல் தனது இறையாண்மையை மீறி சிரியா மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இதனை புதிய அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது.

இஸ்ரேல், துருக்கி, லெபனான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள சிரியாவின் புவியியல் இடம் மேற்கு ஆசிய அரசியலில் மிகவும் முக்கியமானது.

பங்களாதேஷில் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக ஷேக் ஹசீனாவின் ஆட்சி எதிர்க்கட்சிகள் மீதான அரசியல் வேட்டை மற்றும் படுகொலைகளுக்கு பெயர்பெற்றது.

பங்களாதேஷின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களின் சந்ததியினருக்கு இட ஒதுக்கீட்டை அறிமுகப் படுத்தும் முடிவு ஹசீனாவின் நிர்வாகத்தின் அடித்தளத்தை அசைத்தது.

கிளர்ச்சியாளர்கள் ஷேக் ஹசீனாவின் மாளிகையை சூழ்ந்தபோது, அவர் தனது 16 ஆண்டுகால ஆட்சியை முடித்துக்கொண்டு இந்தியாவுக்கு தப்பி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஷேக் ஹசீனாவை விசாரணைக்கு ஒப்படைக்குமாறு நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையிலான இடைக் கால நிர்வாகம் இந்தியாவிடம் கேட்டுள்ளது. எனினும், ஷேக் ஹசீனா மீது இந்திய மத்திய அரசு அக்கறை கொண்டுள்ளது.

### ட்ரம்ப் என்ன மாற்றத்தை கொண்டு வரப்போகிறார்?

2025 ஜனவரியில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார். இதன் பின்னர் அமெரிக்காவில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

தற்போதைய ஜனாதிபதி பைடன் தேர்தல் போட்டியில் இருந்து விலகிய பின்னர் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட போதிலும் ஜனநாயகக் கட்சியால் வெற்றி பெற முடிய வில்லை. பைடனின் வெளியுறவுக் கொள்கை கடும் விமர்சனத் திற்குள்ளாகியுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்நிலையில், ட்ரம்ப் பெரும்பாலும் கணிக்க முடியாத தலைவர் என்று வர்ணிக் கப்படுகிறார். கடுமையான முடிவுகள் எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---



# இஸ்லாமிய இலக்கிய விழிப்புணர்வுச் சிந்தனை

## எழுத்தாளர் அ.ஸ.அப்துஸ்ஸமது

கிழக்கு முஸ்லிம்களின் வாழ்வியலை நுட்பமாகப் பதிவுசெய்த இலக்கிய விழிப்புணர்வுச் சிந்தனையுள்ள ஆளுமைகளில் அ.ஸ.அப்துஸ்ஸமது அவர்கள் முக்கியமானவர். தென்கிழக்கின் தேன்மதுரத் தமிழ் தந்த 'ஆனாஸானா' ஆழ்ந்த புலமையும் அகன்ற சிந்தனையும் கொண்டவர். கிழக்கு முஸ்லிம் கிராம வாழ்க்கையின் அழகியலை கலைத்துவமாய்க் காட்சிப்படுத்தியவர். இலக்கிய ஆர்வலர்களின் இரசனைத் தளத்தை விரிவுபடுத்திய மூத்த நாவலாசிரியர். பொழுதுபோக்குக்காக இலக்கியம் படைக்காமல் பொதுவெளியில் எதிர்கொண்ட அனுபவத்தை அறநெறியோடு இஸ்லாமிய இலக்கியமாக படைத்தவர். தமிழிலக்கியச் சூழலில் பிறந்து இஸ்லாமிய பண்பாட்டுப் பார்வையில் வளர்ந்து தாய்மொழி தமிழில் வாழ்ந்துகொண்டு ஈழத்திலும் தமிழகத்திலும் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் புகழ்சேர்த்தவர்.

'ஆனாஸானா' அவர்கள் ஆசியா உம்மா தாய்க்கும் முஹம்மது ஆபூபக்கர் அப்துஸ்ஸலாம் ஆலிம் புலவர் பெருமாக்கள் குடும்பத்தில் 1929இல் பிறந்தார். தென்கிழக்கு மாகாணத்தில் அழகு கொழித்திருக்கும் அக்கரைப்பற்று அன்னை பெற்ற 'ஆனாஸானா' 2001ஆம் ஆண்டில் மறைந்தார். அவர் மறைந்தாரா..? இல்லை! அவர் நேற்றைய எழுத்தில் இன்று உயிரோடிருக்கிறார். இன்னும் உலகத்தில் வாழ்கிறார் என்பதை உணர்த்திக்கொண்டிருக்கிறார். ஏதோ ஓர் அமைதிக்குள் தனித்துவிடப்பட்டதாய் அவர் தகைமையோடுதானிருக்கிறார். அவரது உயர்வுக்குக் காரணம் உழைப்பு. அந்த நேர்மையான உயர்வு நிலைபெறக் காரணம் அவர் எளிமை. ஆறடி உயரத்தை எட்டாதவர்தான் 'ஆனாஸானா'. ஆனால் அவர் உயர்ந்த மனிதர். அவரது மனசோ பெரும்சிகரம். கோடி கோடியாய்ப் பெருந் தொகை பெற்றுக்கொள்ள ஆசைப்படும் முதலாளித்துவத்திற்கு அவர் மானுட வாழ்வின் மனித நேயத்தையும் மக்கள் சமத்துவத்தையும் எழுதிக்காட்டினார். சகமனிதர்களோடு சகவாசம் கொண்ட 'ஆனாஸானா'விடம் கற்றுக்கொண்டவர்களை விட அவரது இதயத்தைப் பெற்றுக்கொண்டவர்ளே மிக அதிகம்.

'தனிமனித உணர்வுகள் மதிக்கப்படத் தக்கவை. அத்தகைய சுயாதீனங்களும் உணர்வுகளும் சமூகத்தினால் அழிக்கப் படக்கூடாது. சமுதாயம் என்பது சிலவேளை அடிமைத்தனமான ஒரு நெறியில் மக்களை வழி நடாத்திச் செல்வதுமுண்டு. அவர்களுடைய முற்போக்கையும் செயல்முறைகளையும் அழித்து எதேச்சதிகாரம் தலைதூக்கும் சந்தர்ப்பங்களில்தான் இந்த தனிமனித உந்தல்களும் அபிலாஷைகளும் மதிக்கப்பட வேண்டும்' (எனக்கு வயது பதின்மூன்று) என்று குறிப்பிட்டுள்ளார். முஸ்லிம்கள் மத்தியில் எத்தனையோ பிரச்சினைகளும் குறைபாடுகளும் உள்ளன என்று அவற்றை நீக்க சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்தார். கிழக்குமுஸ்லிம்கள் வாழ்வின் பலபரிமாணங்களைப் படம்பிடித்துக் காட்டிய 'ஆனாஸானா'வின் படைப்புக்களே அவரைக் கிழக்கு முஸ்லிம்களின் பிரதான படைப்பாளியாக முன்னிறுத்துகிறது.

'இலட்சக் கணக்கில் சீதனமும் ஆதனமும் பெற்றுக்கொண்டு மாப்பிள்ளைமார் பத்தாயிரம் 'மஹர்' கொடுப்பதில் அர்த்தமென்ன? 'முறீது' கொடுக்கும் மௌலானாமார் பெண்களுக்கு சோறு கரைத்துக் கொடுக்கும் சமய நோக்கமென்ன? மக்காவுக்குப்போன ஹாஜிமார் கறுப்புமார்க்கட் தொழில் செய்வதை விடாமல் இருப்பதன் பொருளென்ன? 'மிம்பரில்' ஏறிக் 'குத்பா' ஓதும் 'கதீப்'மார் வட்டிக்குக் கொடுப்பது முறையாகுமா? வங்கிப்பணம் 'ஹறாம் என்பதை மறந்துவிடலாமா?' அதன் ஊதியத்தையும் வருமானத்தையும் உபயோகிப்பது கூடுமா?' என்று தீர்க்கமான கேள்விகளோடு சமூக மாற்றத்தை வேண்டிக்கொள்கிறார்.

**'இந்த நாட்டில் இரண்டுமொழி பேசுவோர் உள்ளனர். அந்த இருசாராரும் மனங்கொண்டால் இரண்டு மொழிகளையும் கற்றுக்கொள்வது சிரமமான காரியமல்ல. ஒருவரை ஒருவர் மதித்து நடந்தால் நம் மரகதத்தீவு சொர்க்கபூமியாக மாறிவிடும். பௌத்த சாத்வீகமும் இஸ்லாமிய சகோதரத்துவமும் இந்து சகிப்புத் தன்மையும் கிறிஸ்தவ அன்பும் இங்கே பரிணமித்துவிடும்'** என்று அவரது 'தர்மங்களாகும் தவறுகள்' நாவலில் (பக்கம்: 25) இனநல்லிணக்கத்தை எடுத்தியம்புகிறார்.

தமிழ்க் கலைப்பட்டதாரி ஆசிரியர் 'ஆனாஸானா' அறிவியலை அழகுறச் சொல்பவர். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சிபெற்று அதே கலாசாலையில் 1979ஆம் ஆண்டு முதல் 1989 வரை தமிழ் விரிவுரையாளராய் பதவி வகித்தார். தன்பள்ளி மாணவர்களை வைத்தியராகவும் பொறியியலாளராகவும் அரச உத்தியோகத்தர்களாகவும் சமூகத் தலைவராகவும் உருவாக்கி விட்ட அவர் அக்காலகட்டத்தில் விடுமுறை தினங்களில் இலங்கைவங்கி நிறுவனத்தின் பரீட்சைக்குத் தோற்றவேண்டிய வங்கி உத்தியோகத்தர்களுக்கு தமிழ் இலக்கிய, இலக்கணப்பாடம் நடத்தி தன்னிடம் கற்றோர் யாவரையும் சித்திபெறச் செய்தார்.

கல்வியின் சிறப்புக் குறித்து நாம் சிந்திக்க வேண்டிய நூற்றாண்டு இது. காற்று இல்லாமல் எப்படி உயிர்வாழ முடியாதோ அப்படி கல்வியில்லாமல் உயிர் வாழ இயலாது. மனித வாழ்வை முக்கால் சதவிகிதம் அறிவியல் ஆட்கொண்டுவிட்டது. கல்வி இருந்தால்தான் வாழ்க்கையை வாழ்க்கையாக எதிர்கொள்ள முடியும். **'வெளியிலிருந்து ஒரு மனிதனுக்குள் கொண்டுபோய்க் கொட்டுவதன்று கல்வி. அவனுக்குள் இருக்கும் ஆற்றல்களை அடையாளப்படுத்துவதே கல்வி'** என்பதை அடையாளம் காட்டியவர் 'ஆனாஸானா'.

ஒரு மனிதனுக்கு அகத்தேவை – புறத்தேவை என இருபெரும் தேவைகள் உணரப்படுகின்றன. அகத்தேவை என்பது அன்பு, அறிவு, ஆற்றல். புறத்தேவை என்பது உணவு, உடை, உறைவிடம். இந்த இருபெரும் தேவைகளை நிறைவு செய்வதற்கான கருவியாகவும் துணையாகவும் எந்த கல்விமுறை செயலாற்றுகிறதோ அதுதான் மகத்தான கல்வி. அப்படியான ஒரு கல்விமுறையைக் கற்பிதம் செய்த கல்விவேந்தனாக 'ஆனாஸானா' கற்றலின் பலனை அதன்வழி நிற்கச் செய்தார். இணையத்தளம் (டிஜிட்டல்) இலத்திரனியல் தொழில்நுட்பம் இல்லாத அக்காலத்தில் 'தமிழிலக்கிய வினாவிடை' எனும் பல்வேறு பாடநூல்களை அச்சிலிட்டு மாணவர் சமுதாயத்துக்குப் பகிர்ந்தளித்தார்.

கிழக்கு முஸ்லிம்களின் வாழ்க்கையை இஸ்லாமிய இலக்கியத் தளத்தில் இயக்கிய 'ஆனாஸானா' பத்திரிகைகளில் தன் பயணத்தைத் தொடங்கி மக்கள் எழுத்தாளராய் மலர்ந்தார். கதைகளில் தொடங்கி கட்டுரைகளில் நிறைந்தார். கட்டுரைகளில் நிறைந்து நாவல்களில் நிலைபெற்றார். கதை, சிறுகதை, கவிதை, நாவல், ஆய்வுக்கட்டுரை, உருவகக்கதை, உரைநூல்கள், மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள், நகைச்சுவை எனப் பன்முகத்துறையில் தன் ஆளுமையைச் செலுத்தினார். தீன்மாலை, சீறாஇன்பம், பிறைப்பூக்கள், கனவுப்பூக்கள், முற்றத்துமல்லிகை, பனிமலர், இலக்கியப் பொய்கை, இலக்கிய நோக்கு, இஸ்லாம் வழிகாட்டி, சுலைமான் பல்கீஸ், தமிழிலக்கியம், தர்மங்களாகும் தவறுகள் ஆகிய அவரது நூல்கள் அதிகம் பேசப்பட்டவை.

அவரது முதலாவது கட்டுரையை 1947 பெப்ரவரி தினகரன் பிரசுரித்தது. தனக்கு வயது இருபதாயிருக்கும்போதே 1950இல் தினகரன் வாரமஞ்சரி பிரசுரித்த அவரது "நூர்ஜஹான்" எனும் முதலாவது சிறுகதை மூலம் அதிர்வுகளை உருவாக்கினார். ஆண்டு 1977இல் 'எனக்கு வயது பதின்மூன்று' எனும் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கு இலங்கை சாகித்தியமண்டலப் பரிசு பெற்றார். இலங்கை வானொலியில் 'இலக்கிய மஞ்சரி' எனும் நிகழ்ச்சியை நடாத்தி அதை காற்றின் அலைவரிசையில் ஏற்றுமதி செய்தார். 1982இல் 'பனிமலர்' நாவலுக்குக்கு 'வீரகேசரி பிரதேச நாவல் பரிசும், 1984இல் 'கனவுப்பூக்கள் நாவலுக்கு கொழும்பு முஸ்லிம் எழுத்தாளர் பேரவையின் பரிசும், 1989இல் முஸ்லிம் காலசார அமைச்சின் 'தாஜுல் அதீப்' விருதும், 1990இல் மலேசிய கவிதைமாலை இயக்கத்தின் 'இலக்கிய திலகம்' விருதும் 1996இல் தேசிய கலைஞர் பேரவையின் 'இலக்கிய மாமணி' விருதும் 'ஆனாஸானா'வுக்கு வழங்கிய கௌரவங்கள்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் 'ஆனாஸானா'வின் வரலாற்று ஆவணங்களை பட்டப்படிப்பு மாணவர்களுக்குப் பயன்படுத்திக்கொண்டிருப்பது ஒரு பெரும்பேறாகும். பல்கலைக்கழக அரும் பொருட்சாலையில் அவரது படைப்புக்கள் யாவும் பாதுகாக்கப்படுகின்றமை பெருமைக்குரிய அம்சமாகும். காலப் பெருவெளியில் காத்திரமான சத்தியக் கருத்துக்களைத் தந்த 'ஆனாஸானா' போல் இலட்சிய வேட்கையை, தனிமனித ஆளுமையை, உள்ளார்ந்த நன்னம்பிக்கையை, உன்னத மனித நேயத்தை சொல்லிலும் செயலிலும் எழுத்திலும் வெளிப்படுத்தும் உயர்ந்த ஆளுமைகள் இன்னும் நமது சமுதாயத்தில் உருவாக வேண்டும்.



- கனடாவிலிருந்து
இனியவன் இசாறுதீன்

# துனிசியாவில் படகு கவிழ்ந்ததில் 27 பேர் பலி; 87பேர் மீட்பு

மத்திய தரைக்கடலை கடக்க முயற்சித்த இரு படகுகள் கடலில் மூழ்கியதில் 27 ஆபிரிக்க குடியேறியவர்களின் உடல்களை துனிசியாவின் கடலோர காவல்படையினர் மீட்டுள்ளதாக அந் நாட்டு அதிகாரிகள் வியாழக்கிழமை (02) தெரிவித்தனர்.

ஆபிரிக்க புலம்பெயர்ந்தோர் அடிக்கடி பயன்படுத்தும் புறப்படும் இடமான துனி ஷியாவின் ஸ்ஃபாக்ஸ் (Sfax) நகருக்கு அப்பால் படகுகள் நீரில் மூழ்கியுள்ளன. எனினும், இரண்டு படகுகளில் பயணித்த 87 பேரை கடலோர காவல்படையினர் காப்பாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. முன்னெப்போதும் இல்லாத இடப்பெயர்வு நெருக்கடியால் துனிசியா பாதிக்கப்பட்டுள்ளது.

துனிசியர்கள் மற்றும் ஐரோப்பாவில் வாழ விரும்பும் மக்களுக்கு இது இப்போது முக்கிய புறப்படும் இடமாக ஸ்ஃபாக்ஸ் மாறியுள்ளது. கடந்த மாதம், துனிசியாவின்



கடலோரக் காவல்படை இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் சுமார் 30 புலம்பெயர்ந்தோரின் உடல்களை மீட்டெடுத்தது. அவர்கள் ஐரோப்பாவை நோக்கி படகுகளில் பயணித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் பனிமூட்டம்

### விமான, ரயில் சேவைகளில் தாமதம்

டில்லி மற்றும் அதன் அண்டை பகுதிகள் உட்பட வட இந்தியாவின் பல பகுதிகளில் கடுமையான குளிர் அலையானது வெள்ளிக்கிழமை(03) காலை தொடர்ந்தது. குறித்த பகுதிகளை மூடிய கடுமையான பனி நிலைமையால் ரயில் மற்றும் விமான செயற்பாடுகளும் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டன.


விமான கண்காணிப்பு இணையதளமான ஃப்ளைட்ராடர் (Flightradar), டில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் குறைந்தது 60 புறப்படும் விமானங்கள் தாமதமாகிவிட்டதாகவும், ஆறு விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 193 விமானங்களின் வருகை



தாமதமானதுடன் நான்கு விமானங்களின் வருகை இரத்து செய்யப்பட்டன. கொல்கத்தா விமான நிலையத்தில், புறப்படும் 17 விமானங்கள் தாமதமானது, ஒன்று இரத்து செய்யப்பட்டது மற்றும் 36 வரும் விமானங்களும் தாமதமாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீனாவில் வேகமாக பரவும் புதிய வைரஸ்

சீனாவில் எச்.எம்.பி.வி வைரஸ் எனும் புதிய வகை வைரஸ் ஒன்று வேகமாகப் பரவி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.



இந்த வைரஸ் பாதிப்பினால் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு செல்பவர்களின் எண்ணிக்கை சீனாவில் அதிகரித்துள்ளது.

சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் பெருந்தொற்று கண்டறியப்பட்டது. இந்த வைரஸ் உலகம் முழுவதும் மின்னல் வேகத்தில் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், கொரோனா கண்டறிந்து 5 ஆண்டுகள் கழித்து சீனாவில் புதிய வகை வைரஸ் ஒன்று வேகமாக பரவி வருவதாக வெளியாகி இருக்கும் தகவல் உலக நாடுகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸ் பெருந்தொற்று நோயை மக்கள் மெல்ல மெல்ல மறக்க தொடங்கியிருக்கும் சூழலில், சீனாவில் இருந்து மீண்டும் ஒரு வைரஸ் பரவி வருவதாக வெளியாகியிருக்கும் தகவல் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பினால் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்கு செல்பவர்களின் எண்ணிக்கை சீனாவில் அதிகரித்துள்ளது.

அதேபோல தகன கூடங்களிலும் நெருக்கடி அதிகரித்துள்ளது. வைத்தியசாலைகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின்றன. புதிதாக பரவும் எச்.எம்.பி.வி வைரஸ் மட்டுமன்றி இன்புளுவன்சா ஏ, மைகோபிளாஸ்மா நிமோனியா, கொரோனா ஆகியவையும் பரவி வருவதாகவும் புதிய வகை வைரஸ் தொற்று காரணமாக சீனாவில் அவசரநிலை பிறப்பிப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்த தகவல் உறுதி செய்யப்படவில்லை. HMPV வைரஸ் என்பது காய்ச்சல் போன்ற அறிகுறிகளை காட்டும்.

அதாவது கிட்டத்தட்ட கொரோனாவுக்கு என்ன அறிகுறிகள் இருந்ததோ அதே அறிகுறிதான் இந்த வைரஸ் பாதித்தவர்களுக்கும் காட்டுகிறதாம். இந்த வைரஸ் நோய் பரவலை சீன சுகாரத்துறை அரசு கண்காணிப்பு குழுக்களை அமைத்து பாதிப்புக்களை உன்னிப்பாக கண்காணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வானில் இருந்து விழுந்த மர்மப்பொருள்

கென்யாவில் சுமார் 500 கிலோ எடையுள்ள மர்மப் பொருள் திடீரென விழுந்தது அங்கு பெரும் பரபரப்பைக் ஏற்படுத்தியுள்ளது.

கென்யாவில் உள்ள ஒரு கிராமத்தில் வானில் இருந்து சிவப்பு நிற மர்மப் பொருள் விழுந்துள்ளது. இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக கென்யா விண்வெளி நிறுவனத்திற்குத் தகவல்



தெரிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டனர். அதைத் தொடர்ந்து கென்யா விண்வெளி நிறுவனம் ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டுள்ளது. கென்யாவின் மகுவேனியின் தெற்கு மாவட்டத்தில் உள்ள தொலை தூர கிராமமான முக்குகு (Mukuku) என்ற இடத்தில் விழுந்த பொருளைக் கென்யா விண்வெளி நிறுவனம் இப்போது ஆய்வு செய்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.5 மீட்டர் (சுமார் 8 அடி) அகலம் கொண்ட இந்த ரிங். சுமார் 500 கிலோ எடை கொண்டதாக காணப்படுகிறது. இது விண்வெளியில் சுற்றி வந்த பொருளின் ஒரு பகுதி என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தென் கொரியாவில் பிறப்பு விகிதம் அதிகரிப்பு

தென் கொரியாவில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை ஒன்பது ஆண்டுகளில் முதல் முறையாக கடந்த ஆண்டு அதிகரித்தது. இது உலகின் மிகக் குறைந்த கருவுறுதல் விகிதங்களில் ஒன்றை எதிர்கொள்ளும் ஒரு நாட்டிற்கு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காண்பிக்கின்றது என வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அரசாங்கத் தரவுகளின்படி Yonhap செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் 2,42,334 குழந்தைகள் பிறந்துள்ளதாக உள்துறை அமைச்சகத்தின் குடியுரிமைப் பதிவுத் தரவுகள் தெரிவிக்கின்றன, இது முந்தைய ஆண்டை விட 3.1 சதவீதம் அதிகரித்துள்ளது. இது தொடர்ந்து எட்டு ஆண்டுகள் சரிவைத் தொடர்ந்து பெறப்பட்ட அதிகரிப்பு எண்ணிக்கையாகும். இதற்கிடையில், பதிவுசெய்யப்பட்ட மொத்த மக்கள் தொகை கடந்த ஆண்டு 51,217,221 ஆக இருந்தது, 2020 முதல் ஐந்து ஆண்டுகளாக தென்கொரிய மக்கள் தொகை சுருங்குவதாக Yonhap செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. முன்னதாக டிசம்பர் 24 அன்று, தென்



கொரியா அதிகாரப்பூர்வமாக “உயர்ந்த” சமூகத்தின் வகைக்குள் நுழைந்தது, அரசாங்க தரவுகளின்படி, 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் அதன் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## தெற்கு கலிபோர்னியாவில் விமான விபத்து;

### இருவர் பலி, 18 பேர் காயம்



தெற்கு கலிபோர்னியாவில் வியாழன் (02) அன்று வணிக கட்டிடத்தின் மேற்கூரையில் சிறிய ரக விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்ததுடன் 18 பேர் காயமடைந்ததாக அமெரிக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியாவின் புல்லர்டன் நகரில் நடந்த விபத்து குறித்து அந்நாட்டு நேரப்படி வியாழன் பிற்பகல் 2.09 மணிக்கு பொலிஸாருக்கு அறிக்கை கிடைத்ததாக நகர காவல்துறை செய்தித் தொடர்பாளர் கிறிஸ்டி வெல்ஸ் தெரிவித்தார். விபத்தினை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் பொலிஸார் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுத்தனர். விபத்தினை அடுத்து காயமடைந்த 10 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். எட்டு பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அதேநேரம், விபத்தில் இருவர் உயிரிழந்ததாக புல்லர்டன் நகர பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் விமானத்தில் இருந்தார்களா அல்லது தரையில் இருந்தார்களா என்பது உடனடியாகத் தெரியவில்லை. நான்கு இருக்கைகள் கொண்ட ஒற்றை எஞ்சின் கொண்ட விமானம் புறப்பட்ட ஒரு நிமிடத்தில் விபத்துக்குள்ளானதை விமான கண்காணிப்பு இணையதளமான ஃப்ளைட்அவேர் குறிப்பிட்டது. புல்லர்டன் லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து தென்கிழக்கே 40 கி.மீ தொலைவில் சுமார் 140,000 மக்கள் வசிக்கும் நகரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யூனை கைது செய்வதற்கான முயற்சியை இடைநிறுத்திய தென்கொரிய அதிகாரிகள்

தென் கொரிய அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலைக் (Yoon Suk Yeol) கைது செய்யும் முயற்சியை இடைநிறுத்தியதுடன், பாதுகாப்புப் படையினருடன் சுமார் ஆறு மணி நேர மோதலுக்குப் பின்னர் சியோலில் உள்ள அவரது இல்லத்தை விட்டு வெளியேறினர். உயர்மட்ட அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகம் (CIO) வெள்ளிக்கிழமை (03) பிற்பகல் 1:30 மணிக்கு யூன் சுக் யோலுக்கு எதிரான பிடியாணை உத்தரவை நிறைவேற்றுவதை கைவிடுவதாக கூறியது. புலனாய்வாளர்கள் யூனைத் தடுத்து வைப்பதற்காக ஜனாதிபதி இல்லத்தில் மேற்கொண்ட சுமார் ஆறு மணி நேர போராட்டத்துக்கு பின்னர் இந்த அறிவிப்பு வெளிவந்தது.

கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி இராணுவச் சட்டத்தை விதிக்க முயற்சித்ததற்காக தென்கொரியாவின் இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் யோலுக்கு (Yoon Suk Yeol) எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை புலனாய்வாளர்கள் கைது செய்ய பிடியாணை உத்தரவினை நாடினார்.

கிளர்ச்சி மற்றும் தேசத்துரோக குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல விசாரணைகளை எதிர்கொண்டுள்ள யூன், கடந்த இரண்டு வாரங்களாக விசாரணைக்கு ஆஜராகுமாறு மூன்று அழைப்பாணைகளை புறக்கணித்ததன் அடிப்படையில் இந்த பிடியானை உத்தரவு கோரப்பட்டது.

இதையடுத்து யூனை கைது செய்து விசாரணை மேற்கொள்ள சியோல் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது. இதேவேளை, யூனின் பதவி நீக்கத்தை எதிர்த்தும் அவர் கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் அண்மைய நாட்களில் ஜனாதிபதி இல்லத்திற்கு வெளியே திரண்டிருந்தனர்.

இந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை புலனாய்வாளர்கள் யூனைக் காவலில் வைப்பதற்கும், ஜனாதிபதி இல்லத்தைத் தேடுவதற்கும் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவுக்கு அமைவாக பணிகளை ஆரம்பித்திருந்தனர்.

எனினும், ஜனாதிபதி இல்ல



பாதுகாப்புப் பகுதிகள் மீதான கட்டுப்பாடுகளை மேற்கோள் காட்டிய ஜனாதிபதி பாதுகாப்பு சேவை அதிகாரிகள், பிடியாணையை நிறைவேற்றவிடாது புலனாய்வாளர்களை தடுத்து நிறுத்தியதுடன் அவர்களுடன் கடும் வாதப்பிரதிவாதங்களையும் மேற்கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி பாதுகாப்பு சேவை அதிகாரிகளை எதிர்கொள்வதற்கு முன்னதாக புலனாய்வார்கள், ஜனாதிபதி இல்லத்துக்கு வெளியே திரண்டிருந்த யூனின் பெருந்திரளான ஆதரவாளர்களினதும், இராணுவப் பிரிவினரதும் கடும் எதிர்ப்புகளையும் எதிர்கொண்டனர்.

எவ்வாறெனினும், பின்னர் யூனை கைது செய்வதற்கான முயற்சியை உயர்மட்ட அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலக புலனாய்வாளர்கள் இடைநிறுத்தினர்.

யூன் இராணுவச் சட்ட முயற்சியில் தோல்வியுற்றது குறித்து கூட்டு விசாரணை நடத்த பிடியாணை செயல்படுத்தும் குழுவில் உயர்மட்ட அதிகாரிகள் (CIO) பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைப் பிரிவுடன் இணைந்துள்ளனர். பிடியாணையை செயல்படுத்தும் குழுவில் CIO வைச் சேர்ந்த 30 பேரும் 120 பொலிஸ் பணியாளர்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறெனினும், தற்போதைய பிடியாணை உத்தரவு காலாவதியாகும் முன் யூனைக் கைது செய்ய விசாரணை அதிகாரிகளுக்கு ஜனவரி 6 வரை அவகாசம் உள்ளது.

# கிரிக்கெட் சங்கங்களின் தரவரிசை

## TOP 10 Cricket Board

கிரிக்கெட் என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல, அது கோடிக்கணக்கானவர்களின் உணர்வாகவும், ஆயிரக்கணக்கானவர்களின் தொழிலாகவும் உள்ளது. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி, தற்போது உலகெங்கிலும் கோடிக்கணக்கான ரசிகர்களைக் கொண்ட இந்த விளையாட்டு, பல நாடுகளின் பொருளாதாரத்திற்கும் முக்கிய பங்களிப்பு செய்கிறது. ஆனால் அனைத்து கிரிக்கெட் சங்கங்களும் ஒன்று போலவே செல்வத்தை வைத்திருப்பதில்லை. அவை ரசிகர்களுக்கு ஏற்பவும், அந்த நாடுகளில் உள்ள சூழலுக்கு ஏற்பவும் மாறுபடுகிறது.

### உலகின் பணம் கொழிக்கும் 10 கிரிக்கெட் சங்கங்களின் தரவரிசை

1. உலகில் உள்ள கிரிக்கெட் சங்கங்களில் பணம் கொழிக்கும் சங்கங்களில் இந்திய கிரிக்கெட் சங்கம் முன்னணியில் உள்ளது. இந்தியா முழுவதும் ஒரு மதத்தைப் போல கிரிக்கெட் மதிக்கப்படுகிறது, அதன் ரசிகர்களும் கோடிக்கணக்கில் உள்ளார்கள். முக்கியமாக, ஐபிஎல் காரணமாக பிசிசிஐ-க்கு அதிக வருமானம் வரத்தொடங்கியது. தற்போது, சுமார் ரூ.18,760 கோடி மதிப்போடு, பிசிசிஐ உலகின் மிகப் பணக்கார சங்கமாகத் திகழ்கிறது.
2. அவுஸ்திரேலியா கிரிக்கெட் சங்கம் இந்த பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியாவில் பிக் பேஷ் லீக் உள்ளிட்ட தொடர்களாலும், சர்வதேச அளவில் அவுஸ்திரேலிய அணி செலுத்தும் ஆதிக்கத்தாலும், அவுஸ்திரேலியா விளையாடும் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான உரிமையும் அதிக அளவில் உள்ளது. சுமார் ரூ.656 கோடியுடன் இந்த பட்டியலில் 2ஆவது இடத்தில் உள்ளது.
3. இங்கிலாந்து கிரிக்கெட் சங்கம் இந்த பட்டியலில் மூன்றாவதாகும். இங்கிலாந்தில் நடக்கும் '100' தொடரிலும், சர்வதேச போட்டிகளிலும், உள்ளூர் போட்டிகளிலும், விற்பனையாகும் டிக்கெட்டுகள் மூலமும், ஒளிபரப்பும் உரிமை மூலமும் இங்கிலாந்து கிரிக்கெட் சங்கத்திற்கு வருவாய் வருகிறது. இங்கிலாந்து கிரிக்கெட் சங்கம் சுமார் ரூ.492 கோடி மதிப்பைக் கொண்டுள்ளது.
4. சுமார் ரூ.458 கோடி ரூபாய் மதிப்பைக் கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கம் நான்காவது இடத்தில் உள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் லீக் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கம் பெரிதும் வளர்ந்துள்ளது.
5 பங்களாதேஷ் கிரிக்கெட் சங்கம் சுமார் ரூ.425 கோடி சொத்துடன் ஐந்தாவது இடத்தில் உள்ளது. பங்களாதேஷ் பிரிமியர் லீக், சர்வதேச போட்டிகளினுடைய டிக்கெட் விற்பனை மற்றும் ஒளிபரப்பும் உரிமை உள்ளிட்டவற்றால் நிதி கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
6. தென்னாப்பிரிக்க கிரிக்கெட் சங்கம் சுமார் ரூ.392 கோடி மதிப்புடன் இந்த பட்டியலில் 6ஆவது இடத்தில் உள்ளது. இந்த சங்கத்திற்குப் பழமையான வரலாறு இருந்தாலும், அரசியல் சூழல்களால் சற்று பின்னடைவையே சந்தித்துள்ளது. மற்ற சங்கங்களைப் போலவே இதன் வருமானமும் அமைந்துள்ளது.
7. சிம்பாப்வே கிரிக்கெட் சங்கம் சுமார் ரூ.317 கோடி மதிப்புடன் இந்த பட்டியலில் 7ஆவது இடத்தில் உள்ளது. அரசியல் காரணங்களாலும், பொருளாதார காரணங்களாலும் பின்னடைவைச் சந்தித்திருந்தாலும், தொடர்ந்து சர்வதேச போட்டிகளில் விளையாடி வருகிறது சிம்பாப்வே.
8. இலங்கை கிரிக்கெட் சுமார் ரூ.166 கோடி சொத்துடன் இந்த பட்டியலில் 8ஆவது இடத்தில் உள்ளது. இலங்கை கிரிக்கெட் அரசியல் காரணங்களாலும், பொருளாதார காரணங்களாலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. லங்கா பிரிமியர் லீக், டிக்கெட் விற்பனை மற்றும் ஒளிபரப்பும் உரிமை உள்ளிட்டவற்றால் இலங்கை கிரிக்கெட் சங்கம் வருமானம் ஈட்டி வருகிறது.
9. கிரிக்கெட் வரலாற்றில் அதிக வெற்றி பெற்ற அணியாக இருக்கும் மேற்கிந்திய தீவுகள், சமீபகாலமாக ஜொலிக்காமல் உள்ளது. கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சங்கம், ரூ.125 கோடி சொத்து மதிப்புடன் 9ஆவது இடத்தில் உள்ளது.
10. நியூசிலாந்து கிரிக்கெட் சங்கம், ரூ.75 கோடி சொத்து மதிப்போடு இந்த பட்டியலில் 10ஆவது இடத்தில் உள்ளது. சிறிய நாடாக இருந்தாலும், தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட்டில் முக்கிய இடத்தை வகிக்கிறது நியூசிலாந்து அணி.

# லயனல் மெஸ்ஸியின் சொத்து ரூ.19,000 கோடி





உலக உதைப்பந்தாட்ட பட்டத்தை வென்ற ஆர்ஜென்டினாவின் சூப்பர் ஸ்டார் லயனல் மெஸ்ஸியின் நிகர சொத்து மதிப்பு சுமார் 650 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் (இலங்கை ரூபாவில் கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்பெயின் பங்குச் சந்தை மெஸ்ஸியின் நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களைப் பட்டியலிட்டுள்ளது, இதில் ஏழு பைஸ்டார் ஹோட்டல்கள், மூன்று வணிக வளாகங்கள், ஸ்பெயினில் ஐந்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் லண்டன் மற்றும் பாரிஸில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகியவையாகும். சொத்து தொடர்பான ஆவணங்களை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தவிர, பார்சிலோனா நகரத்துக்கு வெளியே கெஸ்டெல் டொல்ப் என்ற கடற்கரை ஆடம்பர பங்களா மற்றும் சொகுசு பங்களாக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதைத்தவிர மில்லியன் கணக்கான வாகனங்கள் தவிர, 15 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள கல்ஃப்ஸ்ட்ரீம் என்ற தனியார் ஜெட் விமானமும் உள்ளது. மணிக்கு 940 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கும் திறன் கொண்ட இதில் 16 இருக்கைகள் - சமையலறை மற்றும் இரண்டு குளியலறைகளைக் கொண்டுள்ளன.

தற்போதைய இன்டர்மியாமி ஸ்போர்ட்ஸ் கிளப் மற்றும் முன்னாள் பார்சிலோனா ஜாம்பவான் மெஸ்ஸி, Edificio Rostowe என்ற பெயரில் தனது நிறுவன குழுமத்தின் தலைவராக உள்ளார். அவரது மனைவி அன்டோனெல்லா ரோசியுசோ, வணிகக் குழுவின் துணைத் தலைவராக உள்ளார்.

ஸ்பெயின் வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு பங்குச் சந்தையான (Portfolio Stock Exchange) தரவுகளின் படி மெஸ்ஸியின் நிறுவனத்தின் ஒரு பங்கு US$60 (இ.ரூபா 17,538) மதிப்புடையது, இதன் சந்தை மூலதனம் US$232.12 மில்லியன் (இ.ரூபா 6,785 கோடி) என்று ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

# சர்வதேச தடகள போட்டிக்கான வைத்தியராக தம்மிக்க சேனநாயக்க நியமனம்



தென்கொரியாவின் குமி நகரில் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள ஆசிய தடகளப் போட்டிக்கான மருத்துவ சேவைகளின் சர்வதேச பிரதிநிதியாக இலங்கை விளையாட்டு மருத்துவர் தம்மிக்க சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். ஆசிய தடகள சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நியமனம் முதல் முறையாக இலங்கை வைத்தியர் ஒருவர் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பமாகும்

கலாநிதி சேனநாயக்க பதினைந்து வருடங்களுக்கு மேலாக இலங்கை தடகள சம்மேளனத்தின் வைத்தியராக பணியாற்றியுள்ளதுடன் ஆசிய வலயத்தின் தடகளத்தில் சிரேஷ்ட வைத்தியராகவும் உள்ளார். அவர் ஆசிய தடகள சங்க மருத்துவக் குழு நிர்வாக சபையின் உறுப்பினராகவும் செயற்படுகிறார். தற்போது விளையாட்டு மருத்துவ நிறுவனத்தில் பணிபுரிம் இவர் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவராவார்.

# குத்துச்சண்டையில் ஆர்வம் காட்டும் அல்ஜீரிய பெண்கள்



பெரிஸ் ஒலிம்பிக்கில் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற அல்ஜீரிய வீராங்கனை இமென் கெலிஃபின் சாதனை அல்ஜீரிய பெண்களிடையே மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தி பலரையும் குத்துச்சண்டையில் ஆர்வம் கொள்ள செய்துள்ளது.

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் அல்ஜீரிய குத்துச்சண்டை வீராங்கனையான இமென் தங்கப் பதக்கம் வென்றார். பாலின அடையாளம் தொடர்பான சர்ச்சைகளுக்கு நடுவே இமென் வெற்றி பெற்றார்.

வடக்கு ஆப்பிரிக்க நாடான அல்ஜீரியாவில் பெண்கள் பலரும் குத்துச்சண்டையில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். அவர்கள் இமென் கெலிஃபை தங்களது முன்மாதிரி தெரிவிக்கின்றனர்.

அல்ஜீரியாவில் உள்ள சில குழுக்கள் இமென் கெலிஃப் தவறான உதாரணத்தை பெண்களுக்கு ஏற்படுத்துவதாக அவர் மீது விமர்சனங்களை முன்வைத்தன. ஹிஜாப் அணிவதற்கு பதிலாக அவர் குத்துச்சண்டை உடையை அணிந்து பெண்களுக்கு தவறான முன்னுதாரணமாக திகழ்கிறார் எனவும் கூறினர்.

டொனால்டு டிரம்ப், எலான் மஸ்க், ஜே.கே.ரௌலிங் போன்ற பலரும் இமென் கெலிஃப் ஒரு திருநங்கை எனக் கூறிவந்த நிலையில், அல்ஜீரியாவும் அல்ஜீரிய மக்களும் அவருக்கு உறுதுணையாக நின்று ஆதரவளித்தனர்.

# சிட்னி டெஸ்டில் தடுமாறும் இந்திய அணி



அவுஸ்திரேலிய -இந்திய அணிகளுக்கிடையில் சிட்டினியில் நடைபெற்ற இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 185 ஓட்டங்களுக்கு வெளியேறியது.

இந்திய வீரர்கள் பயிற்சியாளர் கவுதம் கம்பீர் குறிப்பிட்டதை போல் குறைந்த வேகத்தில் ஆடிய நிலையில் 200 ஓட்டங்களை கூட எடுக்க முடியாமல் தடுமாறியது.

இந்திய அணியில் அதிகபட்சமாக ரிஷப் பண்ட் 40 ஓட்டங்கள். ரவீந்திர ஜடேஜா 26 அதிபட்ச ஓட்டங்களை எடுத்தனர்.

பும்ராவின் தலைமையில் இந்திய அணி களம் இறங்கியது. நாணய சுழற்சியில் வென்று துடுப்பாடியது.

இந்த தொடரின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது போட்டிகளில் இந்திய அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இருக்கவில்லை.

இந்த நிலையில், பயிற்சியாளர் கவுதம் கம்பீர் இனி யாரும் தங்கள் இயல்பின்படி ஆடக் கூடாது எனவும், தான் சொல்லும்படி தான் ஆட வேண்டும் எனவும் கூறினார்.

அதன்படி அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் குறைந்த வேகத்தில் நிதானமாக ஓவருக்கு 2 ஓட்டங்கள் என்ற விகிதத்திலே இந்திய அணி செயற்பட்டது.

இந்திய அணியின் துவக்க வீரர்களான ஜெய்ஸ்வால் 26 பந்துகளில் 10 , கே எல் ராகுல் 14 பந்துகளில் 4 ஓட்டங்கள் ஆட்டம் இழந்தனர். அதன் பின் வந்த சுப்மன் கில் 64 பந்துகளில் 20. விராட் கோலி 69 பந்துகளில் 17 மட்டுமே எடுத்தனர்.

ரிஷப் பண்ட் 98 பந்துகளை சந்தித்து 40 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். ரவீந்திர ஜடேஜா 95 பந்துகளை 26 . கடந்த போட்டியில் சதம் அடித்த நிதிஷ் குமார் ரெட்டி முதல் பந்திலேயே வெளியேறினார். வாஷிங்டன் சுந்தர் 30 பந்துகளில் 14 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தார்.

அதன் பின் வந்த வேகப் பந்துவீச்சாளர் பிரசித் கிருஷ்ணா 3, பும்ரா 22 வெளியேறினர். சிராஜ் 3 ஓட்டங்கள். இந்திய அணி 72.2 ஓவர்களில் 185 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலிய அணியில் சிறப்பாக பந்து வீசிய மிட்செல் ஸ்டார்க் மூன்று விக்கெட்களையும், ஸ்காட் போலான்ட் 20 ஓவர்களில் 31 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்களையும் வீழ்த்தினார். கப்டன் பாட் கம்மின்ஸ் 2 விக்கெட்களை வீழ்த்தினார். நாதன் லியோன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.






இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 05 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# ஒருவன்
ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 13 குரோதி வருடம் மார்கழி மாதம்
21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1446 ரஜப் 05 (05.01.2025)


# மலர்ந்துள்ள புது வருடமும் தேர்தல் ஆண்டாக அமையுமா?



- எம்.எஸ். அமீர் ஹுசைன்



> பிறந்துள்ள வருடத்தில் இந்நாட்டை பொருளாதார சுபீட்சமும் அபிவிருத்தியும் கொண்ட நாடாக மலரச் செய்தல், வாழ்க்கைச் சுமையை குறைத்தல், அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைத்து ஸ்தீரமான ஆட்சியை நிலை நிறுத்துதல் ஆகியனவே அரசாங்கத்தின் முன்னுள்ள பிரதான சவால்களாகும்...

சோதனைகள் நிறைந்ததாக அமைந்த 2024ஆம் ஆண்டு விடைபெற்று 2025ஆம் ஆண்டு புதிய எதிர்பார்ப்புகளோடு மலர்ந்திருக்கின்றது. மக்கள் கடந்து போன முன்னைய வருடத்தில் அடைய முடியாமல் போன அபிலாஷைகளை மலரும் புது வருடத்திலாவது அடைந்துகொள்ள வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொள்வதும் அதற்கான திட்டங்களை வகுப்பதும் இயல்பாக நடைபெறுகின்றது. அதே போன்று தான் பதவியில் இருக்கின்ற அரசும் நாட்டிற்கும் மக்களுக்கும் ஆற்ற வேண்டிய சேவைகள், பணிகள் தொடர்பாக திட்டமிடல்களை முன்வைப்பதோடு உரிய இலக்கை அடைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை பொதுவான செயற்பாடுகளாகும். அந்த வகையில் பதவியில் இருப்பது இன்னும் முதிர்ச்சியடையாத புதிய ஆட்சியாகும். பதவிக்கு வந்து இரண்டே மாதங்கள் தான் ஆகின்றன.



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு கடந்துபோன இரண்டு மாத காலப்பகுதிக்குள் சாதித்தவை என்ன என்பதை விட மலரும் 2025ஆம் ஆண்டு புது வருடத்தில் இந்நாட்டை பொருளாதார சுபீட்சமும் அபிவிருத்தியும் கொண்ட நாடாக மலரச் செய்தல், மக்களது வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், அரசியல் ரீதியாக காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைத்து ஸ்தீரமான ஆட்சியை நிலை நிறுத்துதல் போன்றவை அரசாங்கத்தின் முன்னுள்ள பிரதான எதிர்பார்ப்புக்களாகும். ஏற்கனவே இந்த அரசு பதவிக்கு வர முன்னர் மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளில் இவை பிரதான அம்சங்களாகும். ஏற்கனவே இந்த நாடு 70 வருடங்களாக நாசமாக்கப்பட்டு பொருளாதார ரீதியாக பின்னடைவுகளையும் இழப்புக்களையும் சந்தித்துள்ள ஒரு நாடு என்பது இந்த ஆட்சியில் அதிகாரத்தை பெற்றுள்ள அனைத்து தரப்பினர்களதும் குற்றச்சாட்டாகும். அதனால் கடந்த 70 வருடங்களாக இந்த நாட்டில் மேலாதிக்கம் செலுத்திய ஊழல், மோசடிகளை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கைகளை எடுத்தல், கடந்த ஆட்சி காலப்பகுதியில் சொல்லப்பட்ட ஊழல்கள், சூரையாடல்களில் ஈடுபட்டு அரச நிதி, சொத்துக்களை கையாடல் செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் என்பன அரசின் முன்னுள்ள பிரதான சவால்களாகும்.

> ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு வெஸ்ட் மினிஸ்டர் முறையிலான நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு சொல்லக் கூடிய பிரதமர் பதவியைக் கொண்ட நாடாளுமன்ற நிர்வாக முறை ஏற்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது...




இந்த ஆட்சி மலர்ந்த நாளில் இருந்து முகம் கொடுத்து வரும் பிரதான சவாலாக அமைவது மக்கள் எதிர் நோக்குகின்ற வாழ்க்கை செலவு உயர்வை குறைப்பதற்கான நிவாரண நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பிலானது. ஆனாலும், இந்த வருடத்தில் 2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், அரசியல் அமைப்பிற்கான திருத்தம் என்பன அரசாங்கத்தால் முகம் கொடுக்க இருக்கின்ற ஏனைய சவால்களாகும். நாட்டின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்து வருகின்ற நிலையில், உள்நாட்டு வருமானங்கள் அடிமட்டத்தில் இருக்கின்ற நிலையில் சர்வதேச நாணய நிதியத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மூன்றாம் கட்ட கடனை மாத்திரம் நம்பி திட்டங்களை மும்மொழிய முடியாத நிலையில் பொருளாதார நெருக்கடி தொடர்கின்றதால் இந்த நெருக்கடியை சமாளிக்க தீர்வு காண வேண்டி இருக்கின்றது.

மேலும்,ஏற்கனவே பொதுத் தேர்தல் காலப்பகுதியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பிரதானமாக அமைந்தவை பின்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஏப்ரலில் நடத்துவது என்ற விடயமாகும்.

அத்துடன், கடந்த 06 வருடங்களுக்கு மேலாக பின்போடப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்துவதென்று வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளதால் அதனையும் மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

2025 ஏப்ரலில் இடம்பெறவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் இந்த தேர்தல்களுக்கான நாள் குறிக்கப்பட வேண்டும். அதன்படி இவ்வருடமும் இரண்டு தேர்தல்கள் நடக்கும் என்ற நிலை காணப்படுவதால் 2025 ஆம் ஆண்டும் 2024 ஆம் ஆண்டைப் போல் ஒரு தேர்தல் ஆண்டாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. அவ்வாறான எதிர்பார்ப்பு நிலவக் காரணம் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலங்களில் இந்த இரண்டு தேர்தல்களையும் நடத்துவோம் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி வழங்கி இருக்கின்றார். அவ்வாறு செய்யத் தவறினால் அரசாங்கம் அரசியல் நெருக்கடிகளை சந்திக்க நேரிடலாம்.

இதற்கிடையில் தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களில் ஒன்றான அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த தட்டுப்பாட்டை சமாளிக்க இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியும் உள்நாட்டில் அரிசித் தட்டுப்பாட்டை தீர்க்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அத்துடன், நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அரசிற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்து நாடாளுமன்றத்தில் 158 ஆசனங்கள் உள்ளன. இந்த பொன்னான சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நடை முறையில் இருந்து வருகின்ற அரசியல் அமைப்பை மாற்றியமைத்து மூன்றாவது குடியரசு யாப்பை வரைய வேண்டும் என்பது அரசின் எதிர்பார்ப்பாகும். புதிய அரசியல் யாப்பு வரும் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு வெஸ் மினிஸ்டர் முறையிலான நாடாளுமன்றத்திற்கு பொறுப்பு சொல்லக் கூடிய பிரதமர் பதவியைக் கொண்ட நாடாளுமன்ற நிர்வாக முறை ஏற்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. அதுவும் அது ஓரளவிலான நிறை வேற்று அதிகாரத்தை கொண்ட பிரதமர் பதவியாகவே அமையும்.



அதற்கமைய பார்க்கின்ற போது மலர்ந்துள்ள 2025 ஆம் ஆண்டு இந்த அரசிற்கு பல வழிகளில் சோதனைகளும் சவால்களும் நிறைந்த ஆண்டாக அமைய இருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. எப்படியோ ஒரு பலமான வெளிநாட்டு கொள்கை மற்றும் சர்வதேச உறவை கட்டியெழுப்புவதற்கான தந்திரோபாயங்கள் ஆகியனவே இந்த சவால்களை இலகுவாக வெற்றி கொள்ள கைகொடுக்கும் வழிமுறைகளாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மொட்டிலிருந்து வெட்டிச் சென்றவர்கள் மீண்டும் ஒட்டுவதற்கு பேச்சுவார்த்தை

கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ஏனைய கட்சிகளுக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் கட்சியில் இணைவதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



ශ්‍රී ලංකා පොදුජන පෙරමුණ
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன
Sri Lanka Podujana Peramuna



கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சர்வஜன சக்தி ஆகிய கட்சிகளுக்கு ஆதரவளித்த தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்ததாக கூறப்படுகின்றது.

மாத்தறை பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் தென் மாகாண சபையின் சுமார் இருபது முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். இச்சந்திப்பில், எதிர்வரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் சகல கருத்து முரண்பாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு பரந்துபட்ட கூட்டணியாக இணைந்து போட்டியிடுவது குறித்தே இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து விலகிய தென் மாகாண முன்னாள் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் எதிர்காலத்தில் கலந்துரையாடவுள்ளதாக தென் மாகாண சபையின் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த சந்திப்பில் முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## ரிஷா பேசுகிறேன்..

# குப்பையோடு படும் பாடு



■ காலை விடிந்தாலே குப்பை சேகரிப்போருடன் மல்லுக்கட்ட வேண்டிய நிலை என்றாகிவிட்டது. அவர்கள் நினைத்த நாளில்தான் வருவார்கள், வந்தாலும் ஆயிரம் சட்டங்கள் போடுவார்கள். பஸ் கண்டக்டர்கள் போலத்தான் இவர்களும் நடந்து கொள்வார்கள். கையில் எவ்வளவாவது திணித்தால் உடனே சரணடைந்து விடுவார்கள்.

■ குப்பை அள்ளுவோர் குப்பைகளை தரம் பிரித்து தரச் சொல்வார்கள். அப்படி இல்லாவிட்டால் அவற்றை எடுக்க மாட்டார்கள். ஆனால், கடைகாரர்கள் எந்தவகை குப்பைகளையும் எப்படி கொடுத்தாலும் அவை தரம் பிரிக்காமல் இருந்தாலும் வாய் பேசாமல் இவர்கள் எடுத்துச் செல்வார்கள். சாப்பாட்டுக் கடை என்றால் அங்கு இவர்களுக்கு சாப்பாடு இலவசம், பழக்கடை என்றால் பழங்கள் இலவசம், பொக்கெட்டிலும் ஒரு தொகை விழுந்து விடும். ஆக! அங்கு எந்த வகை குப்பையும் அள்ளப்பட்டு விடும் ..

■ அடுக்குமாடி வீடுகளில் வசிப்பவர்களும் குப்பை சேகரிப்போரிடம் படும் பாடு பெரும்பாடு தான். குப்பை லொறிகளில் வந்து கொண்டே 'குப்பை குப்பை ' என சத்தமிடுவார்கள், மேல்மாடியில் உள்ளவர்கள் கீழிறங்கி வரும் வரை இவர்கள் காத்திருக்க மாட்டார்கள். கீழிறங்கி வருவதற்குள் அங்கிருந்து நகர்ந்து விடுவார்கள்.. கீழிறங்கி வந்தவர்கள் குப்பை வாளியுடன் அல்லாட வேண்டியது தான்..

■ கார்ட் போர்ட், பேப்பர் கடதாசி குப்பைகள் மாத்திரம் சேகரிக்கின்ற நாட்கள் குப்பை அள்ளுவோருக்கு மிகவும் பிரியமான நாளாகவே இருக்கும். அன்று ஜாலியாகவே இருப்பார்கள். காரணம், இவற்றைக் கொண்டு சென்று நல்ல விலைக்கு விற்கலாம் என்பதால் மிகவும் பொறுமையாக, பாசமாக அவற்றை சேகரித்துக் கொள்வார்கள். நல்ல கலெக்‌ஷன் தான் போங்கல்.

■ முன்னரெல்லாம் வீதிகளில் நகர சபையினால் வைக்கப்பட்ட பென்னம் பெரிய குப்பைத் தொட்டிகள் காணப்பட்டதுண்டு. வீடுகளில் உள்ளவர்கள் அந்த தொட்டியில் தான் குப்பைகளை போடுவதுண்டு. ஆனால் இப்போதோ அவற்றை அப்புறப்படுத்தி விட்டனர். ஆகையினால் குப்பை வரும் வரை வீடுகளிலேயே குப்பைகளை வைத்திருக்க வேண்டிய நிலை. நாள் கணக்கில் குப்பை அள்ள வராத சந்தர்ப்பங்களில் குப்பைகளில் புழு அரிக்கும், வீடெல்லாம் நாற்றம் அடிக்கும். மாற்று வழி எதுவுமின்றி குடியிருப்போர் மனம் பரிதவிக்கும்..

■ வீட்டு வாசலில் குப்பை தயார் நிலையில் இல்லையென்றால் குப்பை அள்ளுவோருக்கு கோபம் பொத்துக்கொண்டு வரும்.. வார்த்தைகளில் மரியாதை இருக்காது, வேலையில் நேர்மையும் இருக்காது. முன்கூட்டியே வாசலில் குப்பை வைத்தால் தெருநாய்கள் அவற்றை ஊரெல்லாம் நாறடித்து விடும். வேறென்ன செய்வதாம், நாய்களுக்கு எட்டாத உயரத்தில் குப்பைகளை வாசலில் தோரணமாய் கட்டிவிட வேண்டிய நிலை தான்.

■ அநேகமான வீடுகளில் கணவன் – மனைவி உட்பட அனைவரும் தொழிலுக்கு புறப்பட்டு விடுவார்கள். அதன் பின்னர் தான் குப்பை அள்ளுவோர் வருவதுண்டு, அப்போது வீட்டிலிருந்து குப்பைகளை கொடுப்பது யாராம்..? இதற்கு மாற்று வழி ஏதுமின்றி பலரும் திணறுகின்றனர்.. ஆனால், மாதக் கடைசியிலும் பெருநாள் நாட்களிலும் குப்பை சேகரிப்போர் அன்பளிப்பு (?) பெற மட்டும் கலெக்‌ஷனுக்கு வந்து விடுவார்கள்.

■ வீடுகளில் குப்பை அள்ள வருபவர்களை விட வீதி ஓரங்களில் குப்பை அள்ளுபவர்கள் எவ்வளவோ மேல் எனலாம். அவர்கள் தினமும் தமது கடமைகளை சீராக செவ்வனே செய்வதை காண முடிகின்றது. வீதி ஓரங்களும் சுத்தமாக இருப்பதை கூறியே ஆக வேண்டும்.

-ரிஷா

## கொள்ளுப்பிட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லம்?



கொள்ளுப்பிட்டி பகுதியிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக பயன்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அறியவருகின்றது. அதனடிப்படையில் ஏற்கனவே ஒரு கட்டடம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதனை அவதானிக்க அரச அதிகாரி ஒருவர் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தொலைதூரப் பகுதிகளிலிருந்து வரும் அமைச்சர்களுக்கு தங்குமிட தேவைகளை கருத்திற் கொண்டே இந்த அடுக்குமாடி குடியிருப்பு பயன்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. ஏற்கனவே மாதிவல உத்தியோகபூர்வ இல்ல வளாகத்தில் சுமார் 120 பேர் தங்கக்கூடிய வசதி உள்ளமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய அங்கு நிலவுகின்ற இடப்பற்றாக்குறையை நிவர்த்திக்கும் நோக்கிலேயே கொழும்பிலிருந்து சுமார் 30 கிலோமீற்றருக்கு மேற்பட்ட தொலைவில் வசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை கவனத்திற்கொண்டே நாடாளுமன்ற உறுப்பினர் சிறப்புரிமையின்படி கொழும்பில் மேற்படி உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஒன்லைன் மோசடிகளுக்குப் பின்னணியில்




கடந்த காலங்களில் சுதந்திரமாக இயங்கி வந்த ஒன்லைன் மோசடிகளுக்குப் பின்னால் அரசாங்க அதிகாரிகளும், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்கள் பலரும் இருப்பதும் தெரியவந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த ஒன்லைன் மோசடியால் 5000 கோடிக்கும் அதிகமான பொதுச் சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை தடுப்பதற்கு மத்திய வங்கியின் முன்னாள் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளால் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதன்படி, சட்டவிரோத நிதி நிறுவனங்களின் வடிவத்திலும் பிரமிட் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் புதிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மக்களிடமிருந்தும் பெருமளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ரணிலிடம் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணை?



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ மற்றும் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரிடம் விசாரணை நடத்த குற்றப்புலனாய்வு திணைக்களம் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தின் சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல மருந்து இறக்குமதியின் போது செய்ததாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பிலான விசாரணைகள் தொடர்பில் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்ஹ இலங்கைக்கு திரும்பிய பின்னர் இந்த விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

அதன்படி, ரணில் விக்கிரமசிங்ஹ, தினேஷ் குணவர்தன ஆகியோரின் வசிப்பிடங்களுக்குச் சென்று வாக்குமூலங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

## ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக சர்ச்சை தீவிரம்

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் காணப்படும் உள்முரண்பாடுகள் ஜனவரி மாத நடுப்பகுதிக்குள் தீவிரமாக வெடிக்கலாம் என அக்கட்சியின் உள்ளக வட்டாரங்களிலிருந்து ஒரு தகவல் கசிந்துள்ளது.

இதன்படி இத்தனை காலமும் சஜித் பிரேமதாசவிற்கு எதிராக பகிரங்கமாக எதிர்ப்பு தெரிவிக்காத ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோர் கூட சஜித்திற்கு எதிராக பகிரங்கமாக ஆட்சேபனைகளை தெரிவிக்கும் நிலைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, திஸ்ஸ அத்தநாயக்கவும் பகிரங்க அறிக்கைகளை வெளியிட ஆரம்பித்துள்ளார். சஜித் பிரேமதாச தன்னால் தெரிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட குழுவினருடன் மாத்திரம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு அரசியல் விவகாரங்களை கையாள்கின்றமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவே குறித்த ஆட்சேபனைகள், முரண்பாடுகள் வெளிப்பட்டுள்ளதாக கூறப்படுக்கின்றது.



சுஜீவ சேரசிங்கவை தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமித்தமை தொடர்பில் எழுந்த முரண்பாடுகளின் வெளிப்பாடே இவ்வாறு தலைமை மீதான எதிர்ப்பாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லவுள்ள முன்னாள் அமைச்சர்..?

கடந்த அரசாங்கத்தில் மனிதத்தையும் நாணயத்தையும் பெயராகக் கொண்ட முன்னாள் அமைச்சர் ஒருவர், வெளிநாடொன்றிற்கு தப்பிச் செல்லவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பை வழங்குவதாக பொதுமக்களிடமிருந்து பெருமளவிலான பணத்தை பெற்றுக்கொண்டமைக்காக அவரது சகோதரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதையடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவின் பிரசார நடவடிக்கைகளின் போது அரசாங்க நிதியை தவறாக பயன்படுத்தியமை மற்றும் பல நிதிக் குற்றங்களை செய்தமை தொடர்பிலும் இவர் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

இவர், 2020 ஆம் ஆண்டில், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன், பின்னர் அவர் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் இணைந்து



கொண்டார். அதனைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் இணைந்து கொண்ட அவர், பல்வேறு நிதிக் குற்றங்களுக்காக அமைச்சு அதிகாரங்களைப் பயன்படுத்தியதாக அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளைகளை ஊர்ந்து கவனித்தால் அவர்களின் தேவைகளை அறியலாம்!

### சத்குரு

அன்பான பெற்றோர்களே...

நீங்கள் எடுக்கும் பெரும்பாலான முடிவுகள் பயத்திலிருந்து வந்தவையே. உங்கள் பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெறவில்லை என்றால், அவர்கள் வீதிக்கு வந்துவிடுவார்கள் என்று நீங்கள் பயப்படுகிறீர்கள். ஒரு பெற்றோராக, உங்கள் கவலை சரியானது என்பதை நான் அறிவேன். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு சமூகமாக, வாழ்க்கையில் யாரும் நசுக்கப்பட மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தும் பாதுகாப்பு வலை இன்னும் நம்மிடம் இல்லை. ஆனால், 20 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட இன்று விஷயங்கள் மேம்பட்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு நிறைவான வாழ்க்கையை எப்படி உருவாக்குவது என்பதைத்தான் இப்போது நீங்கள் பார்க்க வேண்டும். ஒருவர் தனது இதயத்தையும், உயிரையும் தான் செய்யும் செயலில் ஈடுபடுத்த முடியாவிட்டால், அந்த செயல் மூலம் யாராலும் ஒரு நிறைவான வாழ்க்கையை உருவாக்க முடியாது. எனவே, பொருளாதார ரீதியாக அது எவ்வளவு நம்பிக்கையற்றதாகத் தெரிந்தாலும் அதைப்பற்றிக் கவலையுறாமல், ஒரு மாணவர் தான் செய்ய விரும்புவதைத் தேர்ந்தெடுப்பது முக்கியம்.



நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நண்பர்களாக இருப்பதாக சொல்கிறீர்கள். ஆனால் உங்கள் நட்பு, நீங்கள் விரும்புவதை அடைவதற்கான ஒரு தந்திரம் தான் என்றால், நீங்கள் ஒரு நல்ல நண்பர் அல்ல. நீங்கள் உண்மையான நண்பராக இருந்தால், நீங்கள் உங்கள் பிள்ளையின் வாழ்க்கையை மேம்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்பீர்கள். நீங்கள் உண்மையிலேயே உங்கள் பிள்ளை எப்படி அமர்ந்திருக்கிறது, நிற்கிறது, சிந்திக்கிறது, சூழ்நிலைகளுக்கு பதிலளிக்கிறது என்பதில் கவனம் செலுத்தினால், அவருக்கு என்ன தேவை என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

உங்கள் பிள்ளை ஒரு நாளைக்கு 30 நிமிடங்களை யோகாவில் முதலீடு செய்யட்டும். யோகா என்பது குழந்தைகள் கல்விப் பந்தயத்திலும் சிறப்பாக செயல்பட உதவும் ஒரு கருவி. இது உள் சமநிலை, மிகக் கூர்மையான அறிவு, மேம்பட்ட கவனம் ஆகியவற்றைக் கொண்டுவருகிறது. எனவே, சிறிதளவு யோகா செய்வதன் மூலம் உங்கள் குழந்தை மிகவும் புத்திசாலியாகவும் சமநிலையுடனும் இருப்பார் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிள்ளையும் தனது முழுத் திறனுக்கும் உழைக்க வாய்ப்புள்ள ஒரு உலகத்தை நாம் உருவாக்க வேண்டும். அதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு அர்ப்பணிப்பு தேவை. பாடசாலை கட்டணத்தை செலுத்தி விட்டால் மாத்திரம் இது நிகழ்ந்துவிடாது. அப்படி ஒரு உலகத்தைச் சாத்தியப்படுத்தும் நோக்கில் நாம் செயல்படுவோம்.



# உயிர் கொடுக்கும் சோற்றையே விஷமாக்கிய மோசடியாளர்கள்!

## "பிங்க் ரைஸ்" எனும் அரிசியில் நிறம் கலப்பு?



**நாட்டின் நிலவி வருகின்ற அரிசி மோசடியில் வித்தியாசமான ஒரு மோசடியும் இடம்பெற்று வருவதை சமீபத்திய ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. அதாவது, அண்மையில் இளஞ்சிவப்பு நிறத்திலான "பிங்க் ரைஸ்" எனும் ஒருவகை அரிசி மிகவும் பிரசித்திப் பெற்றிருந்தது. எனினும், குறுகிய காலத்துள் அந்த "பிங்க் ரைஸ்" எனப்படும் றோஸ் நிறத்திலாலான அரிசி மூலம் நடைபெற்ற மோசடி குறித்து பலவித தகவல்கள் வெளிவந்துள்ளன. அவை குறித்து இங்கு விபரமாக பார்ப்போம்.**

தொலைதூர வரலாற்றில் இலங்கையானது ஒரு தானியக் களஞ்சியமாக அறியப்பட்ட ஒரு நாடாக திகழ்ந்தது அதற்கு காரணம், இந்நாட்டு மக்களின் பிரதான வாழ்வாதாரம் விவசாயம் என்பதும், நாட்டுக்குத் தேவையான அளவில் அரிசியை விவசாயி வழங்கக் கூடியதாக இருந்ததும் தான். அக்காலங்களில் அவர்கள் விவசாயத்தில் இரசாயனங்களை பயன்படுத்தியதில்லை. அதனால் இலங்கையின் விவசாயம் மற்ற நாடுகளால் போற்றப்பட்டது. இளம் தலைமுறையினர் கேள்விப்படாத ஏறக்குறைய 4000 வகையான உள்ளூர் அரிசிகள் இலங்கையில் மன்னர்கள் காலத்திலிருந்து பயிரிடப்பட்டன. நமது முன்னோர்கள் 2000க்கும் மேற்பட்ட நாட்டு அரிசி வகைகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, கன்னோருவ மரபியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தற்போது 300 பழமையான அரிசி வகைகள் மட்டுமே பாதுகாக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் பாரம்பரிய விவசாயிகளிடம் தற்போது சுமார் 60 இனங்களே எஞ்சியுள்ளன, அவற்றில் 25 வகையான அரிசிகள் மட்டுமே நுகர்வுக்காக பயிரிடப்படுகின்றன. மூன்று வேளை சோற்றை உட்கொண்டிருந்த நாம் இன்று வெளிநாட்டிலிருந்து அரிசி வரும் வரையில் காத்திருக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளோம். அதிலும் இன்று அரிசி ஒரு விஷம் போன்றது என்றாகிவிட்டது.

பண்டைய அரிசிகளில் பல விதமான ஊட்டச்சத்துக்கள் இருந்தன. உலோக தனிமங்கள், இயற்கை தன்மை கொண்ட எண்ணெய் வகைகள், நார்ச்சத்து, பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற சத்துக்கள் இவற்றில் அடங்கியிருந்தன. ஆனால், தற்காலத்தில் அதிக விலை கொடுத்து கலப்பின விதைகளில் உற்பத்தி செய்யப்படும் அரிசியையே உண்ணுகின்றோம்.

ஆக, உயர்ரக உள்ளூர் அரிசி பயன்படுத்தப்படாதது தேசத்தின் துரதிர்ஷ்டம் என்று கூறுவதில் தவறில்லை. தரமற்ற அரிசி மட்டுமல்ல, விஷம் நிறைந்த உணவு வகைகளும் இன்று சந்தையில் கிடைக்கின்றன. ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக அந்த விஷத்தையே நாம் உட்கொண்டு வருகின்றோம். ஒரு தேசமாக நாம் நோயாளிகளாக மாறிவிட்டோம் என்பதே இறுதி முடிவாக கருத முடியும். சிறுநீரக நோய், புற்றுநோய், மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் போன்ற நோய்கள் இவற்றால் ஏற்படுகின்றன. நாட்டில் நோய் இல்லாதவர்களைக் கண்டுபிடிப்பது கடினம் என்றாகிவிட்டது.

தற்போது நாட்டில் பல முக்கிய அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசிக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் சூழ்நிலையை நாம் எதிர்கொண்டுள்ளோம். சில்லறை சந்தையில் நாடு, வெள்ளை பச்சை, சிவப்பு பச்சை போன்ற பொதுவாகப் பயன்படுத்தப்படும் அரிசியைக் கண்டுபிடிப்பது மிகவும் அரிதானதாகும். அண்மையில் பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல அரிசி ஆலை உரிமையாளர் ஒருவருக்கு சொந்தமான அரிசி மூட்டையொன்று கடையொன்றில் காணப்பட்டுள்ளது. இந்த றோஸ் நிறத்திலான சிவப்பு பச்சை அரிசியை சமைத்தாலும் அதனை வாயில் வைக்க முடியாத நிலையே இருந்தது. அதை சமைத்ததும் சோறு போல் இருக்கவில்லை, பாற்சோற்றை போன்றே இருந்தது. அதில் ஏதாவது ரசாயனப் பொருள் கலக்கப்பட்டுள்ளதா அல்லது பல வகையான அரிசிகளின் கலவையா அது என்பது அரிசி ஆலை உரிமையாளர்களுக்கே வெளிச்சம். ஆக றோஸ் நிறத்திலான இந்த அரிசிக்கு செயற்கையான வர்ணம் சேர்க்கப்பட்டதா? என்ற பலத்த சந்தேகம் நிலவுகின்றது.

இற்றைக்கு நான்கைந்து வருடங்களுக்கு முன்னர் நமக்கு றோஸ் நிறத்திலான அரிசியைப் பற்றிய அறிமுகம் இருக்கவில்லை. ஆனால், இப்போதெல்லாம் றோஸ் நிறத்திலான இளஞ்சிவப்பு பச்சை அரிசிக்கு அதிகமான வரவேற்பு உள்ளது. ஏனெனில், நுகர்வோருக்கு அதிக செலவில்லாத கட்டுப்படியாகும் விலையில் உள்ளமையினாலேயே பலரும் இந்த வகை அரிசியினை விரும்புவதாக உள்ளது. கல், மணல் இல்லாத அரிசியாக இது இருப்பதால், வீடுகளில் உள்ளவர்கள் கல், மணல் பொறுக்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால், நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவியபோது, அதற்கு மாற்றுத் தெரிவாக இருந்த றோஸ் நிற சிவப்பு பச்சை அரிசி மீதான அந்த நம்பிக்கை தற்போது தவிடு பொடியாகியுள்ளது.

**ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக விஷத்தையே நாம் உட்கொண்டு வருகின்றோம். ஒரு தேசமாக நாம் நோயாளிகளாக மாறிவிட்டோம் என்பதையே இறுதி முடிவாக கருத முடியும்**

இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசியை உள்ளூர் சிவப்பு அரிசியுடன் கலந்து "பிங்க் ரைஸ்" எனும் பெயரில் சந்தையில் விற்பனை செய்கின்ற மோசடி குறித்து சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தெரிய வந்திருந்தமை நாம் அறிந்ததே. அது இன்று உண்மை என நிரூபணமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. உண்மையில் இந்த வகை அரிசியானது வியாபார நோக்கத்திற்காக 'றோஸ் நிறம் ' என குறிக்கப்படுவதால், அத்தகைய நிறத்தை ஏற்படுத்துவதற்காக இளஞ்சிவப்பு நிற இரசாயனத்தை சேர்க்கின்றார்கள் என்ற பேச்சுக்கள் எழுந்துள்ளன.



இத்தகைய வியாபாரிகளின் பிடியில் சிக்கியுள்ள வர்த்தகத்துறையில் நிலவிய பலவித கலப்படங்கள் பற்றி மக்கள் கேள்விப்பட்டே உள்ளனர். பப்பாசி விதையை மிளகுடன் கலந்து அசல் மிளகு என விற்பனை செய்தமை, செங்கல் தூளை மிளகாய் தூளுடன் கலந்தமை, பசும்பாலில் நீர் சேர்த்தமை, சர்க்கரையின் எடையை அதிகரிக்கச் செய்ய அதில் நீர் கலந்தமை போன்ற மோசடி வேலைகளை செய்த பல வர்த்தகர்கள் நமது சமூகத்தில் இருந்தனர், இன்றும் உள்ளனர். அதுமட்டுமன்றி, கொள்கலன்களில் மொத்தமாக சேமித்து வைக்கப்பட்ட தானியங்களை வண்டுகள் மற்றும் பிற பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க அலுமினியம் பொஸ்பேட் எனப்படும் மிகவும் ஆபத்தான ஒருவகை விஷம் பயன்படுத்தப்பட்டது. அந்த இரசாயன பயன்பாடு தடை செய்யப்பட்டதா இல்லையா என்பது புரியாத புதிராகவே உள்ளது. ஆனால், அப்படி தடை செய்தாலும் சுழியோடியவாறு தந்திரமாக அவற்றை சந்தைப் படுத்துவதில் நமது வர்த்தகர்கள் கில்லாடிகள் என்பது நமக்கு நன்றாகத் தெரிந்த விடயமே.

அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் அண்மையில் இலங்கையிலுள்ள இரண்டு தனியார் இறக்குமதியாளர்கள் இரண்டு கொள்கலன்களில் 50,000 கிலோ அரிசியை இறக்குமதி செய்திருந்தனர். அவற்றில் வண்டுகள், கரப்பான் பூச்சிகள் காணப்பட்டமையால் அவை திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே. இது ஒரு சமீபத்திய உதாரணம் மாத்திரமே. வரலாற்றில் இதே போன்று பல கதைகளை காணலாம்.

சில அதிகாரிகள் அச்சமின்றி இத்தகைய மோசடிகளைப் பற்றி வெளிப்படுத்திய போதிலும், அவர்களுக்கு இறுதியில் மரணமே மிச்சமாக கிடைத்தது. ஆக! இத்தகைய மோசடிகள் மிக்க சந்தையானது மிக உயர்ந்த இடத்திலிருந்து காரியங்களை சாதிக்கின்றன. உண்மையை விட மோசடி மற்றும் ஊழலே சந்தையை ஆளுகின்றது. நீதி தேவதையின் வாள் இந்த மோசடியாளர்களின் தலையை கொய்யும் அளவிற்கு இன்னும் நீளமாகவில்லை என்பதே கவலைக்குரியது.



# விலங்குகளினால் பயிர்ச்செய்கைகள் பாதிப்படைவது நாளாந்தம் அதிகரிப்பு

## தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

குரங்குகள், காட்டு யானைகள் மற்றும் மயில்கள் ஆகியவற்றால் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் ரூ. 55.3 பில்லியன் மதிப்புள்ள தேங்காய், நெல், காய்கறிகள், சோளம், வாழைப்பழம் ஆகிய அறுவடைகளை இலங்கை இழந்துள்ளதாக தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் வருடாந்த மொத்த தேங்காய் உற்பத்தியில் 86.7 மில்லியன் தேங்காய்கள் குரங்குகள், அணில்கள் மற்றும் காட்டு யானைகளால் அழிக்கப்படுவதாகவும் அதன் பெறுமதி சுமார் 5.2 பில்லியன் ரூபா எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மொத்த தென்னை பயிர்ச் செய்கை ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரத்து 500 ஏக்கர் பரப்பில் நடைபெறுவதாகவும், அதில் நாற்பத்தைந்து வீதமான பழங்கள் அணில் மற்றும் காட்டு யானைகளால் அழிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களில் 131 மில்லியன் கிலோ நெல் காட்டு யானைகள் மற்றும் மயில்களினால் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பெறுமதி 13.2 பில்லியன் ரூபா எனவும், அவ்வாறே 169 மில்லியன் கிலோ வாழைப்பழங்கள் குரங்குகள் மற்றும் காட்டு யானைகளினால் அழிக்கப்பட்டுள்ளதுடன், இதனால் 22.1 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது எனவும் அனுராத குறிப்பிட்டுளார்.

மேலும், சுமார் 6.8 மில்லியன் கிலோ மக்காச்சோளம் காட்டு யானைகளாலும், குரங்குகளாலும் அழிக்கப்பட்டுள்ளதுடன் இதனால் 10.3 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அத்தோடு, 4.5 பில்லியன் ரூபா பெறுமதியான 59.7 மில்லியன் கிலோ மரக்கறி வகைகள் குரங்குகள் மற்றும் காட்டு யானைகளினால் நாசமாகியுள்ளதாகவும் அனுராத தென்னகோன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விலங்குகளினால் ஊவா மாகாணத்திலேயே அதிகளவில் 45000 ஹெக்டேயர் முழுமையாக சேதமடைந் துள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து வடமேற்கு மாகாணத்தில் 38,500 ஹெக்டேயர், தென் மாகாணத்தில் 35,500 ஹெக்டேயர், மத்திய மாகாணத்தில் 30,000 ஹெக்டேயர், கிழக்கு மாகாணத்தில் 28,750 ஹெக்டேயர், சப்ரகமுவ மாகாணத்தில் 25,250 ஹெக்டேயர், மேல் மாகாணத்தில் 14,000 ஹெக்டேயர், வடக்கு மாகாணத் தில் 16,000 ஹெக்டேயர் பயிர் நிலங்கள் இவ்வாறு விலங்குகளால் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மயில்கள் மற்றும் குரங்குகளின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதாகவும், வனவிலங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் விடயத்தில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காமையினால், விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**குரங்குகள், காட்டு யானைகள் மற்றும் மயில்கள் ஆகியனவே காரணம்**

**ரூ.55.3 பில்லியன் மதிப்புள்ள தேங்காய், நெல், காய்கறிகள், சோளம், வாழைப்பழம் ஆகிய அறுவடைகளை இலங்கை இழந்துள்ளது ..**

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

ஆர். ராஜலிங்கம்

## அத்தியாயம் 8

தீபன் எல்லை மீறுவதைக் கண்டு ஆத்திரமடைந்த பூங்குழலி என்ன செய்கிறோம் என்றுகூட யோசிக்காமல் கையில் தயாராக வைத்திருந்த போத்தலால் அவன் மண்டையில் தாக்கியதையடுத்து அவன் மண்டை பிளந்து இரத்தம் பீறிட்டது.

பூங்குழலி மிகவும் பயந்து "ஐயோ!" என்று அலறினாள்.

அப்பொழுது "அம்மா அம்மா" என்று தன்மீது யாரோ தட்டுவதையறிந்து பூங்குழலி சுய நினைவுக்கு வந்தாள்.

"அம்மா, ஏம்மா அப்படி கத்தினீங்க? உங்களுக்கு என்ன நடந்துச்சு?" மகள் கவிதாதான் அவளை அன்போடு அணைத்தபடி கேட்டாள்.

அப்பொழுதுதான் பூங்குழலிக்கு தான் இதுவரையில் கண்டது கனவு என்று தெரிந்தது.

"ஆ...! எவ்வளவு பயங்கரமான கனவு. ஏன் இப்படி ஒரு கனவு வரவேண்டும்" என்று பலவாறு சிந்தித்தாள்.

மகள் கவிதா மீண்டும் மீண்டும் அவளைக் கேட்கவே பூங்குழலி "ஒன்னும் இல்லம்மா, தூக்கத்தில ஏதோ பயந்துட்டேன்" என்று கூறி சமாளித்தாள்.

"சரிம்மா, பயப்படாதீங்க" என்று கூறி கவிதா அவளை அன்பாகத் தட்டிக்கொடுத்து அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பு பூங்குழலிக்கு மிகவும் இதமாக இருந்தது.

கவிதா, மீண்டும் மீண்டும் "பயப்படாதீங்கம்மா" என்று கூறிக்கொண்டே சிறு குழந்தையை உறங்க வைப்பது போல மெதுவாக தட்டிக் கொடுத்தாள். மகளின் அன்பான அரவணைப்பில் கவலைகளை மறந்து மீண்டும் நிம்மதியான நித்திரைக்குள்ளானாள் பூங்குழலி.

மறுநாள்...,

இரவு கண்ட கனவு பற்றி சிந்திக்கும் போது அவளுக்கு தன் மீதே வெறுப்பு ஏற்படுவது போலிருந்தது. தீபனோ எப்போதும் போலவே கவிதாவுடனும், பூங்குழலியுடனும் சாதாரணமாகவும், கலகலப்பாகவும் பழகினான். அவனைப்பற்றி நான் எவ்வளவு தவறாக நினைத்து விட்டேன். எனக்கு ஏன் அப்படி ஒரு கனவு வரவேண்டும்? என்னுடைய உள்ளம்தான் களங்கமடைந்து விட்டதோ? அதனால்தான் அப்படியொரு கனவு வந்ததோ? என்று பலவாறாகச் சிந்தித்தாள்.

அவள் நினைத்துக்கொண்டாள் "இனி அவனுடன் பழகுவதை குறைத்துக் கொள்ளவேண்டும். அவன் வஞ்சகம் இல்லாமல் ஏதாவது செய்ய நான் அதனை தவறாக நினைத்துவிடக்கூடும். அதனால் இனி அவனுடன் நெருங்கிப் பழகுவதை விட்டுவிட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டாள்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அன்று மாலை..., பூங்குழலி தோட்டத்துப் பக்கம் சென்றபோது அங்கு தீபன் கவிதாவுக்கு பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டாள். அதேவேளை அங்கு ஒரு பெண் நின்றுகொண்டு தீபனுடன் பேசிக்கொண்டு இருப்பதைக் கண்டாள். அவள் யார் என்று கூர்ந்து நோக்கியபோது பக்கத்து வீட்டில் உள்ள பெண் என்று தெரிந்து கொண்டாள். அந்தப் பெண்ணோடு பூங்குழலிக்கு அவ்வளவு நெருங்கிய பழக்கம் இல்லை. இப்பொழுது தீபனுடன் அவள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது.

இவள் ஏன் இங்கு வந்து தீபனுடன் பேசிக் கொண்டிருக்கிறாள் என்று அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது. இந்தப் பழக்கம் தொடர்ந்தால் அவள் அடிக்கடி இங்கு வரவும் தீபன் அவள் வீட்டுக்கு போகவும் செய்வார்கள். அதற்கு இப்பொழுதே முற்றுப்புள்ளி வைத்து விடவேண்டும். இதைத் தொடர விடக்கூடாது என்று நினைத்தாள்.

ஏனோ தெரியவில்லை அந்தப் பெண் இங்கு வந்து தீபனுடன் பேசுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்து அவர்களை நோக்கி போகத் தயாரானவளுக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டது.

இவள் இங்கு வந்ததற்கு நான் ஏன் கோபப்பட வேண்டும்? அவன் யாரோடு எப்படிப் பழகினால் எனக்கென்ன? இதைப்போய் நான் ஏன் பெரிதுபடுத்த வேண்டும்? அப்படியானால் எனக்கு அவள்மீது ஏற்படுவது பொறாமையா? எனக்கு ஏன் அப்படி பொறாமை ஏற்படவேண்டும்? அவர்கள் எக்கேடாவது கெட்டுப்போகட்டும் என்று நினைத்தவள் திரும்பி வீட்டுக்கு போக முனைகையில் எதிரில் விமலா தேநீர் தட்டுடன் வருவதைக் கண்டாள். தீபனுக்குத்தான் அவள் தேனீர் கொண்டு வருகிறாள் என்று பூங்குழலி புரிந்து கொண்டாள்.

விமலா அருகில் வந்துவிடவும் பூங்குழலி அவளிடம் "என்ன விமலா, தீபனுக்கு தேத்தண்ணி கொண்டு போகிறாயா?" என்று கேட்டாள்

"ஆமாம் அம்மா, நீங்கள் கொண்டு போய் கொடுக்கப்போகிறீர்களா?"

"என்ன விமலா அன்று கொண்டு போய் கொடுத்தேன் என்பதற்காக அந்த வேலையை என்னிடமே கொடுத்துவிடப் பார்க்கிறாயா?"


"இல்லை அம்மா, சிலவேளை நீங்கள் கொண்டு போகக் கூடும் என்று நினைத்து கேட்டு விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள் நானே கொண்டு போகிறேன்" என்று கூறி அவள் போகத் தயாராகும் போது பூங்குழலி, "சரி சரி நானே கொண்டு போகிறேன். தா" என்று கூறி தேநீர் தட்டை வாங்கிக் கொண்டாள்.

இந்த அம்மாவை புரிந்து கொள்ளவே முடியவில்லை என்று எண்ணியபடி விமலா திரும்பி வீட்டுக்குச் சென்றாள்.

பூங்குழலி தீபனை நோக்கிச் செல்வதற்கு முனைகையில் அவனுடன் பேசிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணும் பூங்குழலியைக் கண்டுவிட்டு அவசர அவசரமாக வெளியேறுவதற்காக வாயிலை நோக்கிச் சென்றாள்.

இவள் ஏன் என்னைக் கண்டு அவசரமாக வெளியேறவேண்டும். இதில் ஏதோ சூது இருக்கிறது. தீபனிடமே கேட்டுவிடவேண்டியதுதான் என்று நினைத்தபடி அவனை நோக்கிச் சென்றாள் பூங்குழலி.

> "இனி அவனுடன் பழகுவதை குறைத்துக் கொள்ளவேண்டும். அவன் வஞ்சகம் இல்லாமல் ஏதாவது செய்ய நான் அதனை தவறாக நினைத்துவிடக்கூடும். என அவள் நினைத்துக்கொண்டாள்



(தொடரும்....)

# குறுக்கெழுத்துப் போட்டி-9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 | ■ | ■ |
| | ■ | | ■ | 5 | | 6 | ■ |
| | ■ | | ■ | | ■ | 7 | 8 |
| | ■ | 9 | 10 | | 11 | ■ | |
| | ■ | 12 | | | | ■ | ■ |
| ■ | 13 | ■ | | ■ 14 | 14 | | 15 |
| 16 | | | | ■ | ■ | ■ | |
| 17 | | ■ | ■ | 18 | | | |

### இடமிருந்து வலம்

1. ஆசானுக்கு சீடன் வழங்கும் காணிக்கை.
5. அகன்று வளரும் மரம் ஒன்று. குழம்பி.
7. மரக்கலம் என்றும் சொல்வர்.
9. அறுவைப்பேர்வழிகளையும் இந்த கருவிக்கு ஒப்பிடுவர்.
12. கொடி நாட்டவும் பயன்படும். குழம்பி.
14. தேயிலைச் செய்கைக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற செய்கை இதுதானாம்.
16. உயர்ந்தோர், அறிஞர் என்றும் கூறலாம்.
17. மனதை பண்படுத்தும் பல்வேறு ஆளுமைகளும் இதில் உண்டு. திரும்பி.
18. இதிலும் ஆசை வரும் என்கிறது ஒரு சினிமா பாடல்.

### மேலிருந்து கீழ்

1. மருத்துவ மூலிகை ஒன்று.
2. இது தோப்பாகாது என்பர்.
3. வீர விளையாட்டு ஒன்று.
4. உத்தரவு என்றும் சொல்லலாம். தலைகீழ்.
6. குற்றம் என்றும் பொருள்படும். தலைகீழ்.
8. பாரதியார் இறைவியிடம் கேட்டவற்றில் ஒன்று. தலைகீழ்.
10. கவிச்சக்கரவர்த்தி என்பர் இவரை. குழம்பி.
11. வெறுப்பு தலைகீழாகவும் மாறிவிடும்.
13. சில விலங்குகளின் இளசுகளை குறிக்கும். தலைகீழ்.
15. பேதலித்த மனதையும் இப்படி கூறுவர்.
16. பாதை என்றும் சொல்லலாம்.

உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09

## சென்ற வாரத்திற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 டு | க் | 3 க | ண் | ■ | 4 தொ | 5 னி |
| 6 சை | ஆ | ■ | டு | ■ | 7 லி | ல் | ப |
| க் | ■ | ■ | க் | ■ | 8 வ | லை | ■ |
| 9 க | 10 ரு | 11 க் | க | ல் | ■ | ■ | 12 பா |
| 13 ரு | க | ட | ன் | ■ | 14 அ | ■ | ம் |
| வி | ■ | கு | ■ | 15 சி | க | ப் | பு |
| ■ | 16 க | வ | 17 லை | ■ | யை | ■ | ■ |
| 18 கோ | டை | ■ | 19 மா | ட | ப் | பு | றா |

### பாராட்டுப் பெறுவோர்

1. எம்.சபீனா பேகம், காத்தான்குடி
2. கே.குமார், மன்னார்.
3. சி.காயத்ரிதேவி, ஹட்டன்.
4. கே.சிரஞ்சீவி, வத்தளை.
5. எம்.ரி. புர்கான், கல்முனை.
6. பி.கஜமுகன், மாத்தளை.

# "எதுவும் நிரந்தரமில்லை"

மனமே

சுபா

"காலம் என்பது கறங்கு போல் சுழன்று மேலது கீழாய் கீழது மேலாய், மாறிடும் என்பதை மறந்ததனை போலும்"

இது, பி.சுந்தரம்பிள்ளை எழுதிய, நாடக இலக்கியங்களில் முதன்மையானதாக போற்றப்படும் மனோண்மணீயத்தில் வரும் பாடல்.

இதன் அர்த்தம் என்ன தெரியுமா? கறங்கு என்றால் சுழற்சி. பனை மரத்தின் ஓலையைச் சீவி வெட்டி, காற்றாடிபோல செய்து காற்று வரும் திசையை நோக்கி ஓடினால் சுழலும். இது காற்று வீசும் திசையையும், மற்ற திசைகளையும் அறிய உதவும். இதுவே கறங்கு எனப்படுகின்றது.

ஆகவே, காலம் என்பது காற்றாடி போன்றது. இன்று மேல் நிலையில் இருப்பவர்கள் நாளை கீழ் நிலைக்கு வரலாம். அதேபோல் இன்று கீழே இருப்பவர்கள் நாளை மேல்நிலைக்கு வரலாம்.

ஆக.. இந்த உலகில் எதுவுமே நிரந்தரம் இல்லை. இன்று இருப்பவர்கள் நாளை இல்லை. இப்போது நடப்பது மட்டுமே நிஜம். அடுத்த விநாடி நமக்கு என்ன நடக்கும் என்று நமக்கே தெரியாது. எதிர்காலம் ஒரு புதிராகவே உள்ளது.

பல நேரங்களில் நாம் உடைந்து போகக் கூடும். பொய் வதந்திகள், வீணான பழிகள், செய்யாத தவறுக்கு தண்டனை என காலம் நம்மை திக்குமுக்காடச் செய்யலாம். ஆனால், இதுவும் கடந்து போகும். மாற்றங்கள் நம் வாழ்வில் எப்போதும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.



சூழ்நிலை கைதிகளாக நம்மில் பலர் தண்டனைகளை அனுபவிக்கலாம். நம்மில் தவறே இல்லாத நிலையிலும், அதை தெளிவுபடுத்த கூட சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கலாம். வீண் பழியை ஏற்கவும் முடியாமல், உண்மைத் தன்மையை தெளிவுபடுத்தவும் முடியாமல் இரண்டுகெட்டான் நிலையில் திண்டாடலாம்.


ஆனால், ஒன்றை மட்டும் மனதிற் கொள்ளுங்கள். இது எதுவும் நிரந்தரமில்லை. இன்றைய நிலை நிச்சயம் மாறும். அந்த மாற்றங்கள் நிச்சயம் நமக்கு நல்லதாகவே இருக்கும். இந்த இக்கட்டான துன்ப நிலைக்கு காலம் பதில் சொல்லும்.

சில கஷ்டங்களை சந்திக்கும் போது, தாங்க முடியாத வலியால் துன்பப்படுகிறோம். ஆனால், சிறிது காலம் கழித்து நமக்கு கிடைக்கும் மிகப்பெரிய பலாபலன் அந்த கஷ்டமான அனுபவத்தின் அடிப்படையிலேயே கிடைத்திருக்கும். எனவே, நாம் சிக்கலான தருணங்களில் இது நம்வெற்றிக்கு தயார்படுத்துகிறது இதுவும் கடந்து போகும் என நம்ப வேண்டும்.

முக்கியமாக, யாராவது நமக்கு தீமை செய்கின்ற சந்தர்ப்பத்தில், நாம் ஒருபோதும் கலங்கி நிற்கக் கூடாது. ஒருவர் மற்றொருவருக்குத் தீமை செய்துவிட்டு தப்பித்துவிட இயலாது. போட்ட விதை முளைக்கும், வினை விதைத்தால் வினையைக் காலம் வருகையில் அறுவடை செய்தாக வேண்டும். உண்மை எப்போதும் முரண்பாடுகளை கொண்டிருக்கும், பொய் எப்பொழுதும் நேர்த்தியாக இருக்கும். ஆகவே, அதற்குக் காலம் நிச்சயம் பதில் சொல்லும்.

முக்கியமாக நம் எண்ணங்கள் நன்றாக இருக்கும் பட்சத்தில் எல்லாம் நல்லதாகவே நடக்கும். வாழ்வில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் அவர்களுடைய எண்ணத்தைப் பொறுத்தே அமையும்.

ஆகவே, நம் எண்ணங்களை நல்லதாக அமைத்துக் கொள்ளும் பட்சத்தில் வாழ்க்கை நன்றாக இருக்கும். இதுவும் கடந்து போகும்...1




# எண்ணமே எல்லாம்

ஹொறொவ்பொத்தான
அகமட் இம்தியாஸ்

> “என்ன செய்யணும் சொல் உன்ர புருசன முடித்துக்கட்ட என்னால ஏலுமான உதவிய உனக்காக நான் செய்றேன் சுமதி. நான் என்னசெய்யணும் சொல்?”

திருமண வாழ்க்கை முற்றாக அலுத்துப்போன யுவதி சுமதி. அவள் செய்வதறியாது தன் கணவனை கொலைசெய்து விட முடிவெடுத்தாள்.

ஒருநாள் காலைப் பொழுதினிலேயே சுமதி தன் தாயைக் காண எண்ணியவளாய் தாய்வீட்டுக்குக் கிளம்பிச் சென்றாள்.

தன் தாயிடம்

“அம்மா எனக்கெண்டால் என்ட புருசன் இப்ப அலுத்தே போயிட்டுதம்மா,

போதுமம்மா என்னால இதுக்குப்பிறகும் அவரின்ட பைத்தியக்கார வேலைகள பொறுத்துக்கொண்டிருக்கேலாதம்மா.

அவர கொலைசெய்தே போடலாம் எண்டுகூட தோணுதம்மா.

ஆனாலும் சட்டத்துக்கு முன்னால நான் கொலைகாரியாக நிக்கவேண்டிவருமெங்கிறத நினைக்கையிலதான் பயமாக்கிடக்குதம்மா,

அவர நான் கொலை செய்யணும் வேற வழியில்ல, கன நாளாக நான் இத யோசிச்சி எடுத்த முடிவுதானம்மா இது.

அம்மா நீங்க எனக்கு இந்த விசயத்துல உதவி செய்வீங்கதானே?”

தாய் அவளுக்கு பதிலளிக்கலானாள்.

“என்ன செய்யணும் சொல் உன்ர புருசன முடித்துக்கட்ட என்னால ஏலுமான உதவிய உனக்காக நான் செய்றேன் சுமதி. நான் என்னசெய்யணும் சொல்?”

தொடர்ந்து தாய், “சரி முதல்ல நீ உன்ர புருசன்கூட ஒற்றுமையாக இருக்க வேணும். அப்பதான் உன் புருசன் செத்தப்புறம் உன்ரமேல ஒருத்தருக்கும் சந்தேகம் வராமலிருக்கும், உன்ர புருசனின்ர மனசுல உன்னப்பத்தி நல்லெண்ணமும் கரிசனையும் வாற மாதிரி உன்ர தோற்றத்த அழகாக வெச்சிக்கப்பார்.

முதல் இருந்தத விட நீ உன்ர புருசனோட கூடுதலான கவனத்தோட அன்போட அவர கவனி. உன்ர புருசனுக்கு உன்ர மேல ஆச வாற மாதிரி நீ நடந்துக்கணும்.முதல்ல இருந்ததைவிட பொறுமையாக இரு அவரோட இரக்கமாக இரு பொறாமப்படுறத குறைச்சிக்கோ, உன்ர புருசன் சொல்றதுகள கேட்டு நட , உன்ர புருசன நீ மதிக்கவும் அவரோட கண்ணியமாக நடந்துக்கவும் வேணும். உன்ர புருசனுக்காகவும் காசுல செலவுசெய். அவர்கூட விவாதம் செய்யாதே அவர் சொல்றதக்கேட்டுநட. அன்பாக இரு. இப்படி முப்பது நாள் நடந்துக்க அதுக்கப்புறம் உன்ர புருசன உன்னால லேசாகவே கொல செய்திடலாம். உன்ரமேல யாருக்கும் சந்தேகம் வராது” என்றாள்.

கேட்டுக்கொண்டிருந்த சுமதி திருதிருவென முழித்தாள்.

அதைக் கண்ட அவளது தாய், “உனக்கு இந்த சின்ன விசயத்தையாவது செய்ய ஏலாதா?” எனக் கேட்டாள்.

“எனக்கு ஏலும் அம்மா. நான் நீங்க சொன்னபடியே செய்றேன்” என்றாள் சுமதி.

தாய் “சரி” எனச் சொன்னபடியே சுமதியின் கையிலே எதையோ வைத்தவாறு, “ஒவ்வொரு வேளை சாப்பாட்டுலயும் உன்ர புருசன்ர சாப்பாட்டுக்கு இந்த தூளில் கொஞ்சம் சேர்த்துவிடு. அதனால உன் புருசன் கொஞ்சங் கொஞ்சமாக சாகத்தொடங்குவான்” என்றாள்.

மிக்க மகிழ்ச்சியுடன் தாயிடமிருந்து தன் வீடு திரும்பிய சுமதி அப்பொழுதிலிருந்தே தாய் சொன்ன பிரகாரம் நடந்துகொள்ளத் தொடங்கினாள்.

முப்பது நாட்களென்ன, இருபது நாட்கள் தாண்டுமுன்னரே சுமதி மீண்டும் தாயைக் காண வந்தாள்.

“அம்மா என்ர புருசன கொல்வதற்கு நான் எடுத்த முடிவு ரொம்பவே தப்பம்மா. என்ர புருசன் என்னோட இப்ப உசிருக்குசிரா இருக்கிறாரம்மா. அவரைக்கொல்லும் எந்தத் தேவையுமில்லையம்மா. என்ர புருசனோட நான் இப்ப ரொம்ப பாசத்தோட இருக்கிறன். அவரும் முழுசாகவே மாறிட்டார். என்னோட இப்ப ரொம்ப அன்பாக இருக்கிறாரம்மா.

நான்நினைச்சிருந்தத விட எத்தனையோ மடங்கு நல்ல கணவரம்மா அவர். என்னால அவர சாக விடேலாதம்மா. அவரின்ர உடம்புக்கு இவ்வளவு நாளாக நான் கொடுத்த அந்த விஷத்த எப்படியம்மா திரும்ப எடுக்கலாம்? ஐயோ அம்மா எனக்கு உதவுங்கோ அம்மா....”

மிகுந்த கவலையுடன் தன் தாயிடம் அவள் கைகூப்பியவாறு கெஞ்சினாள்.

“கவலைப்படாதே மகள். அன்று நான் உனக்குக் கொடுத்தது வெறும் மஞ்சற்பொடிதான் மகளே. அதனால அவரின்ர உணவு ருசி கூடியிருக்கும் தவிர உயிரைப் பறிக்கும் எதையாவது தருவேனா நான்?

உண்மையில் நீ உன்ர புருசன்மேல வச்சிருந்த உன்ர உதாசீனக்குணம், அவருக்கு தந்த தொல்லைகள், தொந்தரவுகள்தான் அவருக்கு நீ கொடுத்துக் கொண்டிருந்த விஷம். அதனாலதான் நீ அவர மதிச்சி பணிஞ்சி, அன்போட நடக்கத் தொடங்கியதும் அவர் ஒரு நல்ல கணவன் என்கிறத உன்னால காண முடிஞ்சது” மகளைத் தேற்றியவாறு தாய் சொன்னாள்.

பிறகென்ன அந்தக்குடும்பமே சொர்க்கமாக மாறியது. ■

# 2025க்கான பாபா வங்காவின் கணிப்புகள்




பல்கேரிய நாட்டைச் சேர்ந்த தீர்க்கதரிசியான பாபா வங்காவின் கணிப்புக்களுக்கு, மக்கள் மத்தியில் எப்போதும் முக்கியத்துவம் உண்டு. யார் இந்த பாபா வங்கா..? பால்கன் ‘நோஸ்ட்ராடாமஸ்’ (Nostradamus) என்று அழைக்கப்படும் பாபா வங்கா, ஒரு மூலிகை மருத்துவர் ஆவார்.

1911ஆம் ஆண்டில் கிழக்கு ஐரோப்பாவில் பிறந்த இந்த பெண் 1996ஆம் ஆண்டில் தனது 84ஆவது வயதில் இறந்து போனார். அவர் இறக்கும் போது அவருக்கு இலட்சக்கணக்கில் சீடர்கள் இருந்தனர். கொரோனா தொற்று நோய், இளவரசி டயானா மரணம், தாய்லாந்தில் ஏற்பட்ட 2004 சுனாமி, ஜப்பான் சுனாமி, அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா பதவி ஏற்றது, சோவியத் யூனியன் உடைந்தது என்று பல விடயங்களை இவர் முன்கூட்டியே கணித்துள்ளதாக அவரது சீடர்கள் தெரிவித்துள்ளனர்.

இவருக்கு 12-13 வயது இருக்கும் போது பல்கேரியாவில் ஏற்பட்ட பெரும் புயலில் கண்களில் மின்னல் தாக்கி பார்வை பறிபோனது. அதேவேளை, புயலில் சிக்கிய போது அவருக்கு ஒரு அமானுஷ்ய சக்தி வந்ததாகவும் அதன் பிறகு அவர் மக்களைப் பற்றியும், எதிர்கால உலக நடப்புகளைப் பற்றியும் சரியாகக் கணித்துக் கூறினார் என்றும் அவரது சீடர்கள் கூறுகிறார்கள். அந்தக் கணித்தல்கள் பல அவர் மறைவுக்கு பிறகு வெளியானவையாகும். இவர் இன்னும் 5000 ஆண்டுகளுக்கான உலக நிகழ்வுகளை கணித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

அந்தவகையில், 2025ஆம் ஆண்டிற்கான பாபா வாங்காவின் கணிப்புகள் சற்று அச்சுறுத்தலாகவே உள்ளன. ஏனென்றால், இந்த ஆண்டு உலக அழிவு தொடங்கும் என்று பாபா வங்கா கணித்துள்ளார். 5079ஆம் ஆண்டு உலகம் அழியும் என்றும், அப்போது பூமியில் மனிதர்கள் இருக்கமாட்டார்கள் என்றும் அவர் கணித்துள்ளார். மேலும், 2025ஆம் ஆண்டில் பெரிய மோதல்கள், சோகமான சம்பவங்கள் நடைபெறும் என்று பாபா வங்கா கணித்துள்ளார். அது மனிதகுலத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும், ஐரோப்பாவில் ஒரு பேரழிவுக்கான மோதல் ஏற்படும் என்றும் கணித்துள்ளார். இந்த மோதல் ஐரோப்பிய கண்டத்திற்கு ஈடுசெய்ய முடியாத சேதத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கணித்துள்ளார்

மேலும், பாபா வங்காவின் கூற்றுப்படி, 2025 ஆம் ஆண்டு மனித குலத்திற்கும் தொழில்நுட்பத்திற்கும் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமையும் என்று கூறப்படுகின்றது. குறிப்பாக, 2025இல் விஞ்ஞானிகள் மனித மூளையை நேரடியாக இணைத்து, பேச்சு தொடர்பு கொள்ளும் தொழில்நுட்பத்தை உருவாக்குவார்கள். இது மனித தொடர்புகளை புதிய உயரத்துக்கு எடுத்துச் செல்லும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்தது, ஒரு முக்கியமான விளையாட்டு நிகழ்வின் போது, மனிதர்கள் வேற்று கிரகவாசிகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு உள்ளது. இந்த நிகழ்வு உலகின் வரலாற்றில் ஒரு மிக முக்கியமான நிகழ்வாக அமையும் என்றும் கணித்துள்ளாராம் பாபா வங்கா. அத்துடன், விஞ்ஞானிகள் ஆய்வகங்களில் மனித உறுப்புகளை உருவாக்கும் தொழில்நுட்பத்தை கைப்பற்றுவார்கள் என்றும், இது உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு புதிய வழிகளைத் திறக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது, உலகை மாற்றும் ஒரு புதிய வகை ஆற்றல் கண்டுபிடிக்கப்படும். இந்த ஆற்றல் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுமாம். மேலும், பாபா வங்கா தனது கணிப்புகளில் இயற்கை பேரிடர்கள் மற்றும் உலக அரசியல் குறித்தும் குறிப்பிட்டுள்ளார். அதாவது, 2025இல் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் வெப்பநிலை 50 டிகிரி செல்சியஸைத் தாண்டுமாம். இதனால் வெட்டுக்கிளிகள் தாக்குதல், பஞ்சம் போன்ற பேரிடர்கள் ஏற்படுமாம்.

> உயிரியல் ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் ஆபத்து உள்ளதாம்...!

அதுபோல், ஒரு பெரிய நாடு உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தும் என்றும், ஐரோப்பாவில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரிக்கும், ஒரு ரஷ்ய தலைவர் கொல்லப்படுவார். இது உலக அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கணித்துள்ளாராம்.




## 2025க்கு பிறகு என்ன நடக்கும்?

2025ஆம் ஆண்டில், மோதல் காரணமாக மக்கள் தொகை கணிசமாகக் குறையுமாம். அதன் பிறகு, 2028இல் புதிய வளங்களைத் தேடி மனிதர்கள் வெள்ளி கிரகத்தை (Venus) அடைவார்கள் என்று பாபா வங்கா கணித்துள்ளார். பின்னர் 2033இல் மிகப்பெரிய பனிக்கட்டிகள் உருகும் என்றும், இதனால் கடல் மட்டம் அதிகரிக்கும் என்றும் கணித்துள்ளார். இதனால் பெரிய அலைகள் தாக்கி பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் என்றும் அவர் கணித்துள்ளார் இந்நிலையில் 2024ஆம் ஆண்டு கடுமையான வானிலை மாற்றங்கள் மற்றும் பேரழிவு ஏற்படலாம் என பாபா வங்கா கணித்திருந்தார்.

அதுபோல், கடந்த வருடம், இயற்கை சீற்றத்தால், பல நாடுகள் அழிவுகளை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், சமீபத்திய ஆய்வுகளின் முடிவின்படி, கடந்த வருடத்தில் வெப்ப அலைகளின் அதிகபட்ச வெப்பநிலை 40 ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்யப்பட்டதை விட அதிகரித்திருந்ததும் கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், 2024இல் கடும் வெப்ப அலைகள் இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், 1996ஆம் ஆண்டு அவர் இறக்கும்போது இணைய சேவை ஆரம்ப நிலையில் இருந்தது. ஆனால் 2024ஆம் ஆண்டு சைபர் தாக்குதல்கள் பெருமளவு நடைபெறும் என்பதை அவர் கணித்திருந்தார். இதுவும் அவரது குறிப்பிடத்தக்க கணிப்புகளில் ஒன்றாக இருந்தது. குறிப்பாக, கடந்த 12 மாதங்களில் அப்பிள், நெட்டா மற்றும் எக்ஸ் போன்ற முக்கிய நிறுவனங்கள் இணைய பாதுகாப்பு மீறல் பிரச்சினைகளை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ■

# சிடுமூஞ்சி கணவன்



சில சிடுமூஞ்சி கணவன்மார் ஏதாவது ஒரு விஷயத்தை வைத்து மனைவிமாரிடம் சண்டை பிடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அப்படிப்பட்ட ஒரு சிடுமூஞ்சி கணவனைப்பற்றிய கதைதான் இது.

அந்த கணவன் ஏதாவது ஒரு விஷ யத்தை வைத்து மனைவியுடன் சண்டை பிடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அநேகமாக சாப்பாட்டு நேரத்தில்தான் அவர்களுக்குள் சண்டை ஆரம்பமாகும்.

மனைவி தினமும் நன்றாக உணவு சமைத்து வைப்பாள். சாப்பாட்டில் தினமும் அவனுக்கு முட்டை இருக்க வேண்டும். ஆனால் முட்டையை அவித்து வைத்திருந்தால் “என்ன இது? இதை யாரால் சாப்பிட முடியும்? இன்று பொரித்த முட்டை சாப்பிட வேண்டும் என்று அல்லவா ஆசையோடு வந்தேன். நீ அவித்து வைத்திருக்கிறாயே” என்று கேட்டு சண்டையை ஆரம்பித்து விடுவான்.

அடுத்தநாள் மனைவி முட்டையை பொரித்து வைத்திருந்தால் “என்ன செய்திருக்கிறாய்? நான் நேற்றுதான் பொரித்த முட்டை சாப்பிட வேண்டும் என்று வந்தேன். இன்று அவித்த முட்டை சாப்பிட வேண்டும் என்று அல்லவா ஆசையோடு வந்தேன். நீ பொரித்து வைத்திருக்கிறாயே!” என்று கேட்டு சண்டையை ஆரம்பித்து விடுவான்.

இது தினமும் தொடர்ந்தது. முட்டையை பொரித்து வைத்திருந்தால் ஏன் அவிக்கவில்லை என்றும் அவித்து வைத்திருந்தால் ஏன் பொரிக்கிவில்லை என்றும் கேட்டு சண்டை பிடிப்பது வழக்கமாகப் போய்விட்டது.

இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட என்ன செய்யலாம் என்று சிந்தித்தாள் மனைவி. அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி ஒரு நாள் ஒரு முட்டையை அவித்தும், இன்னொரு முட்டையை பொரித்தும் இரண்டு தட்டுக்களில் வைத்து சாப்பாட்டுடன் கொண்டு போய் வைத்தாள். இன்று அவனால் சண்டை பிடிக்க முடியாது. எது விருப்பமோ அதை சாப்பிட்டுக் கொள்ளட்டும் என்றுதான் அவள் நினைத்தாள். ஆனால் என்ன நடந்து தெரியுமா? இரண்டு முட்டைகளையும் பார்த்ததும் அவனுக்கு எப்போதும் போலவே கோபம்தான் வந்தது. “என்ன செய்திருக் கிறாய்? இதை யாரால் சாப்பிட முடியும்” என்று கோபமாகக் கத்தினான்.

மனைவிக்கு எதுவும் புரியவில்லை.

“ஏன் என்ன நடந்தது?” என்று மென்மையாகக் கேட்டாள்.

கணவன் கோபத்துடன் என்ன சொன்னான் தெரியுமா?

“அவிக்க வேண்டிய முட்டையை பொரித்தும், பொரிக்கவேண்டிய முட்டையை அவித்தும் வைத்திருக்கிறாயே உனக்கு மூளை இருக்கிறதா?” என்று கேட்டு வழமை போலவே அன்றும் சண்டையை ஆரம்பித்து விட்டான்.

**(கேட்டு இரசித்தது)**

## கோடி உயிர்களை காவுகொண்ட

# கொடூரத் தொற்று

புபோனிக் பிளேக்.. ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான மக்களை கொன்று குவித்த கொடூர தொற்று நோயாகவே இது பல நூற்றாண்டுகளாக கருதப்பட்டு வந்தது.

கி.பி 1347ஆம் ஆண்டில் தொடங்கி 1352 வரையிலான ஐந்து ஆண்டுகளில் இந்தக் கொள்ளை நோய்க்குப் பலியான ஐரோப்பிய மக்களின் எண்ணிக்கை மட்டுமே 25 மில்லியனைத் தாண்டியது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் அவ்வப்போது ஐரோப்பிய கண்டத்தைத் தாக்கிய



இந்தத் தொற்று, ஐரோப்பிய கலாசாரத்தில் மிக நீண்ட தாக்கத்தை ஏற்படுத்தியது.

பொதுவாக இதனை சிலர் கொள்ளை நோய் என அழைக்கும் வழக்கமும் உள்ளது. ‘யெர்சினியா பெஸ்டிஸ்’ என்ற பக்டீரியா மூலம் ப்ளேக் தொற்று உருவாகிறது. இந்த வகை பக்டீரியா விலங்குகளில் வாழும். குறிப்பாக அணில் போல காட்சியளிக்கும் ‘ரோடண்ட்’ என்ற வகை விலங்குகளிலும், அதன் உடலில் உள்ள உண்ணிகளிலும் இந்த பக்டீரியா அதிகம் காணப்படும்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் பாதங்கள், விரல்கள் போன்ற உடற் பாகங்கள் கருப்பாக மாறிவிடும் என்பதால், இதனை ‘தி பிளெக் டெத்’ அதாவது கருப்பு மரணம் என வரலாற்றாசிரியர்கள் அழைத்தனர்.

சமீப காலங்களில் இந்த தொற்று பாதிப்பு மிக குறைவாக பதிவாகியிருந்தாலும், வரலாற்றில் இந்த நோய் ஏற்படுத்தியுள்ள சுவடுகள் வலி மிகுந்தவை என்பதால் அது குறித்த அச்சம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

# பல்சுவை



ஆர்.ராஜலிங்கம்

ஆசியாவின் மிகப்பெரிய வைரச் சுரங்கம், இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலத்தின் பன்னா நகரத்தில் அமைந் துள்ளது. இங்கு, வைரங்கள் குறைவான ஆழத்திலேயே கிடைக்கும் என்பதே இந்த சுரங்கத்தின் சிறப்பு. பன்னாவில் உள்ள உள்ளூர்வாசிகள், வைர வேட்டையில் ஈடுபடுவது சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ளது. மாநில அரசே குறிப்பிட்ட அளவில் அம்மக்களுக்கு நிலம் குத்தகைக்கு வழங்குகிறது.

சட்டப்படி மத்தியப்பிரதேச மாநில உரிமத் தொகை 11.5 சதவிகித பணமும், வரியும் போக மிகுதிப் பணம் வைரத்தைக் கண்டெடுத்தவருக்கு வழங்கப்படுகிறது. இதனால் தனி நபர்கள் இங்கு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, வைர வேட்டையில் ஈடுபடுவது வழக்கம். தலைமுறை தலைமுறையாக அப்பகுதி மக்கள் இதைச் செய்து வருகின்றனர்.

பன்னா நகர வரலாற்றிலேயே அதிக மதிப்புமிக்க வைரக்கல் 1961ஆம் ஆண்டு கிடைத்தது. அந்த வைரக்கல் 44.55 கெரட் இருந்தது. அதன்பிறகு 2018ஆம் ஆண்டு வைர வேட்டையில் ஈடுபட்ட கூலித் தொழிலாளி மோதிலால் பிரஜாபதி என்பவருக்கு, இந்திய மதிப்பில், ஒன்றரை கோடி ரூபாய் மதிப்புள்ள 42.9 கெரட் வைரம் கிடைத்தது.



# ஆசியாவின் மிகப்பெரிய வைரச் சுரங்கம்

# உலகின் அதிபயங்கர பாலங்கள்

### லங்காவி ஆகாய பாலம்
– Langkawi Sky Bridge

உலகின் மிக நீண்ட வளைந்த ஆகாய பாலமாக மலேசி யாவின் லங்காவி ஆகாய பாலம் திகழ்கிறது. 125 மீட்டர் துாரத்தில் மச்சின்சாங் மலை (Machinchang Mountain) உச்சியில் அமைந்திருக்கும் இந்தப் பாலத்தைக் கடப்பது மிகவும் ஆபத்தானது என்று கூறப்படுகிறது.





### ரோயல் ஜோர்ஜ் - Royal Gorge Bridge

அமெரிக்காவில் ஆர்கன்சாஸ் (Arkansas River) ஆற்றுக்கு மேல் 955 அடி உயரத்தில் அமைந்திருக்கும் ரோயல் ஜோர்ஜ் (Royal Gorge Bridge, USA) என்னும் பாலமே அமெரிக்காவின் மிக உயரமான பாலம் என்று தெரிவிக்கப்படுகிறது. இப்பாலத்தில் நடக்கும்போது கீழே பார்க்கக் கூடாதென அறிவுறுத்தப்படுகிறது.

### எஷிமா ஒஹாஷி
- Eshima Ohashi

ஜப்பான் எஷிமா ஒஹாஷி Eshima Ohashi இராட்சத ரோலர் கோஸ்டர் பாலம் (Giant roller coaster bridge) பெரிய சரிவை உடையது. ரோலர் கோஸ்டர் என்றால் குறுகிய நேரத்தில் திடீர் திருப்பங்களை சந்தித்தல் எனப்படுகிறது. ஜப்பானின் மிகப் பெரியதும், உலகின் மூன்றாவது பெரியதுமான திடம்மிக்க சட்ட பாலமும் இதுவேயாகும்.





### கெப்பிலானோ தொங்குபாலம் - Capilano Suspension Bridge

கனடாவில் வளைந்து செல்லும் கெப்பிலானோ ஆற்றின் மேல் 70 மீட்டருக்கும் அதிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம், பசுமையான காடுகளின் அற்புதமான காட்சிகளுக்கு மேலாக 137 மீட்டர் வரை நீண்டு செல்கிறது. பாலம் பாதுகாப்பானது எனினும் சட்டதிட்டங்களை முறையாகப் பின்பற்றாத காரணத்தால் சில மரணங்கள் பதிவாகியுள்ளன.

### சிடு நதிபாலம்
- Sidu River Bridge

சீனாவின் கண்ணைக் கவரும் இந்த உலோக மற்றும் மூர்க்கத்தனம் மிக்கதுமெனக் கூறப்படும் இந்தப் பாலம் 43 மில்லியனுக்கும் அதிகமான எடையைத் தாங்கும் சக்திமிக்கது. கட்டுமானத் தொழிலாளர்கள் தொங்கும் கேபிளை பொருத்துவதற்கு ரொக்கட்டை பயன்படுத்த வேண்டி இருந்ததாகக் கூறப்படுகிறது.







### வாழும் பாலங்கள்
- Living Bridges

இந்தியாவின் மெகாலாய மாநிலத்தில் 180 ஆண்டுகளுக்கு முன் காசி (Khasi) என்னும் பழங்குடி இனத்தவர்களால் அமைக்கப்பட்டதென நம்பப்படும் இந்த வாழும் பாலங்கள் (Living Bridges of Meghalaya) உயிருள்ள வேர்களைக் கொண்டு அமைக்கப்பட்டவை இந்த வாழும் பாலங்கள். மெகாலாய அடர்ந்த காடுகளுக்கும் வாழும் பாலங்களுக்கும் பெயர்பெற்ற மாநிலம்.

### காசா தொங்கு பாலம் - Hanging Bridge Ghasa

நேபாளத்தில் 443 அடி உயரமும், 1128 அடி நீளமும்கொண்ட வண்ணமயமான பாலம் காசா தொங்கு பாலம். அழகு மிக்க பாலம். ஆனால் பாதுகாப்பற்றது. பாதசாரிகள் இப்பாலத்தில் நடந்து செல்லும் போதிலும் இது கால்நடைகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத் திற்குக் கடத்துவதற்காகவே உருவாக்கப்பட்டது.

மனதை வென்ற மங்கையர்



# ஏஞ்சல் குயின்டஸ்...

## யாழ். முதல் திருநர் வலையமைப்பின் ஸ்தாபகர்

ஏஞ்சல் குயின்டஸ் (Angel Queentus).. ஆணாதிக்க கட்டமைப்புகளின் அடக்குமுறைகளில் இருந்து விடுபட்டு சுதந்திரமாகவும், சுயமரியாதையுடனும் கௌரவாமாகவும் தமது உரிமைகளை அனுபவித்து வாழக் கூடிய சூழலை உருவாக்குவதை தனது கனவாக கொண்டு தனது செயல்வாதங்களை மேற்கொண்டு வரும் ஒரு இளம் மனித உரிமை செயற்பாட்டளர் ஆவார்.

சமூகத்தால் வரையறுக்கப்பட்ட பெண் அல்லது ஆண் என்ற இருமைக்கு அப்பால் பால், பால்நிலை, பாலியல்பு என்னும் வகைப்படுத்தலின் பல்வகைமை காணப்படுகின்றது. ஏஞ்சல் பிறக்கும் போது சமூகத்தின் வரையறைக்கமைய ஒரு ஆணாக அடையாளப்படுத்தப்பட்டு ஆணாக வளர்க்கப்பட்டு தற்போது ஒரு திருநங்கையாக வாழப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் 1996ஆம் ஆண்டு ஒரு நடுத்தர குடும்பத்தில் சமூக வரையறைக்கமைய அடையாளப்படுத் தப்பட்ட ஆணாகப் பிறந்தவர். காலப் போக்கில் தன்னை ஒரு பெண்ணாக உணரத் தொடங்கியதையடுத்து தான் ஒரு பெண்ணாக, ஒரு திருநங்கையாக வாழ்வதற்காக அன்றாடம் போராடிக் கொண்டிருக்கின்றார்.

“எனது உடல் ஆணுக்குரியது போல் இருந்தாலும், நான் ஒரு பெண்பிள்ளை என்பதாகவே எனக்குள் உணர்ந்தேன். இதனால் எனக்கு எனது உடல் சார்ந்தும் மனம் சார்ந்தும் ஏற்பட்ட முரண்பாடுகளால் அன்றாட வாழ்க்கை போராட்டமாகவே இருந்தது” என்று தெரிவிக்கின்றார் ஏஞ்சல்.

இவ்வாறானதொரு நிலையில் ஏஞ்சலிற்கு கிடைத்த நட்பு வட்டங்கள் அதாவது LGBTQI+ (பால், பால்நிலை, பல்வகை பாலியல்பு குழுக்கள்) சமூகத்தினர் பெண்ணிலைவாதிகள் அதன் மூலம் அவருக்கு கிடைத்த பயிற்சிகள் அனுபவங்கள் அவரது சுயத்தை பல கேள்விகள் கேட்டு பெண் அல்லது ஆண் என்ற இருமைக்கு அப்பால் சிந்திப்பதற்கும் அதன் அடிப்படையில் தனது செயல்வாதங்களை ஆரம்பிப்பதற்கும் அவரது தோழமை வட்டங்கள் பக்கபலமாக இருக்கின்றன.

தற்போது இவர், பாலினம் எனும் வகைப்படுத்தலின் பல்வகைமையின் மீது நம்பிக்கை கொண்டவராக தமது சமூக மாற்றங்களுக்கான பயணத்தில் தனியாகவும் கூட்டாகவும் இணைந்து பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். பாலினம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் விருப்பம், உரிமை, சுதந்திரம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு LGBTQI+ சமூகத்தினர் குறிப்பாக திருநங்கையினர் சமூகத்தில் வன்முறைகளுக்கு உட்படுத் தப்படாது, ஆணாதிக்க கட்டமைப்புகளின் அடக்குமுறைகளில் இருந்து விடுபட்டு சுதந்திரமாகவும், சுயமரியாதையுடனும் கௌரவமாகவும் தமது உரிமைகளை அனுபவிக்க கூடிய சூழலை உருவாக்குவதை தனது கனவாகவும் கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

இதற்கமைய ஏஞ்சல் 2019ஆம் ஆண்டு தொடக்கம் யாழ் திருநர் வலை யமைப்பு என்னும் ஒரு தளத்தினை (Jaffna Transgender Network) தனது நண்பர்களுடன் இணைந்து உருவாக்கினர். தற்போது இதன் பணிப்பாளராக செயற்பட்டுவரும் இவர், யாழ்ப்பாணத்தில் திருநர்கள் சந்தித்து தமது தேவைகளை கதைப்பதற்கு பாதுகாப்பான தளம் இல்லாததனை உணர்ந்து உருவாக்கப்பட்டதே இவ்வலையமைப்பாகும். இவ்வலைய மைப்பினூடாக திருநர்கள் வல்லமைய டைதலுக்காக உரிமைகள், தலைமைத் துவம் சார்ந்த பயிற்சிகள், வாழ்வாதார நடவடிக்கைகள், தேவைகளின் பொருட்டு உளவள ஆலோசனைகள் போன்றன முன்னெடுக்கப்படுகின்றன.


இதனுடாக இவர், இளைஞர்கள் மத்தியில் LGBTQI+ சமூகத்தினர் பற்றிய புரிதல் தோன்ற காரணமாக இருக்கின் றார். இவ்வாறாக தோழமை வட்டங்கள் மேல் நம்பிக்கை கொண்டு அதனை விரிவடையச் செய்வதனுடாக சமூகத்தில் LGBTQI+ சமூகத்தினர் பற்றிய சிந்தனை தெளிவுகளும் புரிதல்களும் ஏற்படுத்தும் முகமாக தனது சமூக நீதிக்கான பயணத்தை தொடர்கின்றார் மனதை வென்ற மங்கையருள் ஒருவரான ஏஞ்சல் குயின்டஸ்.




# கூந்தல் ஆரோக்கியத்துக்கு

## இதைக் கடைபிடியுங்கள்

- தலைமுடியை சுத்தம் செய்வதென்பது உச்சந்தலையை சுத்தமாக வைப்பதை உணர்த்தும். உச்சந்தலையில் எண்ணெய், அழுக்கு, இறந்த சரும செல்கள் தேங்கியிருக் கும் போது அவை கூந்தல் ஆரோக்கியத்தை சேதப்படுத்தும். இதைத் தடுக்க வாரம் இரண்டு முறை உச்சந்தலையில் எண்ணெய் வைத்து மசாஜ் செய்து குளிக்கலாம். குறைந்தது ஒரு முறையேனும் தலைகுளியல் அவசியம். இதன் மூலம் உச்சந்தலை சுத்தமாகலாம்.





- கூந்தலை எப்போதும் சிக்கில்லாமல் வைத்திருப்பது அவசியம். கூந்தல் சிக்காக இருந்தால் அவை உடையக்கூடும். பிளவு முடி உருவகலாம். சீவும் போது முடி உதிர்தல் அதிகரிக்கலாம். ஆகவே, வெளியில் சென்று வந்தாலே தலைமயிர் சிக்குடன் இருக்கும். காலை எழுந்தவுடன் தலைமுடியை சீவி விடுவது, வெளியில் சென்று வந்தவுடன் சீவுவது இரவு படுக்கைக்கு செல்லும் முன்பு சிக்கில்லாமல் சீவி பின்னலிடுவது போன்றவை தலைமுடி பராமரிப்பில் மிக மிக முக்கியமானவை.

- கூந்தல் சுத்தம் செய்ய ஷெம்போ மட்டும் போதும் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் ஷெம்போ போட்ட பிறகு தலைமுடி கண்டிஷனிங் செய்வது கூந்தல் சேதத்தை தவிர்க்கும். மேலும் கூந்தல் இழைகளுக்கு மென்மையையும், ஈரப்பதத்தையும் அளிக்கிறது.

- தலைக்குளியலுக்கு பிறகு தலைமயிரை இயற்கையாக உலரவிடுங்கள். தலைக்குளிய லில் முடி வறட்சி ஆகலாம். எண்ணெய் சுரப்பு முற்றிலும் இழந்திருக்கலாம். இதனால், தலைமுடி வறட்சியை தவிர்க்க தலைமயிர் உலர்ந்த பிறகு மொய்ஸரைசர் பயன்படுத்துவது அவசியம். இது காற்றில் முடி வறண்டு போகாமல் ஈரப்பதத்தை தக்கவைக்க செய்கிறது முடியை மென்மையாகவும் வலுவாகவும் ஆரோக்கியமாகவும் மாற்றுகிறது.

- கூந்தல் சேதத்தை அதிகரிக்கும் வகையில் அடிக்கடி சிகையலங்காரங்கள் செய்வதைத் தவிர்க்கவும். வெப்பம் கூந்தலின் ஈரப்பதத்தை நீக்கி கூந்தலின் மேற்புறத்தை உயர்த்தி விரிசலை உண்டு செய்கிறது. இதனால் கூந்தல் வெடிப்புக்கு ஆளாகலாம். இயன்றவரை ஒவ்வொரு சிகையலங்காரங்கள் செய்வதற்கும் இடைவெளிவிடுங்கள்.




# நகங்கள் நீளமாகவும்

## பளப்பாகவும் வளரவேண்டுமா?


- நகங்களின் நுனிகளில்தான் நோய்த்தொற்று அதிகம் ஏற்படும். அதனால், நீளமான நகங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை அழுக்கில்லாமல் சுத்தமாக பராமரிக்க வேண்டும். கூடவே, 15 நாட்க ளுக்கு ஒரு தடவை நகங்களை மேலோட்டமாக வெட்ட வேண்டும். இதுதான் முறையான நகப் பராமரிப்பு.

- விரல்களின் தசையைத் தாண்டி மிக நீளமாக நகம் வளர்க்கும்போது, நீட்டிக் கொண்டிருக்கும் நகங்களில் அவ்வளவாக வலிமை இருக்காது. தவறுதலாக எதன் மீதாவது இடித்துக் கொண்டாலும் இந்த நகம் உடைந்து விடும். அப்படி உடையும்போது. தசையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் நகப்பகுதியும் சேர்ந்தே உடையும். ஒரு விரலில் மட்டும், பாதி நகம் உடைந்து போனால், விரல் அழகே கெட்டுப் போய்விடும். அதனால், நகங்களை விரலுக்குத் தகுந்தபடி போதுமான அளவுக்கு மட்டும் வளருங்கள்.

- அழகு நிலையங்களில் ‘மெனிக்யூர்’ என்கிற பெயரில் வீரியம் அதிகமான சவர்க்காரம் மற்றும் ஷெம்போவில் நகங்களை ஊற வைத்தால், சில நாட்கள் வரைக்கும் கைகள் பளீரென தெரியத்தான் செய்யும். ஆனால், தொடர்ந்து இப்படி சருமத்தின் தோலில் இருக்கிற எண்ணெய்ப் பசையெல்லாம் போய் சுருக்கம் விழ ஆரம்பிக்கும். இவர்கள், வீட்டிலேயே வெதுவெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி கல் உப்பு, ஒரு தேக்கரண்டி விளக்கெண்ணேய், 50 சொட்டுகள் ‘ரோஜா எண்ணெய்’, தேவையென்றால் கால் தேக்கரண்டி எலுமிச்சைச்சாறு ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து, அதில் கை விரல்களை ஊற வைத்தால், நகம் சுத்தமாவதுடன் பலமும் பெறும். கைகளின் சருமத்துக்கும் எந்தத் தீங்கும் வராது. இதை 15 நாட்களுக்கு ஒருமுறை செய்தால் போதும்.

- பெண்களில் பலர், அடர்ந்த நிற நகப்பூச்சுகளைத் தான் போட விரும்புகிறார்கள். கறுப்பு, நீலம், மெருன் போன்ற அடர் நிற நகப்பூச்சுகளில் இரசாயன சேர்வை அதிகம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

- இள நிறங்களில் இரசாயனம் குறைவு. சில நேரங்களில் அடர் நிற நகப்பூச்சை நகத்தில் இருந்து நீக்கிய பிறகு, நகத்தின் நிறமே மாறியிருக்கும். இதற்குக் காரணம், அது தரம் குறைந்தது என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். அடர்நிற நெயில் பொலிஷ்களுக்கு நகத்தின் நிறத்தை மாற்றுகிற இயல்பு உண்டு. இதற்கு, நகத்தின் மேல், நகக்கலரிலான ‘நெயில் பொலிஷை’ போட்ட பின்னர், அதன் மேலே நீங்கள் விரும்புகிற ‘நெயில் பொலிஷை’ பூசலாம்.






| | |
|---|---|
| கடலை பருப்பு | - 1 கோப்பை |
| வாழைப்பூ | |
| வரமிளகாய் | - 3 |
| சோம்பு, சீரகம் | - சிறிதளவு |
| இஞ்சி, பூண்டு, உப்பு | - தேவையானளவு |
| கருவேப்பிலை | |
| பெரிய வெங்காயம் | - 2 |
| கொத்தமல்லி இலை | - சிறிதளவு |




**செய்முறை**

1. கடலை பருப்பை, 1.30 மணி நேரம் உறவைக்கவும்.
2. பின்னர், கடலை பருப்பு, வரமிளகாய், சோம்பு, சீரகம், இஞ்சி, பூண்டு, உப்பு, சேர்த்து அரைத்துக்கொள்ளவும்.
3. இறுதியாக வாழைப்பூ சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.
4. அரைத்த மாவில் கருவேப்பிலை, வெங்காயம், கொத்தமல்லி இலை சேர்த்து, வடையாக தட்டி எண்ணையில் பொரித்தெடுக்கவும். சுவைமிகுந்த வாழைப்பூ வடை தயார்.

# அழகுடனான ஆரோக்கியத்துக்கு...!

சரும அழகுக்கு முதல் எதிரி மலச்சிக்கல். தினமும் இரவு உணவுக்குப் பிறகு கண்டிப்பாக ஒரு துண்டு பப்பாளிப்பழம் சாப்பிட்டு வர, உடம்பின் உள்ளே கழிவு கள் சேராது. உள்ளே சுத்தமாக இருந்தால், அது மெல்ல மெல்ல வெளிப்பகுதியிலும் எதிரொளிக்க ஆரம்பிக்கும்.

நன்றாக தண்ணீர் அருந்த வேண்டும். தோடம்பழம், மாதுளை என்று தினமும் ஒரு பழம் கட்டாயம சாப்பிடவேண்டும். வீட்டில் பழமே இல்லையென்றால் தேசிக்காய் சாறுடன், தேன் கலந்து குடிக்கலாம். ஒரு மாதத்திலேயே சரும் பளபளப்பாக மாறுவது தெரியும்.

கடலை மா, அரிசி மா, பாசிப்பயறு மா மூன்றையும் சம அளவு எடுத்து, வெறும் தண்ணீரில் கலந்து பேக் போல செய்து, முகம், கழுத்து என்று எங்கெல்லாம் சருமம் தளர்ந்துபோய் இருக்கிறதோ அங்கெல்லாம் தேய்த்து 20 நிமிடம் ஊற வைத்து குளித்துவர, சருமம் இறுக்கமாக ஆரம்பிக்கும். அரிசி மாவும் பாசிப்பயறு மாவும் கிடைக்கவில்லை என்றாலும் கடலை மாவிலாவது ‘பேக்’ போடுங்கள். கடலை மாவுக்கு சருமத்தை இறுக்கமாக்கும் தன்மை அதிகம்.




காலையில் எழுந்ததில் இருந்து அரை மணி நேரத்துக்குள் குளிப்பது மட்டுமே சருமத்தின் இறந்த செல்களை நீக்குவதற்கான முறையான வழி. ஏனென்றால், நம் உடலில் இரவு 11 மணியிலிருந்து ஒவ்வொரு உறுப்பாக கழிவு நீக்க வேலையை செய்ய ஆரம்பிக்கும். இதில் கடைசியாக காலையில் கழிவுகளை நீக்குகிற உறுப்பு சருமம். அதனால் கண் விழித்த சிறிது நேரத்துக்குள் குளித்துவிட்டால் இறந்த செல்கள் அத்தனையும் வெளியேறி விடும்.

அழகு, ஆரோக்கியம் இரண்டையும் காலை நேர குளியல் தரும். தவிர, நகச்சூடு அளவுள்ள தண்ணீர் தான் சருமத் துவாரங்களை மென்மையாகத் திறந்து இறந்த செல்களை வெளியேற்றுவதோடு, மறுபடியும் துவாரங்களை மூடவும் செய்யும். அதிகமாக சூடான தண்ணீர் சரும துவாரங்களைத் திறந்து இறந்த செல்களை வெளியேற்றுமே தவிர துவாரங்களை மறுபடியும் மூடாது. இதனால், சருமம் மெல்ல மெல்ல உலர்ந்து, தளர ஆரம்பிக்கும்.

உலர்ந்த மாதுளைத் தோலை பாசிப் பயிறுடன் சேர்த்து அரைத்து, உடம்பில் தேய்த்துக் குளித்தால் சரும பராமரிப்பு மேம்படும். சருமத்தில் அரிப்பு இருந்தால், ஒரு கைப்பிடி வேப்பிலை, துளசியிலை அல்லது ஒரு தேக்கரண்டி துளசிதூள், அரை தேக்கரண்டி கஸ்தூரி மஞ்சள் தூள் ஆகியவற்றை குளிக்கும் நீரில் போட்டு, காலையில் அந்தத் தண்ணீரில் குளித்து விடுங்கள்.

# சிங்கள நாடகக் கலை ஆளுமை "வெதிதந்திரிகே எதிரிவீர சரத்சந்திர"





சரத்சந்திர,1940 தொடங்கிய சிங்கள நாடக மறுமலர்ச்சிக்கான பயணத்தின் ஒவ்வாரு கட்டத்திலும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்" என்று பேராசிரியர் ஹேமபால விஜேவர்த்தன கூறுகிறார். இவர் சிங்கள நாடக உலகிற்கு மகா புருசராகத் திகழ்ந்தார். காட்சிப்படுத்தப்பட்ட பாணியிலான நாடகப் பாரம்பரியத்தை நவீன அரங்கிற்காக மறு உருவாக்கப்பட்டமை அவருடைய நாடகப் பணியின் அதி உச்சப்பலனாகும்.

இவர், 1914.06.03 ஆம் ஆண்டு காலி மாவட்டத்தில் ரத்கம என்ற இடத்தில் பிறந்து 1996.10.16 ஆம் திகதி வரை 82 ஆண்டுகள் வாழ்ந்தார். 1933 ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு சென்று சமஸ்கிருதம், பாளி, சிங்களம் போன்ற பாடங்களை கற்று ஒரு பட்டதாரியாக 1936 ஆம் ஆண்டு வெளியேறினார்.



இவர் பாடசாலைக் கல்வியை ஆங்கிலத்தில் கற்றாலும் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய மொழிகளை கற்றமையால் பல்மொழிப்புலமை மிக்கவராகக் காணப்பட்டார். 1944 இல் இந்திய தத்துவம் முதுகலைமாணிப் பட்டதாரியானார். 1966 – 1967 காலப் பிரிவில் அமெரிக்காவில் டெனிஸன் பல்கலைக்கழகத்தில் அதிதி பேராசிரியராகவும் செயற்பட்டார். 1974 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டிற்கான இலங்கைத் தூதுவராக பணியாற்றினார். 1977 – 1979 வரையிலான காலப்பகுதியில் அமெரிக்காவின் ஹவாய் என்ற இடத்தில் அமைந்துள்ள ஈஸ்ட் வெஸ்ட் ஹென்றற் நிறுவனத்தின் ஒரு பேராசிரியராகக் கடமையாற்றினார்.

இவரது நாடக ஈடுபாட்டுக்கான பின்னணிக் காரணங்களை நோக்குவோமாயின், சிறு வயதில் கலையில் ஆர்வம் மிக்கவராகக் காணப்பட்டார்.

> **அன்றாட சமூகப் பிரச்சினைகள், மனித பேராசை, தலைமுறை முரண்பாடுகள் ஆகியன இவரது நாடகங்களில் பிரதிபலித்தன**

சிறுவயதில் கிராமிய நாடகங்களை பார்ப்பதற்கு தனது சிறிய மாமனாருடன் சென்று பார்க்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தார். இது இப்பிரதேசத்தில் நடைபெறுகின்ற கிராமிய நாடகங்களை பார்ப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கியது.

பௌத்த பிக்குகளின் பீடங்களின் தொடர்பு இவரது நாடகப் படைப்பிற்குக் காரணமாகும். ஊரில் ரணபனாதெனிய விகாரைப் பிக்குவுடன் பழகும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. அவர் பாளி, சிங்கள மொழிப் புத்தகங்களை வாசித்துக் காட்டினார். மேலும் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமய மறுமலர்ச்சிக்கு காரணமாகிய விவாதங்களை சரச்சந்திர பிறந்த கிராமத்தில் வசித்தவர்கள் நடத்தினார்கள். இவற்றையெல்லாம் அவர் பார்த்தார்.

கொழும்பை அண்டிய பிரதேசங்களில் மேடையேற்றப்படும் ஆங்கில நாடகங்கள், நுர்த்தி, ரவர்கோல் நாடக மரபு, ஜெயமான அல்லது மினர்வா நாடகங்களை பார்வையிட்டார். கொழும்பு பல்கலைக் கல்லூரிகளின் நாடகங்களையும் பார்வையிட்டார்.

1950 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இலங்கையின் கிராமியப் பாடல்கள் மற்றும் நாடகங்கள் போன்ற கலை அம்சங்களை ஒலிப்பதிவு செய்யும் குழுவில் இவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. இது உள்ளூர் நாடகக் கலையொன்றின் பயணத்தை மேற்கொள்ள பெரும் உதவியாக இருந்தது.

நாடக ஆர்வம் காரணமாக 1951 ஆம் ஆண்டு 'சிங்கள நாட்ய மண்டலய' என்ற சிங்கள நாடக சபையை ஸ்தாபித்தார். இவரை நினைவு கூரும் முகமாக கலாச்சார திணைக்களத்தின் பூரண தலையீட்டனால் 2015.03.11 ஆம் திகதி 'எதிரிவீர சரச்சந்திர நாடகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகம்' ஒன்று பத்தரமுல்ல கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் 35 நாடகப் பிரதிகள் வரை எமுதியுள்ளார். அன்றாட சமூகப் பிரச்சினைகள், மனித பேராசை தலைமுறை முரண்பாடு இவரது நாடகங்களில் பிரதிபலித்தது.

இலங்கை, இந்தியா,ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் பாரம்பரிய நாடகக் கலையை கீழைத்தேய நாடகக் கலையாக அறிமுகப்படுத்தினார். சீன–ஜப்பான் நாடுகளுடனும் சமஸ்கிருதம், ததருக்கூத்து அரங்கப்பாணிகளுடனும் ஒத்துப்போவதாக "நாடகம" வடிவம் காணப்பட்டது என்று கூறினார். இந்நாடுகளின் நாடகங்களுடன் ஒப்பிடக் கூடிய நாடக வடிவம் எம்மிடம் உள்ளன என்றும் அது தான் 'நாடகம' என்றும் குறிப்பிட்டார்.

இவரது துணைவியார் லலிதா சுவர்ண பெரேரா ஒரு சிறுவர் நாடகத் தயாரிப்பாளர். இவர்களுக்கு பிள்ளைகள் ஐவர். நந்திதா, சுனேத்திரா, கிசகோதமி, யசோதரா, ரன்சி ஆகியோராவர். இதில் சுனேத்திரா பிரபலமான மேடை நாடக, சினிமா, தொலைக்காட்சி நடிகை. இவர் தந்தையின் 'கபுவா கபோதி' என்ற மேடை நாடகத்தின் மூலம் நடிப்புலகிற்கு வந்தார். தயானந்த குணவர்தன, சோமலதா சுபசிங்க, தம்மஜா கொட, ஹென்றி ஜெயசேன, குணசேன கலப்பதி ஆகியோர் இவரது பாணியை பின்பற்றி நாடகங்களைத் தயாரித்தனர்.

**திருமதி சந்திரிகா. தர்மரட்ணம்**
**விரிவுரையாளர் (SLTES)**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**




# மொழியின் வசீகரம்
## தில்லையின் கவிதைகள்

தமிழின் விரிந்த பரப்பில் நவீன கவிதைகளை எழுதி வரும் சில பெண் கவிஞர்களில் கவிஞர் தில்லை வடித்த கவிதைகள் மொழிக் கையாள்கையால் கவனத்துக்குரியதாகின்றது.

கவிஞர் தில்லை, இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மீன் பாடும் தேன் நாடு என்றழைக்கப்படும் மட்டக்களப்பின் படுவான்கரையைச் சேர்ந்தவர். மூன்று தசாப்த காலப் போரின் வடுக்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அதிலிருந்து உயிர் பிழைக்கப் புலம் பெயர்ந்து வாழ்பவர். அதுமட்டுமல்லாமல் இளமைக் காலத்திலிருந்து வாழ்வின் சவால்கள் அனைத்திற்கும் தன்னந்தனியே நின்று எதிர் வினையாற்றி வரும் இரும்புப் பெண்மணி.



இந்தப் பின்புலத்திலிருந்துதான் தில்லையின் கவிதைகள் கருக்கொள்கின்றன. அவரது முதலாவது கவிதைத் தொகுதியான "விடாய்" அவருக்குச் சொந்தமான "தாயதி" பதிப்பகத்தின் முதல் வெளியீடாக வெளி வந்தது.

இரண்டாவது கவிதைத் தொகுப்பு "நிலங்கடந்தவள்" கடந்த மாதம் வெளிவந்தது. அவரது முதல் நாவலான "தாயைத்தின்னி" விரைவில் வெளிவரவுள்ளது. இவ்வாறு தொண்ணூறுகளிலிருந்து வாசிப்பு மற்றும் எழுத்துச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் கவிஞர் தில்லையின் தசாப்தங்கள் தாண்டிய தொடர்ந்தேச்சியான வாசிப்பனுபவத்தின் திரட்சியாக அவரது கவிதை மொழி வாசகர்களை ஈர்க்கும் தன்மையைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்குச் சான்றாக தமிழின் பிரபலமான எழுத்தாளர் சாரு நிவேதிதா தனக்குப்பிடித்த நவீன தமிழ்ப் பெண் எழுத்தாளர் கவிஞர் தில்லை என்று தனது வலைத்தளத்தில் கடந்த மாதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், தில்லையின் கவிதைகள் பெண்ணிலை வாதம் பேசுபவை என்ற ஒரு கருத்தும் நிலவுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இக்கருத்தானது உடன்பட முடியாத ஒரு கருத்தாகும். தில்லையின் கவிதைகளை பெண்ணிலை வாதத்துக்குள் மட்டும் சுருக்குவது அபத்தம். பிரபஞ்சம் தழுவிய மனித நேயத்தின்பால் அக்கறை கொள்பவை தில்லையின் கவிதைகள். அதற்குள் பெண்ணிலைவாதமும் உட்படுவது தவிர்க்க முடியாதது.

மேலும், தற்போது வெளிவந்திருக்கும் "நிலங்கடந்தவள்" கவிதைத் தொகுப்பு மற்றும் வெளிவரவுள்ள "தாயைத்தின்னி" நாவல் என்பன நவீன தமிழிலக்கியச் சூழலில் பெரும் அதிர்வை ஏற்படுத்தும் என கூறமுடியும். வாசிப்பு, எழுத்து என்ற வட்டத்துக்குள் மட்டும் தனது செயற்படு தளத்தைச் சுருக்கிக் கொள்ளாமல் "தாயதி" பதிப்பகத்தை நிறுவி ஈழத்தில் புத்தகம் வெளியிட பொருளாதார வலுவற்ற விளிம்பு நிலை எழுத்தாளர்கள் பலரின் புத்தகங்களை தாயதி பதிப்பகத்தினூடாகப் பதிப்பித்து வெளியிட்டு ஈழத்தில் புத்தகப் பண்பாட்டுப் புரட்சி ஒன்றை துவக்கி வைத்திருக்கிறார் கவிஞர் தில்லை. அந்த வகையில் இதுவரை கிட்டத்தட்ட முப்பது எழுத்தாளர்களின் நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். மேலும், தாயதியை வெறும் பதிப்பகமாக மட்டும் சுருக்கிக் கொள்ளாது சமூக செயலூக்கத்துக்கான முன்னோடி நிறுவனமாகவும் நிறுவி அதனூடாக பல பொருளாதார வலுவிழந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்காகவும் பொருளாதார உதவிகள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

-ஃபஷ்றி

# பல்துறை ஆளுமையை இழுந்ததே காத்தமாநகர்..!




இதயத்தைதாக்கியது சோகச்சுனாமி
காத்தான்குடிபௌஸ் மௌலவி
வபாத்தாம் எனும் துயர்சேதி!
மதிப்பிற்குரிய மௌலவியே
இனிப்புக்குரிய இலக்கியவாதியே
சிறப்புக்குரிய பல்துறை ஆளுமையே
ஊர் சொன்னால் பேர் சொல்வர்!
கிண்ணியாவை எண்ணினாலே கவிவுமீரலி போல
காத்தான்குடியை எண்ணினாலே பௌஸ் மௌலவி
நம்மதிப்புமிகு கவிமணி புஹாரி மௌலவியும்
நற்றமிழில்வுளித்திடுவாரே உங்களுக்காய்கவிவுஞ்சலி
ஊர்விட்டு ஊர்போய் பேரெடுத்தோர் பற்பலர்
தாம்பிறந்தமண்ணுக்கு புகழ்சேர்ந்தோர் பற்பலர்
இவர்களுள் எங்கள் பவ்ஸ் மௌலவியே
நீங்களும் பல்துறையில் வல்லவராய் ஒருவர் ..!
ஆன்மீக பணியிலும் ஆக்கப்பணியிலும்
அதிசிறந்து விளங்கினீர்கள் சாதனையும் புரிந்தீர்கள்
கலாபூஷணமே உங்கள் திருசமயப்பணியும்
கலா எழுத்துப்பணியும் காலமெலாம்வாழும் .. !
பல்துறை ஆளுமையை இழந்ததே காத்தமாநகர்
உங்கள் பேரிழப்பு தந்ததே பெருந்துயர்
உங்கள் பிழைபாவம் தவறுகள் பொறுத்து
எங்கள் இறையே அளித்திடு மன்னிப்பு
இரு கரங்கள் ஏந்தியே பிரார்த்திக்கிறோம் உனையே
மேலான ஜென்னத்துல் பிர்தவ்ஸில் சேர்த்திடு .. !

**ஏ. வாஹிட் ஏ. குத்தூஸ்**
**பதுளை**

# மனித மனங்களின் விகாரங்களை காட்டும் பெரும்படைப்பாளி வைக்கம் முகமது பஷீர்

வைக்கம் முகம்மது பஷீர் (ஜனவரி 19, 1908– ஜூலை 5,1994). மலையாள எழுத்தாளர். நவீன மலையாள எழுத்தாளர்களில் முதன்மையானவராகக் கருதப்படுகிறார். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். நாடோடியாக வாழ்ந்தவர். இஸ்லாமிய சூஃபி மெய்ஞான இயக்கத்தில் ஆர்வம் கொண்டவர். வெளிப்படையான நையாண்டியும், சுயஎள்ளலும் கொண்ட படைப்புகளை எழுதியவர். வைக்கம் முகமது பஷீரின் சாகச வாழ்க்கையும், தன் வரலாற்றுத்தன்மை கொண்ட அவருடைய கதைகளும் அவரை ஒரு பெரும் ஆளுமைச் சித்திரமாக நிறுவியுள்ளன.



கதை ஆசிரியர் எனும் பெயரில் வாழ்க்கையில் ஒவ்வொரு அனுபவங்களையும் ஆசிரியராக நமக்கு ரசிக்கவும், மனித மனங்களின் விகாரங்களை அற்பத்தனங்களை சுயநலத்தின் குரூரங்களை நிகழ்த்திக் காட்டும் பெரும்படைப்பாளி. மனதில் எவ்வளவோ இடிபாடுகளுக்கு இடையேயும் மனிதர்களை சூழ்நிலைகளுடன் நேசிக்க கற்றுத் தருவதில் அவரது பல கதைகள் பங்களிப்பு செய்கின்றன. "பாத்துமாவின் ஆடு" எனும் கதையில் அவரை சுரண்டும் குடும்ப உறவுகள் அதன் நளினங்கள், நாடகங்கள் அனைத்தையும் நகைச்சுவை பிரதியாக நமக்குத் தந்திருப்பார். அவரவர் நியாயங்களுக்கு வாழும் மனித மனங்களை உறவாடியும் தள்ளி நின்றும் சூழ்நிலைகள் உருவாக்கும் இயல்பை உள்ளது உள்ளபடி தோலுரித்துக் காட்டுவது அவரது உணர்வுத் திறன். தங்கை வளர்க்கும் ஆட்டை உருவகமாகக் கொண்டு அந்த ஆட்டின் பசிக்கு காடே பத்தாது! பஷீரின் எழுத்துப் பிரதிகள் வரை அது மேயத் தொடங்குகிறது! அதையும் நகைச்சுவையாக புலப்படுத்தி ஆட்டின் பசியின் மூலம் மனித மனங்களின் அடங்கா பசியை அழகாகக் கூறிச் செல்வார்.

அவரே ஒரு சந்தர்ப்பத்தில்," பசியோடுதான் பல கதைகளை எழுதியிருக்கிறேன்" என்பார். ஆனால், எந்தப் பசியிலும் மனிதர்கள் மீதான அன்பை இழக்காத பசி! அதுதான் பஷீரும் அவரது எழுத்துக்களும். இந்த பசிக்கு நீங்களும் இரையாக.. கொஞ்சம் பஷீரிடம் மனம் கொடுங்கள்!

- **துரை. சண்முகம**

# நூல் வெளியீட்டு விழா




வெலிகம ரிம்ஸா முஹம்மதின் "பிஞ்சு மனம்" சிறுகதை நூல் வெளியீட்டு விழா இன்று (05) ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது. இலக்கிய ஆர்வலர்களை இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவான பூங்காவனம் இலக்கிய வட்டம் அழைப்பு விடுத்துள்ளது.

# ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534



## குறளும் பொருளும்

அதிகாரம் 03: நீத்தார் பெருமை

**குறள் 25** : ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலுங் கரி

**பொருள்** : ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.

**குறள் 26** : செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் செயற்கரிய செய்கலா தார்

**பொருள்** : பெருமை தரும் செயல்களைப் புரிவோரைப் பெரியோர் என்றும், சிறுமையான செயல்களையன்றிப் பெருமைக்குரிய செயல்களைச் செய்யாதவர்களைச் சிறியோர் என்றும் வரையறுத்துவிட முடியும்.



**“ஆயிரம் உபதேசங்களை விட ஓர் அனுபவம் சிறப்பாகப் பாடம் கற்பிக்கும்”**

– ஐங்கர்சொல் (Robert G.Ingersoll)

1833ஆம் ஆண்டு பிறந்த ரொபர்ட் கிரீன் ஐங்கர்சொல், அமெரிக்காவின் பகுத்தறிவு மேதை என அழைக்கப்படுபவர். சிறு வயதிலேயே சிந்தனைத்திறன் மிக்கவராக விளங்கிய இவர், அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட போர் வீரர், அமெரிக்க அரசியல் தலைவர் மற்றும் தலைசிறந்த பேச்சாளர் போன்ற பன்முகங்களுக்கு சொந்தக்காரர். ஆசிரியராக பணியைத் தொடங்கிய ஐங்கர்சொல், பின்னர் சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனார். தனது அறிவாலும், திறமையாலும் மாநில அரசின் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார்.

## குடை






என்.எப்.இஸ்மா.

நான் தான் குடை!
நான் மழை காலத்தில்
மனிதர்களுக்கு
உதவுவேன்!
நான் இரும்புகளால்
செய்யப்பட்டுள்ளேன்!
நான் சிறியவையாகவும்
இருப்பேன்!
என்னைப் போல்
பலவகைக் குடைகள்
உண்டு!

## கூடி வாழ வேண்டும்



கோழிக்குஞ்சு ஒன்று
குப்பை கிளறித் தின்றது
கோழி தூரம் சென்றது
குஞ்சும் தாயைப் பிரிந்தது!

பருந்து வானில் பறந்தது
பறந்து கீழே பாய்ந்தது
விருந்து கிடைத்த மகிழ்ச்சியில்
விரைந்து கௌவிச் சென்றது!
தாயைப் பிரிந்த குஞ்சுமே
தவித்து இரையும் ஆனது
கூடி வாழ மறந்திடல்
சோகம் நேரும் அறிந்துகொள்!

இனாம் இஸ்மத்,
அல்.மஹ்மூத்
வித்தியாலயம்,
மல்வானை.

## மறைந்திருக்கும் உருவைக் கண்டுபிடியுங்கள்





நீரில் வாழும் மீன் இது
நீந்தி மகிழும் மீன் இது
சிறிய பெரிய மீன் இது
செதில் நிறைந்த மீன் இது

துடுப்பு வால் மீன் இது
துள்ளி ஓடும் மீன் இது
பிடிக்க வழுக்கும் மீன் இது
பளபளக்கும் மீன் இது!
தங்க நிற மீன் இது
தூங்க மறந்த மீன் இது
எங்கள் வீட்டில் அன்பாக
அனைவரும் நேசிக்கும் மீன்
இது...!

எம்.ஆர்.ஏ.அய்யாஸ்,
அல்.மஹ்மூத்
வித்தியாலயம், மல்வானை.

## பக்டீரியாக்களின் செயற்பாடுகளைக் காட்டும் அறிவியல் சோதனை



**தேவையான பொருட்கள்**

1. கண்ணாடி போத்தல்
2. பென்சில்
3. நூல்
4. காகித அட்டை
5. 200 கிராம் சீனி
6. தண்ணீர்

**செய்முறை:**

சுத்தமான கண்ணாடி போத்தலொன்றில், முக்கால் பாகத்திற்கு வெந்நீரை ஊற்றி, அதில் 200 கிராம் சீனியைக் கொட்டி நன்கு கரையும்படிக் கலக்குங்கள். இப்பொழுது போத்தலின் முழு பாகத்திற்கும் சீனிப்பாகு இருக்கும்படியாக ஊற்றி வைத்துக் கொள்ளுங்கள்.

போத்தலின் நீளத்திற்கு ஒரு கனமான நூல் ஒன்றைப் பென்சிலின் மையப்பகுதியில் கட்டி போத்தலுக்குள் இறக்குங்கள். போத்தலின் மேலே கனமான அட்டையை வைத்து மூடிவிடுங்கள். இந்த அமைப்பை யாரும் தொடாதபடி எறும்புகள் வராத இடத்தில் மூன்று நாட்களுக்கு வைத்துவிடுங்கள்.

நான்காம் நாள் போத்தலுக்குள் கவனித்துப் பாருங்கள். நீங்கள் கட்டிய நூலில் கல்கண்டுக் கட்டிகள் கட்டி கட்டியாகப் படிந்து ஒட்டிக் கொண்டிருக்கும். அப்படியே பென்சிலோடு வெளியே எடுத்து நிழலில் நன்கு உலரவிடுங்கள். இனிப்பான கல்கண்டு உங்களுக்கு கிடைக்கும்.

**அறிவியல் காரணம்:**

சீனிப் பாகில உள்ள கண்ணுக்குத் தெரியாத ஒருவித பக்டீரியாக்களின் வேலையே அது. இது உடம்பிற்குத் தீங்கு ஏதும் விளைவிக்காத பக்டீரியாக்கள் ஆகும். போத்தலின் கண்ணாடி வழுவழுப்பாக உள்ளதால் நூலின் மேல் இனிப்புச் சுவையைப் பக்டீரியாக்கள் படியச் செய்கின்றன.








ஆர்.ஜனிஷா, தரம் 07,
நுவரெலியா/பொரெஸ்ட் இல.03
தமிழ் வித்தியாலயம்.



எம்.ஆர்.எ.அய்யாஸ்,
மல்வானை.



இனாம்
தரம் 08 - L
அல் மஹ்முத் மகா வித்தியாலயம்
உலகிட்டிவல மல்வானை





ஆர்.மிலோஷிகா,
தரம் 05,
பிரேம்லி தமிழ் வித்தியாலயம்.

## நாயகர்கள் நாட்களிலிருந்து

# அஞ்சா செஞ்சன் நெல்சன்



12 பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் 6ஆவதாகப் பிறந்தவர். தந்தைக்கோ வருமானம் மிகவும் குறைவு. வறுமையின் பிடியில் சிக்கிய குழந்தைகள் எலும்பும் தோலுமாகவே காட்சியளித்தனர். 6ஆவது பிள்ளை மெலிந்த தோற்றத்துடன் காட்சியளித்தாலும் உள்ளத்தில் திடமான உறுதி கொண்டவராக இருந்தார். பயம் என்றால் என்னவென்றே அறியாதவர். எதனையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்கவர்.

ஒரு தடவை, தன் அண்ணனுடன் பாட சாலைக்குப் புறப்பட்டார். அவர்கள் செல்லும் பாதை மிகவும் மோசமாகவே காணப்படும். நல்ல பாதைகளைக் காண்பது அரிது. அத்துடன் அது பனிக்காலம் என்பதால் அதிகமான பனி பெய்து, பாதை பார்ப்பதற்குத் தெரியாமல் பனிப்பாறைகள் சூழ்ந்திருந்தன.

அண்ணனும் தம்பியும் பாடசாலைக்கு கிளம்பியதைக் கவனித்த அப்பா, “பனி இன்று அதிகம் பெய்கிறது. நீங்கள் செல்லும் வழியில் ஆபத்து ஏதேனும் ஏற்படுமென்று தோன்றினால், உடனடியாக வீட்டிற்குத் திரும்பி வந்துவிடுங்கள். துணிந்து செல்வதாக நினைத்து ஆபத்தில் சிக்கிக் கொள்ளக்கூடாது. எனவே, பாதையின் தன்மையைப் பார்த்துச் செயல்படுங்கள்” என்ற அறிவுரையுடன் அவர்களை அனுப்பினார்.

அண்ணனும் தம்பியும் சென்ற வழியானது குறுகலாக, சதுப்பு நிலமாக இருந்தது. இங்கே கால் வைத்தால் அமுந்தி விடுவோம் என்று யாரும் பயப்படும்படியாக பாதை இருந்தது. பாதையைப் பார்த்த அண்ணன் பயந்தார். அங்கேயே நின்றார். ஆனால், தம்பி பயம் என்பதை அறியாதவர். ஆதலால், துணிந்து காலை முன் வைத்தார்.

அண்ணன் தம்பியைப் பார்த்து, “தம்பி ஆபத்து ஏற்படும்போல் தோன்றினால் திரும்பி வந்துவிடுங்கள் என்று அப்பா எச்சரிக்கை செய்து தானே அனுப்பினார். வா வீட்டிற்குச் சென்று விடலாம்” என்றார்.

இதனைக் கேட்ட தம்பி, “அண்ணா ஆபத்து ஏற்படும்போல் தோன்றினால் தானே அப்பா திரும்பி வரச் சொன்னார். எனக்கு ஆபத்து ஏற்படும் என்று தோன்றவில்லை. தாங்கள் வேண்டுமானால் திரும்பி வீட்டிற்குப் போங்கள்” என்றார். சொல்லியதோடு நிற்காமல், ஆபத்துகளைக் கடந்து பாடசாலைக்குச் சென்று மாலையில் வீடு திரும்பினார்.

இப்படி சிறுவயதிலேயே, அஞ்சா நெஞ்சத்துடன் செயற்பட்டவர் தான், பிற்காலத்தில் மாபெரும் வீரன் எனப் போற்றிப் புகழப்பட்ட நெப்போலியனையே தோற்கடித்து, இந்த உலகத்தையே ஆச்சரியப்பட வைத்தவர். அவர் தான் நெல்சன் எனும் மாவீரன். இங்கிலாந்தில் எத்தனையோ வீரர்கள் பிறந்திருக்கிறார்கள். ஆனால், வீரர்களுக்கெல்லாம் வீரர் எனப் போற்றப்படுபவர் நெல்சன் ஒருவர் மட்டுமே.

## புதியது கேட்பின்



# தண்ணீர் அருந்தாத பல்லி?

**பல்லி, தன்வாழ்நாளில் தண்ணீர் அருந்துவதே கிடையாது. அப்படியானால் அது எப்படி உயிர் வாழ்கிறது எனும் கேள்வி எழுகிறது அல்லவா?**

அதற்கு விடை இதுதான். பல்லி நீர்த் தேவையை இரண்டு விதங்களில் பெறுகிறது. ஒன்று பூச்சிகளை உணவுப் பொருளாக விழுங்கும் போது பூச்சிகளில் உள்ள நீரைப் பெறுகிறது. இரண்டாவது, செல்களின் வளர்சிதை மாற்ற நிகழ்ச்சி நடைபெறும்போது உருவாகும் நீரைத் தக்கவைத்துப் பயன்படுத்திக் கொள்கிறது. ஆகவே, பல்லியின் கழிவு நீக்க உறுப்பான சிறுநீரகம் அதிக அளவு நீரை இழப்பதில்லை. இதன் காரணமாக, பல்லியின் சிறுநீர், அமிலத் தன்மை மிக்கதாக இருக்கிறது. இதனால் தான், பல்லியின் சிறுநீர் நம் உடலில் பட்டால், அந்த இடத்தில் புண்ணாகின்றது.

## நிறம் தீட்டுங்கள்





இக்ராம் இஸ்மத்,
மல்வானை.

# ஆரோக்கியத்தைக் கெடுக்கும் குளிர்சாதனப் பெட்டி?




சமைத்த உணவை குளிர்சாதன பெட்டியில் வைக்கும் பழக்கம் தற்போது மக்களிடம் அதிகம் காணப்படுகிறது. சமைத்த உணவு மீதம் இருந்தாலோ, அதிகம் சமைத்தாலோ, அந்த உணவை அப்படியே வைத்து சில நாட்கள் வரை பயன்படுத்துகிறோம். ஆனால், நமக்குத் தெரிவதில்லை, அந்த உணவுகள் குறைந்த வெப்பநிலையில் இருக்கும்போது சீக்கிரம் கெட்டுப் போய்விடும் என்பது.

குளிர்சாதன பெட்டியில் வைக்கும்போது, அதன் மணமும் சுவையும் மாறாமல் இருக்கும். அது கெட்டு போய்விட்டதா என்றுகூட நமக்குத் தெரியாது. ஆகவே, குளிர்சாதனப்பெட்டியில் வைத்து உண்ணும் உணவில் மிகுந்த கவனம் தேவை.

- நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் உருளைக்கிழங்கு, கருணைக்கிழங்கு போன்ற அனைத்து வகையான கிழங்கு வகைகள், இஞ்சி, பூண்டு, வெங்காயம் போன்ற பொருட்களை குளிர்சாதனப் பெட்டியில் வைக்க வேண்டிய அவசியமில்லை. இந்தப் பொருட்களை காற்றோட்டமான உலர்ந்த இடங்களில் வைத்தாலே போதும். குளிர்சாதனப்பெட்டியில் வைக்கும்போது அதன் தன்மையை இழந்துவிடும் அல்லது முளைவிட ஆரம்பிக்கும்.
- நாம் சிறிய பெக்கெட்களில் வாங்கும் மசாலா பொருட்கள், நறுமண பொருட்களில் வண்டு வந்து விடுமோ என நினைத்து அப்படியே குளிர்சாதனப்பெட்டியில் வைத்து விடுவோம். இதன்காரணமாக, அவற்றிலுள்ள வாசனை, குளிர்சாதனப் பெட்டியில் உள்ள மற்ற பொருட்களுக்குப் பரவும். அவற்றின் நுண் ஊட்டச்சத்துக்களும் குறையும். அதனால், நறுமண மற்றும் மசாலா பொருட்களை காற்றுப்புகாத கொள்கலனில் வைப்பதே நல்லது.
- இறைச்சி வகைகளை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கும் போது, அதை இரத்தம் இல்லாமல் சுத்தம் செய்து விட்டு 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்' பாத்திரத்தில் மூடி, 'ஃப்ரீசர்' பகுதியில் வைக்க வேண்டும். இல்லையென்றால் அதில் இருந்து வெளிவரும் சாறுகள் மற்ற உணவு பொருட்களில் படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.
- மேலும், இறைச்சியின் இரத்தத்தை சுத்தம் செய்யாமல் அப்படியே உள்ளே வைத்தால் நுண்ணுயிர் தாக்கத்திற்கு எளிதில் வழிவகுக்கும்.
- தோசை மா பெக்கெட்களில் வாங்கும்போது, ஒரு வாரம் வரைக்கும் பயன்படுத்தலாம் என்று போடப்பட்டிருக்கும். ஆனால், பெக்கெட்டை பிரித்து விட்ட பிறகு 2 நாட்களுக்குள் பயன்படுத்திவிட வேண்டும். நீண்ட நாட்கள் வைத்து பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.
- கீரை வகைகளை உள்ளே வைப்பதற்கு முன்பு, அதை கழுவி ஈரப்பதம் இல்லாமல் உலர்த்தி விட்டு வைக்கலாம். இல்லையென்றால் அது எளிதில் அழுகி விடும். கொத்தமல்லி, புதினா ஆகியவற்றில் வேர், தண்டுப் பகுதிகளை நீக்கிவிட்டு அப்படியே உள்ளே வைக்காமல் காற்றுபுகா கொள்களனில் அடைத்து வைக்க வேண்டும்.
- உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு பொரியல்களை குளிர்சாதன பெட்டியில் வைக்கும்போது அக்கிழங்கின் தன்மை மாறுவதோடு, நுண்ணுயிரிகளின் தாக்கமும் அந்த உணவுகளில் மிக அதிகம் இருக்கும். நுண்ணுயிர்களின் வித்துக்கள் சூடுபடுத்தினாலும் எளிதில் அழியாது. குளிர்சாதன பெட்டியில் நுண்ணுயிரிகள் எந்த அளவில் உள்ளது என்பதும் நமக்குத் தெரியாது. தவிர, அந்த உணவுகளை சரியான வெப்பநிலையில் சூடுபடுத்தி உண்ண வேண்டிய அவசியமும் உள்ளது.

ஒருவன் மருத்துவம்



புரதங்கள் தசை வளர்ச்சிக்கும் உடலின் பராமரிப்பிற்கும் உதவுகின்றன. ஆகவே தசைகள் வலுவாக ஆரோக்கியமாக இருக்க புரதச்சத்து நிறைந்த பருப்பு வகை, சோயா, காளான், முட்டை, இறைச்சி போன்றவற்றை தினமும் எடுத்துக் கொள்ளவேண்டும்.



எலும்புகள், 25 வயது வரை தான் பலம் பெறும். அதன் பிறகு மெல்ல வலுவிழக்க ஆரம்பிக்கும். எனவே, குழந்தைப் பருவத்திலிருந்து 25 வயது வரை சாப்பிடும் சத்தான உணவுகள் தான் எலும்பை உறுதிப்படுத்தும். அதன் பிறகு உண்ணுவதெல்லாம் எலும்புகளின் வலு குறையும் வேகத்தை மட்டுப்படுத்த மட்டுமே உதவும்.



மனநலக் கோளாறு மற்றும் மூளை நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்களின் தினசரி உணவில் தர்பூசணி துண்டுகள் அவசியம். மன அழுத்தம், பயம் போன்ற பாதிப்புகளை தகர்க்கும் விட்டமின் பி-6 தர்பூசணியில் அதிகம்.



புற்றுநோய் செல்களைத் தகர்க்கும் சக்தி திராட்சையின் தோலில் இருக்கிறது. திராட்சை வித்துகளிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்கள், வைரஸ் எதிர்ப்புச் சக்தியை பெரிதும் தூண்டுகின்றன.



கர்ப்பிணிகள், நாவல்பழம் சாப்பிட்டால் வயிற்றில் உள்ள குழந்தை கறுப்பாகப் பிறக்கும் என்பதும், குங்குமப்பூ சாப்பிட்டால் சிவப்பாகப் பிறக்கும் என்பதும் மூட நம்பிக்கையே. தோலின் நிறத்தை நிர்ணயிப்பவை 'மெலனின்' எனப்படும் நிறமிகளே.



சிலர் பிறந்த குழந்தையின் நாக்கில் தேன் போன்றவற்றைத் தடவுகின்றனர். நாள்பட்ட தேனாக இருந்தால் அதிலிருக்கும் ஒரு வகை நச்சுக்கிருமி, குழந்தைக்கு இளம்பிள்ளைவாதத்தைக் கூட ஏற்படுத்தக் கூடும்.

# உடல்நலனை வெளிக்காட்டும் பற்சுகாதாரம்

உடலில் ஏற்படும் அநேக நோய்களுக்கான அறிகுறிகள் வாயில் காணப்படுவதுண்டு. மேலும் வாயிலும் பற்களிலும் ஏற்படும் நோய்களால் உடலில் பல பாகங்களுக்கும் கெடுதல் ஏற்படும். ஆகவே, நலமான வாழ்வுக்கு பற்சுகாதாரமென்பது மிகவும் அத்தியாவசியமாகும்.

சொத்தையாகி கெட்டுப் போன பற்களை பிடுங்காமல் வைத்திருப்பவர்களுக்கு தோல் நோய்கள், மூட்டு, இடுப்பு வலி மற்றும் மூட்டுகளில் வீக்கம், கண்களில் புரை ஏற்படுதல் தொண்டையில் சதை வளர்தல், இளநீர்கட்டு இதய நோய்கள் ஆகியவை ஏற்பட வாய்ப்பு உண்டு.



எனவே, பற்களில் ஏற்படும் சொத்தையை வலி இல்லாத காரணத்தால் எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். பற்களில் ஏற்படும் சொத்தை காரணமாக சிறுவர்களுக்கு பால் பற்களில் வலி உண்டாகுவதற்கு ஒரு வருடம் ஆகலாம். அதுவே பெரியவர்களுக்கு 2 வருடங்கள் ஆகலாம். எனவே பல்லில் சொத்தை ஏற்பட்டால் வலி வரும் முன்னர் பல் மருத்துவரை சந்தித்து சுத்தப்படுத்தி அடைத்துக் கொள்ளலாம்.

பற்களின் பின் பக்கங்களிலோ, இரு பற்களுக்கு நடுவிலோ நோயாளிகளுக்கு நேரடியாகவோ கண்ணாடி மூலமாகவோ பார்க்க இயலாத இடங்களில் சொத்தை வர வாய்ப்பு உள்ளவர்கள் 6 மாதங்களுக்கு ஒரு முறை பல் மருத்துவரை சந்தித்து பற்கள் சொத்தை ஏற்படுகிறதா என சோதித்து கொள்ள வேண்டும்.

மேலும், ஒரு சில பற்களுக்கு வேர் சிகிச்சை செய்தும் சரி செய்து கொள்ளலாம்.



பொதுவாக ஆண்டிற்கு ஒருமுறை பல் பரிசோதனை செய்து கொண்டால் பல் மருத்துவரின் ஆலோசனைப்படி பற்களில் சொத்தை வராமலும், சொத்தை ஏற்பட்ட பற்களை அடைத்தும் பல் ஈறு நோய்கள் வராமலும் தடுத்துக் கொள்ளலாம்.

# வாரம் ஒரு மூலிகை

# இஞ்சி இடுப்பழகு...?

இடுப்பை இஞ்சியுடன் ஒப்பிடுவதுண்டு. இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு பிரபல தமிழ் சினிமா பாடலும் கூட உள்ளது. அப்படி இடுப்புக்கும் இஞ்சிக்கும் என்ன தொடர்பு உள்ளது என்று தெரியுமா? அதன் விளக்கம் இது தான்.

- இஞ்சி நம் உடல் நலம் காக்கும் உன்னத உணவுப் பொருள். இஞ்சிச் சாற்றை, காலையில் தினந்தோறும் பருகிவந்தால் வயிற்றில் உள்ள தேவையில்லாத கொழுப்புச் சதையைக் குறைத்துவிடும். இடுப்பிலுள்ள தேவையற்ற சதைகள் குறையும்போது இடுப்பு அழகாக இருக்கும். தோள்பகுதி அகன்றும் இடுப்புப் பகுதி சுருங்கியும் இருப்பதுதான் உடல் நலத்தின் அடையாளம் உடல் அழகின் அடையாளம். அதை இஞ்சி செய்வதால், இஞ்சி இடுப்பழகு என்றனர்.




- இஞ்சி உண்ணும்போது, அதன் மேல் தோலை நன்கு அகற்றிவிட்டு அதன்பின் அதன் சாற்றையெடுத்துப் பருக வேண்டும். அல்லது தோல் நீக்கிய இஞ்சியை மென்றும் சாப்பிடலாம். பெரியவர்கள் ஒரு நெல்லிக்காய் அளவிற்கும், சிறியவர்கள் அதில் பாதியளவிற்கும் சாப்பிடவேண்டும்.
- இதில் விட்டமின் ஏ, சி, பி6, பி12 மற்றும் கல்சியம், பொட்டாசியம், சோடியம், இரும்புச்சத்து போன்றவை அடங்கியுள்ளன. நீரிழிவு நோயாளிகளின் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்பாட்டுடனும், சீராக வைக்கவும் உதவுகிறது.
- உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரிப்பதில் இஞ்சி மிகவும் சிறந்த உணவுப் பொருள். இஞ்சியை காலையில் சாப்பிட்டால் உடலில் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். பசியுணர்வு அதிகரிக்கும். சிறிது இஞ்சியை அரைத்து, நீரில் கலந்து நெற்றியில் தடவினால், ஒற்றைத் தலைவலி நீங்கும்.
- ஆஸ்துமா நோயாளிகள் தினமும் இஞ்சி சாற்றில் தேன் கலந்து குடித்து வர, ஆஸ்துமா பிரச்சினையில் இருந்து நல்ல நிவாரணம் கிடைக்கும்.
- நீரில் சிறிது இஞ்சியை தட்டிப் போட்டு கொதிக்க வைத்து இறக்கி, எலுமிச்சை சாறு மற்றும் தேன் சேர்த்து கலந்து குடிக்க, நெஞ்சுப் பகுதியில் தேங்கியுள்ள சளி முறிந்து, விரைவில் நிவாரணம் கிடைக்கும்.
- பல்வலி இருக்கும்போது, இஞ்சி துண்டை ஈறுகளில் மசாஜ் செய்தால், நிவாரணம் கிடைக்கும். இல்லாவிட்டால், நீரில் இஞ்சியை தட்டிப் போட்டு கொதிக்க வைத்து, அந்நீரால் வாயைக் கொப்பளிக்க வேண்டும்.

# உள்நாக்கு தொற்றுக்கு வழிகோலும் 'ஏசி' அறை?

"உள்நாக்கை உடற்கூறியல் ரீதியாக 'யுவுலா' (uvula) என அழைப்பார்கள். இது மனிதனாக பிறக்கக்கூடிய அனைவருக்கும் கட்டாயமாக இருக்கக்கூடிய ஒன்று. இதை உணவுக் குழாயின் ஆரம்பப்பகுதி எனவும் சொல்லலாம்.

நமது தொண்டையில் உள்நாக்கு மட்டுமல்ல, இருபுறமும் 'டொன்சில்' எனப்படும் நிணநீர் சுரப்பி இருக்கும். சிலருக்கு 'டொன்சில்' பெரியதாக இருக்கும். சிலருக்கு சிறியதாக இருக்கும். இதன் முக்கிய நோக்கம் அதிகப்படியான எச்சிலை சுரக்க வைத்து தொண்டை மற்றும் உணவு குழாயின் ஆரம்ப பகுதியை ஈரப்பதமாக வைத்துக் கொள்வதுதான்.

பிறர் இருமும் போதும் தும்மும் போதும் அவர்களிடமிருந்து கிருமி மற்றவர்களுக்கு பரவுகிறது. அந்த கிருமியானது தொண்டையில் தங்கி, பல்கி பெருகுவதனால் ஏற்படும் வீக்கம் தான் உள்நாக்கு சதை வளர்ச்சி. இது தொண்டையில் ஏற்படும் தொற்றுகளில் ஒன்று. இது ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு சுலபமாக காற்றின் மூலம் பரவக்கூடியது. உள்நாக்கானது இயல்புக்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது என்றால் தொண்டையில் ஏதோ நோய் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்று புரிந்து கொள்ளலாம். தவிர, அதிக குளிர்ச்சியான நீர் மற்றும் குளிர் பானங்கள் அருந்துவதாலும், ஏ.சி அறையில் இருப்பதாலும், ஏ.சி பேருந்து மற்றும் ரயிலில் பயணிப்பதாலும்கூட உள்நாக்கில் தொற்று ஏற்படலாம்.



வீட்டிலுள்ள பெரியவர்கள், உள்நாக்கு சதை வளர்ச்சி ஏற்பட்டிருந்தால் உப்பு நீரைக்கொண்டு வாய் கொப்பளிக்க சொல்வார்கள். இதைவிட மருத்துவரிடம் சென்று 'அன்டிபயோடிக்' எடுத்துக் கொள்வதும் நல்லது.

உள்நாக்கு சதை வளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னால் சிறிதாக வீக்கம் ஏற்படும். அப்போதே வெந்நீர், பால், தேநீர், கோப்பி போன்றவற்றை சூடாக அருந்தினால் கிருமிகள் இறந்து போவதற்கு வாய்ப்பிருக்கிறது. இதற்கு பிறகும் சரியாகவில்லை என்றால் மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெறவேண்டும். வைரஸ் தொற்றாக இருந்தால் 3 நாட்களில் சரியாகிவிடும். பெக்டீரியாவாக இருந்தால் மருத்துவர் கொடுக்கும் 'அன்டிபயோடிக்' எடுத்தால் சரியாகும்.




# முன்னர் கூறிய விடயங்களை மாற்றிப் பேசிய பொலிஸ் அதிகாரி

## செய்வதறியாது திணறிய குற்றப்புலனாய்வு பிரிவு!!



இந்த வழக்கில் இவர் தான் குற்றவாளி என கூறும் எந்தவிதமான சாட்சியங்களோ, ஆவணங்களோ இல்லாத நிலையில் அடுத்து என்னதான் நடந்தது...?

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, அநுர சேனாநாயக்க மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முதன்முதலில் வாக்குமூலம் அளித்த பொலிஸ் அதிகாரி சுமித்பெரேரா தான் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. ஆனால், அந்த வாக்குமூலத்தை வழங்கிய பொலிஸ் அதிகாரி, வேறொரு நபர் என சில இடங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

மேலும், அந்த இரகசிய சந்திப்பு நடந்ததை வெளிப்படுத்திய நபர், யார் என்ற உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரம் எங்கேயும் இல்லை. அந்த இரகசிய சந்திப்பானது அநுர சேனாநாயக்கவுக்கும் தாஜுதீனின் தகப்பனாருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பென்று பின்னர்தான் தெரியவந்தது.

வசீம் தாஜுதீனின் தகப்பனாரிடம் அநுர சேனாநாயக்க, இதுவொரு படுகொலை அல்ல விபத்து என கூறுமாறு அழுத்தம் கொடுத்தமை குறித்து அந்த நபரின் வாக்குமூலத்தில் இருந்துதான் தெரியவருகின்றது. மேலும், குறித்த வாக்குமூலத்தை வழங்கியவர் நாரஹேன்பிட்டி குற்றப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவராகவும் இருக்கலாம் எனவும் செய்திகள் அந்நாட்களில் வெளியாகியது.

எது எவ்வாறாயினும் 2019ஆம் ஆண்டு நவம்பர் 02ஆம் திகதி ஊடக சந்திப்பொன்று நடைபெற்றிருந்தது. அதாவது, குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரி, பிணையில் விடுதலை யானதை தொடர்ந்து, மிக முக்கியமான அந்த ஊடக சந்திப்பில் அவரும் கலந்து கொண்டார்.





குறித்த ஊடக சந்திப்பு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக அந்நாட்களில் தேர்தலில் களமிறங்கிய சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த (ராஜபக்சர்களுக்கு மிக நெருக்கமான ஒரு நபர்) தலைமையில் இடம்பெற்றிருந்தது.

2020 ஒகஸ்ட் 5 ஆம் திகதி, தேர்தலும் இடம்பெற்றது. சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த , நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, சுமித் பெரேரா மிகவும் முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தி இருந்தார் என்றே கூற வேண்டும். தனக்கு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கடுமையான அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்குமாறு இதன் போது தெரிவிக்கப்பட்டது எனவும் தெரிவித்திருந்தார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இருவரின் பெயர்களை குறிப்பிடுமாறும் ராஜபக்ஷர்களை குற்றம் சாட்டுமாறும் அழுத்தம் கொடுகப்பட்டதாக அவர் கூறிய விடயங்கள் பல ஊடகங்களில் செய்தியாக வெளியாகியது.

அதுமட்டுமல்லாது, தாஜுதீனின் மரணம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருக்கும் போது, சம்பவத்தன்று தாஜுதீன் அன்டர்சன் தொடர்மாடி குடியிருப்பில் இரண்டு நண்பர்களுடன் மதுபானம் அருந்தியிருந்ததாகவும் குறித்த இடத்திலிருந்து கிட்டத்த 8 மதுபான போத்தல்களை மீட்டதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இதனால், அது மதுபோதையில் இடம்பெற்ற விபத்து எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இப்போது குற்றப்புலனாய்வு பணிப்பாளராக இருந்த ஷானி அபேசேகர, என்னை சந்தித்தார். அவருக்கும் எனக்கும் இடையில் இலங்கை மன்றம் பகுதியில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது அவருடைய தனிப்பட்ட காரில் தான் அவரை சந்தித்தேன். அவரும் எனக்கு அழுத்தம் பிரயோகிக்கும் விதமாகவே பல விடயங்களை தெரிவித்தார் என சுமித் பெரேரா குறித்த ஊடக சந்திப்பில் குறிப்பிட்டார். மேலும், கனடாவுக்கு அவரை அனுப்புவதாகவும் கோடிக்கணக்கான பணத்தை பெற்றுத்தருவதாகவும் அவர் கூறியதாகவும் அவர் தெரிவித்திருந்ததாக செய்திகள் வாயிலாக அறியக்கூடியதாக இருந்தது.

**குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரி, பிணையில் விடுதலையானதை தொடர்ந்து, அந்த மிக முக்கியமான ஊடக சந்திப்பில் அவரும் கலந்து கொண்டிருந்தார் ..**

இதனை தொடர்ந்து நாட்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. ஆட்சிமாற்றமும் இடம்பெற்றது. எனினும், ஷானி அபேசேகரவுக்கும் சுமித்பெரேராவுக்கும் இடையில், சந்திப்பு நடந்ததாகவோ அல்லது அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவோ அல்லது ஏதேனும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகவோ எந்தவொரு செய்திகளும் வெளியாகியிருக்கவில்லை.

குறிப்பாக, தொலைபேசி அழைப்புகள் பற்றிய ஆதாரங்களைக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்திருந்தாலே ஏதாவதொரு தகவலை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். ஆனால், அவ்வாறான எந்தவொரு முயற்சியையும் அந்நாட்களில் எடுத்திருக்கவில்லை.

கொலையாளி யார்? என்ற உண்மையை நெருங்கிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அதற்கான விடையை கண்டறிய முழுசோற்றில் பூசணியை மறைப்பது போல் அமைந்தது இவர்களின் கதை! ஏனெனில், ஆரம்பத்தில் வேறொரு கதையை கூறியவர் தற்போது அதனை அப்படியே மாற்றி பேசுவது எந்தவிதத்தில் நியாயமாகும்? இப்படியானவர்களால் தான் இன்றுவரை பல கதைகள் மர்மமாகவே உள்ளது என்பது நிதர்சனமான உண்மை.

தாஜுதின் கொலை வழக்கில் இளம் ஊடகவிலாளர் ஒன்றியத்துக்கு சில தொலைபேசி அழைப்புகள் ஆவணமாக கிடைத்திருந்தது என்றே கூறவேண்டும்.

அதேபோல், இந்த சம்பவம் நடந்த காலப்பகுதியில், ஜனாதிபதி செயலகத்தில் இருந்து முக்கிய பிரமுகர்களுக்கு பல அழைப்புகள் சென்றுள்ளது. அதிலும் குறிப்பாக, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டேனியல் பெரேராவுக்கு 5 தொலைபேசி அழைப்புக்களும், அநுர சேனாநாயக்கவுக்கு 9 தொலைபேசி அழைப்புக்களும், நாமல் ராஜபக்ஷவின் தனிப்பட்ட பாதுகாப்பு காவலருக்கு 7 தொலைபேசி அழைப்புக்களும் சென்றுள்ளன என குற்றப்புலனாய்வு பிரிவினர் பல தகவல்களை கண்டறிந்திருந்தனர்.

(மிகுதி அடுத்த வாரம் )

# அமெரிக்காவின் ‘எச் 1 பி விசா’ சர்ச்சை : ட்ரம்பின் ஆதரவாளர்கள் கருத்து மோதல்!



பாலகணேஷ் டிலுக்ஷா

நீண்டகால அமெரிக்க விசா திட்டமானது அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்பின் ஆதரவாளர்களுக்கு இடையே குடியேற்றம் தொடர்பான கருத்து மோதலாக வெடித்துள்ளமை பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது.

திறன்சார் பணியாளர்களை அமெரிக்காவுக்கு அழைக்கும் மேற்படி விசா திட்டம் அமெரிக்காவில் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, குடியேற்ற விதிகளை கடுமையாக்க வேண்டும் என்று கோரும் குடியரசுக் கட்சியினருக்கும், தொழில்நுட்பத்துறையிலிருந்து டொனால்ட் ட்ரம்பிற்கு ஆலோசகர்களாக செயற்படும் நபர்களுக்கும் இடையேயே இது தொடர்பில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனங்கள் வெளிநாட்டிலிருந்து தொழில் திறன்மிக்க தொழிலாளர்களை சில தொழில்களுக்கு அழைத்து வர எச் 1 பி விசாக்கள் அனுமதிக்கின்றன. இந்தத் திட்டமானது அமெரிக்கத் தொழிலாளர்களுக்கான வாய்ப்புக்களை குறைப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். ஆனால், உலகம் முழுவதிலும் உள்ள சிறந்த நிபுணத்துவம் மிக்கவர்களை ஈர்ப்பதற்கு இத்திட்டத்தினூடாக அமெரிக்கா அனுமதிக்கிறது என இத்திட்டத்தின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் இந்த விடயம் விமர்சிக்கப்பட்ட போதிலும் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட ட்ரம்ப் இந்த திட்டத்தை ஆதரிப்பதாகக் கூறியுள்ளார். இந்த சர்ச்சை சமூக வலைத்தளங்களில் பேசப்பட்டு வரும் நிலையில் டொனால்ட் ட்ரம்ப், நியூயோர்க் போஸ்ட்டுக்கு அளித்த நேர்காணலொன்றில், ”இந்த திட்டத்தை நான் எப்போதும் விரும்பினேன். அதற்கு நான் ஆதரவாகவே இருந்துள்ளேன். அதனால் தான் இந்தத் திட்டத்தை நாம் தற்போதும் செயற்படுத்துகின்றோம்,” என கூறியுள்ளார்.

மேலும் ”என்னுடைய நிறுவனங்களில் எச் 1 பி விசாக்கள் மூலம் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் உள்ளனர். இந்தத் திட்டத்தின் மீது எனக்கு எப்போதுமே நம்பிக்கை இருந்திருக்கிறது இதுவொரு சிறந்த திட்டம்,” எனவும் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் அவருடைய முதல் ஆட்சி காலத்தில் எச் 1 பி விசா விதிகளை கடுமையாக்கியிருந்தார். ஆனால், தற்போது அதனை ஆதரிக்கும் நிலைப்பாட்டை அவர் எடுத்திருப்பதே பெரும் சரச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, தொழில்நுட்ப பில்லியனரும் எக்ஸ் தளம், டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய நிறுவனங்களின் தலைவரும் அரச செயற்றிறன் துறையின் இணை இயக்குனராகவும் பொறுப்பேற்கவுள்ள எலான் மஸ்க் இந்தத் திட்டத்தை ஆதரிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. ஏனெனில், இந்தத் திட்டமானது உலகில் தலைசிறந்த பொறியியலாளர்களில் 0.1% நபர்களை ஈர்க்கிறது என மஸ்க் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதேவேளை, குறைந்த வருமானத்திற்கு பணியாளர்களை நியமித்தல், திறமையானவர்களை பணிக்கு அமர்த்தல் போன்றவை அல்லாமல் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த நபர்களின் வருமானத்தை குறைப்பதற்கான செயல்பாடாகவே இது காணப்படுகின்றது எனவும் விமர்சகர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

### கண்டிக்கத்தக்க முட்டாள்கள்: மஸ்க் விசனம்

ட்ரம்பின் திட்டத்தை எதிர்க்கின்ற அவ்வாறான விமர்சகர்களை குடியரசுக்கட்சியில் உள்ள இனவெறி மற்றும் வெறுப்பு மிக்க நபர்கள் என்றும் இவர்கள் கண்டிக்கத்தக்க முட்டாள்கள் எனவும், இவர்களை கட்சியிலிருந்து நீக்கவில்லை என்றால் குடியரசுக் கட்சி வீழ்ச்சியடையும் எனவும் மஸ்க் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொழில்நுட்ப நிறுவனங்களை நடத்தும் , விவேக் ராமசாமியும் ட்ரம்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் தளத்தில் ”நம்முடைய அமெரிக்க கலாசாரம் சிறந்ததைக் காட்டிலும் சாதாரணவற்றைக் கொண்டாடுகிறது,” என்று குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வரும் நபர்கள் தான் அமெரிக்காவின் பொருளாதாரத்தை முன்னேற்றுகின்றனர் எனவும் அந்த பதிவில் குறிப்பிட்டிருந்தார் ராமசாமி.

அரசின் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக ட்ரம்ப் மற்றும் மஸ்க் ஆகியோரினால் நியமிக்கப்பட்ட ராமசாமியின் இந்தப் பதிவினால் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது.

”நம்முடைய கலாசாரம் கணித ஒலிம்பியாட்டில் பட்டம் வென்றவர்களைக் காட்டிலும் “ப்ரோம்-குயின்களை“ அதிகம் கொண்டாடுகிறது. வகுப்பில் முதல் மதிப்பெண்களைப் பெறும் மாணவர்களை விட தடகளத்தில் விளையாடும் மாணவர்களையே அது அதிகம் கொண்டாடுகிறது. இத்தகைய கலாசாரம் சிறந்த பொறியியல் வல்லுனர்களை உருவாக்காது” எனவும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, ட்ரம்பின் முன்னைய ஆட்சியின் போது ஐநாவுக்கான அமெரிக்க தூதுவராக பணியாற்றிய நிக்கி ஹாலே என்பவர் விவேக் ராமசாமி, மஸ்க் ஆகிய இருவருக்கும் எதிராக குரல் எழுப்பியுள்ளார். அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருப்பதாவது, ”அமெரிக்க பணியாளர்கள் அல்லது அமெரிக்க கலாசாரத்தில் எந்த தவறும் இல்லை, நீங்கள் இப்போது எல்லையை தான் கவனிக்க வேண்டும். நாம் அமெரிக்கர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமே தவிர வெளிநாட்டவர்களுக்கு அல்ல,” என அழுத்தமாக குறிப்பிட்டுள்ளார்.


**அரசின் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக ட்ரம்ப் மற்றும் மஸ்க் ஆகியோரினால் நியமிக்கப்பட்ட ராமசாமியின் எக்ஸ் தள பதிவையடுத்து ‘எச் 1 பி விசா’ விவகாரம் பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது ..**

அத்துடன் செயற்கை நுண்ணறிவுக்கான வெள்ளை மாளிகையின் மூத்த ஆலோசகராக ஸ்ரீராம் கிருஷ்ணன் என்பவரை டொனால்ட் ட்ரம்ப் தேர்வு செய்துள்ள நிலையில் லாரா லூமர் எனும் ட்ரம்பின் ஆதரவாளர் அதனை விமர்சித்துள்மையும் குறிப்பிடத்தக்கது.

”கிருஷ்ணன் ஒரு தீவிர இடதுசாரி. அவர் ட்ரம்பின் “அமெரிக்கா ஃபர்ஸ்ட்“ என்ற கொள்கைக்கு நேர் எதிரான நபர்,” என்று அவரை குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்திய குடியேற்றவாசிகளை ”ஆக்கிரமிப்பாளர்கள்” என்று லாரா லூமர் பதிவு செய்துள்ளார்.

### எச் 1 பி விசாக்கள்

திறன்சார் தொழிலாளர்களுக்கான ஹெச் 1 பி விசாக்கள் 1990 இல் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். அவை பொதுவாக மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும், ஆனால், ஆறு ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம். இருப்பினும், 2004 ஆம் ஆண்டு முதல், வழங்கப்பட்டு வருகின்ற புதிய ஹெச் 1 பி விசாக்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 85,000 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதில் 20,000 அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் முதுகலை பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பல்கலைக்கழகங்கள், சிந்தனைக் குழுக்கள் மற்றும் பிற இலாப நோக்கற்ற ஆராய்ச்சி குழுக்கள் போன்ற சில நிறுவனங்களுக்கு இந்த திட்டம் பொருந்தாது. அமெரிக்காவை தளமாகக் கொண்ட அனுசரணை நிறுவனம் அல்லது நிறுவனத்தில் தொழில் வாய்ப்பு இருந்தால் மாத்திரமே எச் 1 பி விசாவிற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## பட வாய்ப்பு இல்லாமல் ஜோதிடரான இசையமைப்பாளர்!


காதல் திரைப்படத்தின் இசையமைப்பாளர் பட வாய்ப்பு இல்லாததால் ஜோதிடராக மாறியுள்ளேன் என பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். காதல் திரைப்படம் 2004ஆம் ஆண்டில் பாலாஜி சக்திவேலின் இயக்கத்தில் வெளிவந்தது. இத்திரைப்படத்தில் பரத், சந்தியா, சுகுமார் மற்றும் பலர் நடித்திருந்தனர்.



குறைந்த செலவில் எடுக்கப்பட்ட இத்திரைப்படமானது அதிக வசூலையும் அதே சமயம் மிகப்பெரிய அளவில் வரவேற்பையும் பெற்றது.

இந்த படத்தின் மூலம் தான் ஜோஷ்வா ஸ்ரீதர் இசையமைப்பாளராக அறிமுகமானார். காதல் படத்தைத் தொடர்ந்து கல்லூரி, வெப்பம், ஒரு குப்பை கதை போன்ற படங்களுக்கு இசையமைத்தார். அதன் பிறகு திடீரென மாயமானர். தற்போது வரை இவருக்கு பட வாய்ப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் 2 வருடங்கள் ஜோதிடம் சொன்னதாக தற்போது பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்த பேட்டியானது சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

## விரைவில் ‘பிசாசு 2’




மிஷ்கின் இயக்கத்தில் உருவாகியுள்ள ‘பிசாசு 2’ படத்தின் வெளியீடு குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. மிஷ்கின் இயக்கத்தில் உருவான பிசாசு படம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

முதல் பாகத்தின் வெற்றியைத் தொடர்ந்து தற்போது இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகியுள்ளது. இதில் ஆண்ட்ரியா நடித்துள்ளார். விஜய் சேதுபதி, சந்தோஷ் பிரதாப் உள்ளிட்டோர் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே படம் வெளியீட்டுக்கு தயாரான நிலையில், தயாரிப்பு தரப்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக திரைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில் நீண்ட தாமதத்திற்குப் பின் படத்தின் வெளியீடு குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. வரும் மார்ச் மாதம் படம் வெளியாகும் என போஸ்டர் ஒன்றை வெளியிட்டு படக்குழு அறிவித்துள்ளது.

## ஸ்ரீதேவி மகளின் இதயம் தொட்ட தமிழ் படம்

பொலிவுட் சினிமாவில் தனக்கென்று தனி இடத்தை பிடித்து, தற்போது தென்னிந்திய சினிமாவிலும் களமிறங்கியுள்ளார் நடிகை ஜான்வி கபூர். பிரபல தயாரிப்பாளர் போனி கபூர் மற்றும் மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மகளான ஜான்வி கபூர், ஹிந்தி சினிமா மூலம் தனது திரைப்பயணத்தை தொடங்கினார். தற்போது, தென்னிந்திய திரைப்படங்களில் நடிக்க கவனம் செலுத்தி வரும் ஜான்வி கபூர், ஜுனியர் என்.டி.ஆர் நடிப்பில் வெளிவந்த தேவாரா படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். விரைவில் தமிழ் படங்களிலும் அவரை காணலாம் என கூறப்படுகிறது.

இந்நிலையில், சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான அமரன் படம் குறித்து ஜான்வி அவரது ‘இன்ஸ்டா’ பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டுள்ளார்.



அதில், “அமரன் படத்தை தாமதமாகத்தான் பார்த்தேன். ஆனால் இந்த ஆண்டு வெளிவந்த மிக சிறந்த படங்களில் அமரன் திரைப்படமும் ஒன்று. மிகவும் உணர்ச்சிப் பூர்வமாகவும் நெகிழ்ச்சியாகவும் இருந்தது” என்று பதிவிட்டுள்ளார்.

## ‘2கே லவ் ஸ்டோரி’




‘வெண்ணிலா கபடிக்குழு’, ‘நான் மகான் அல்ல’ உள்ளிட்ட வெற்றிப் படங்களை இயக்கிய சுசீந்திரன் இயக்கியுள்ள திரைப்படம் ‘2கே லவ் ஸ்டோரி’ (2k love Story). இப்படத்தில் அறிமுக நாயகன் ஜெயவீர், மீனாட்சி கோவிந்தராஜன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இமான் இப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார். இந்தப் படம் ஜனவரி 10ஆம் திகதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்திருக்கிறது.

# பொங்கல் வெளியீடுகள்...!

## வணங்காண்




சூர்யா நடிப்பில் வெளியாகியிருக்க வேண்டிய திரைப்படம் வணங்கான். தற்போது அருண் விஜய் நடிப்பில் வெளியாகவிருக்கிறது. இயக்குநர் பாலா படம் என்பதால் அவரின் இரசிகர்கள் மத்தியில் இந்தப் படத்திற்கு அதிக எதிர்பார்ப்பு உள்ளது.

## ‘கேம் சேஞ்சர்’




ஷங்கர் இயக்கம், கார்த்திக் சுப்புராஜ் கதை, ராம் சரண் நடிப்பு , தில் ராஜு தயாரிப்பு என இந்தப் பொங்கலில் பிரமாண்ட திரைப்படம் “கேம் சேஞ்சர்” தான். ஐஏஸ் அதிகாரி ஒருவர் சந்திக்கும் சிக்கல்களே இந்தப் படத்தின் சாராம்சம். ராம் சரண் இரண்டு வேடங்களில் நடித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

## மெட்ராஸ்காரன்




SR புரொடக்‌ஷன் சார்பில் ஜகதீஸ் தயாரிப்பில், ‘ரங்கோலி’ பட இயக்குநர் வாலி மோகன் தாஸ் இயக்கத்தில், மலையாள நடிகர் ஷேன் நிகம், கலையரசன், நிஹாரிகா நடிப்பில், புதுமையான அடிதடி டிராமாவாக உருவாகியுள்ள திரைப்படமான ‘மெட்ராஸ்காரன்’, பொங்கலுக்கு வெளியாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ‘டென் ஹவர்ஸ்’




இயக்குநர் இளையராஜா கலியபெருமாள் இயக்கத்தில் நடிகர் சிபி சத்யராஜ் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் ‘டென் ஹவர்ஸ்’. இத்திரைப்படத்தினை டுவின் ஸ்டுடியோ நிறுவனம் தயாரித்திருக்கிறது. ‘க்ரைம் த்ரில்லராக’ உருவாகியுள்ள இத்திரைப்படம் பொங்கல் தினத்தன்று வெளியாகும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

## தருணம்




‘தேஜாவு’ படத்தின் இயக்குநர் அரவிந்த் ஸ்ரீநிவாசன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் ‘தருணம்’. கிஷன் தாஸ் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் கதாநாயகியாக ஸ்மிருதி வெங்கட் நடித்திருக்கிறார்.

தயாரிப்பாளர் புகழ் தயாரிக்கும் இப்படத்திற்கு தர்புகா சிவா இசையமைத்திருக்கிறார். இந்தப் படமும் பொங்கல் அன்று வெளியாகும் என்று முன்பே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதை உறுதி செய்திருக்கிறது படக்குழு.

## ‘படை தலைவன்’




சகாப்தம், மதுரை வீரன் ஆகிய திரைப்படங்களைத் தொடர்ந்து, மறைந்த நடிகரும் தே.மு.தி.க நிறுவனருமான விஜயகாந்த்தின் இரண்டாவது மகன் சண்முக பாண்டியன் நடிப்பில் வெளியாகவிருக்கும் திரைப்படம் ‘படை தலைவன்’.

இயக்குநர் அன்பு இயக்கத்தில் உருவாகியிருக்கும் இத்திரைப்படத்திற்கு இளையராஜா இசையமைத்திருக்கிறார். இப்படமும் பொங்கல் அன்று வெளியாவதாகப் படக்குழு அறிவித்திருக்கிறது.

## காதலிக்க நேரமில்லை




கிருத்திகா உதயநிதி இயக்கத்தில், ஜெயம் ரவி, நித்யா மேனன் நடிப்பில் உருவாகியிருக்கும் திரைப்படம் ‘காதலிக்க நேரமில்லை’. இப்படத்தில் யோகி பாபு, லட்சுமி ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் நடித்திருக்கின்றனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருக்கும் இப்படமும் பொங்கல் தினத்தன்று வெளியாகிறது.

## நேசிப்பாயா




சில ஆண்டுகளுக்குப் பிறகு தமிழில் விஷ்ணு வர்தன் இயக்கியிருக்கும் படம் நேசிப்பாயா. முரளியின் இளைய மகன் ஆகாஷ் முரளி நாயகனாகவும், அதிதி ஷங்கர் நாயகியாகவும் நடிக்கிறார்கள். யுவன் ஷங்கர் ராஜா இந்தப் படத்திற்கு இசையமைத்திருக்கிறார். பெப்ரவரி மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட இத்திரைப்படம், தற்போது முந்திக்கொண்டு பொங்கலுக்கு வெளியாகவுள்ளது.

## தனுஷின் ‘இட்லி கடை’




புத்தாண்டை முன்னிட்டு தனுஷ் இயக்கி, நடிக்கும் ‘இட்லி கடை’ படத்தின் முதல் பார்வை போஸ்டர்களை படக்குழு வெளியிட்டுள்ளது. நடிகர் தனுஷ் நடிப்பில் கடைசியாக வெளியான படம் ராயன். இதனைத் தொடர்ந்து அவரது இயக்கத்தில் உருவாகி வரும் 4வது திரைப்படம் ‘இட்லி கடை’. தனுஷே இயக்கி, நடிக்கும் இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார்.

இத்திரைப்படத்தை ‘டான் பிக்சர்ஸ்’ தயாரிக்கிறது. இதில், நித்யா மேனன், அருண் விஜய், ராஜ்கிரண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். படம் வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

## Eesha Rebba



Face of the week

## SUMO




சிவா, பிரியா ஆனந்த், விடிவி கணேஷ், ஜப்பானிய நடிகர் யோஷினோரி டஷிரோ (Yoshinori Tashiro) நடிப்பில் சில ஆண்டுகளாக கிடப்பில் உள்ள திரைப்படம் சுமோ. இந்தப் படத்தின் ட்ரெய்லர் வெளியாகியே ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்டது. இந்தப் படமும் தற்போது பொங்கலுக்கு வெளியாகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 05ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.